REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுன் 7 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 133 | Wednesday 07, June, 2023 | 16பக்கங்கள் | 50/-

## ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரண்

### உயர் நீதிமன்றின் தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது. எனினும்

06

## சென்னை - இலங்கை சர்வதேச சொகுசு சுற்றுலா கப்பல் சேவை

### மத்திய அமைச்சர் சர்வானந்த ஆரம்பித்து வைத்தார்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது



சென்னையிலிருந்து இலங்கைக்கான சர்வதேச சுற்றுலா கப்பல் போக்குவரத்து சேவையை மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் சென்னையில் திங்களன்று

06

யாழ். மாவட்டத்தில் படையினர் வசமுள்ள

## காணிகளை விடுவிப்பதற்கு தீர்மானம் மிக்க விசேட குழு

### அமைச்சர் டக்ளஸ் – சாகல சந்திப்பில் இணக்கம்



யாழ். மாவட்டத்தில் படையினர் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்முயற்சியில், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும்



06

## கொழும்பை சுற்றிவளைப்போரை இனி பொதுமக்களே விரட்டியடிப்பர்

### இராணுவமோ, பொலிஸாரோ தேவையில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பை நாளைய தினம் சுற்றிவளைக்கப் போவதாக சில தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். அவர்களை விரட்டியடிப்பதற்கு பொலிஸாரோ, இராணுவத்தினரோ அவசி



யமில்லை. பொதுமக்களே அவர்களை விரட்டியடிப்பார்களென முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சிவில் விமான சேவை

06

## ரூ. 35 கோடி பெறுமதியில் 40 அடி கொள்கலன் ஒன்றில்

# சட்டவிரோதமான முறையில் பொருட்கள் இறக்குமதி

### பாவித்த பொருட்கள் எனக்கூறி சுங்க அதிகாரிகளை ஏமாற்றிய நபர்





படங்கள் : சுலோச்சன கமகே

சொகுசு வாகனப் பாகங்கள், வாசனைத்திரவியங்கள், அழகுசாதனப் பொருட்கள், சிகரட், மதுபானம் சுங்க அதிகாரிகளால் மீட்பு

பயன்படுத்தப்பட்ட பொருட்களென சுங்க திணைக்களத்துக்கு அறிவித்துவிட்டு நாட்டுக்குள் கொண்டுவந்த சுமார் 35 கோடி ரூபா பெறுமதியான வாகன உதிரிப் பாகங்கள், சிகரெட், மதுபானம், வாசனை திரவியங்களை சுங்கத்திணைக்களத்தின் வருமான கண்காணிப்பு பிரிவினர் நேற்று கைப்பற்றினர்.

கொழும்பு, ஒறுகொடவத்தையிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் கொள்கலன் கட்டுப்பாட்டுப்பிரிவில் 40 அடி கொள்கலனொன்று நேற்று ஊடகங்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. இதன்போதே இப்பொருட்கள் மீட்கப்பட்டன.

கொண்டு வரப்பட்ட பொருட்களில் சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான Toyota Allion மற்றும் இரண்டு

06



பொசன் தினத்தை முன்னிட்டு லேக்ஹவுஸ் நிறுவனம் நடாத்திய பொசன் கூடு தயாரிக்கும் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இதில், முதலிடம் பெற்ற நாரஹேன்பிட்டி டபிள்யூ. விசால் ஸ்ரீ பினாரா, 5 இலட்சம் ரூபாவுக்கான காசோலையை ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவிடமிருந்து பெறுகிறார். இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



MP பதவியை இரத்தாக்கும் வழக்கு

**டயனா கமகேவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு**

03

## நீதிமன்ற அவமதிப்பை தடுக்க புதிய சட்டமூலம்

### புதிய சட்டமூலத்துக்கு அமைச்சரவை அனுமதி



நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளை அவமதிப்பு செய்வதை தடுக்கும் புதிய சட்டமூலமொன்றுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்த உத்தேச சட்டமூலத்தை வர்த்தமானியில் அறிவிக்கவும், பின்னர் பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம், சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கே அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

மருதங்கேணி பொலிஸில் வாக்குமூலம் வழங்கும் வரை

## கஜேந்திரகுமார் MPக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தற்காலிக தடை

### கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று உத்தரவு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்கு தற்காலிக வெளிநாட்டு பயண தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.



வழக்கு விசாரணையில் நேற்று (06) ஆஜராகததாலேயே, இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தொடர்பிலான வழக்கு நேற்று (06) கிளிநொச்சி மாவட்ட

06



**தோட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் வேண்டும்**

ஜனாதிபதியை தலையிடக் கோரிக்கை

06

## வற்றாப்பளை ஆலயத்தில் மெய்சிலிர்க்க வைத்த நிகழ்வு

### பறவைக் காவடியெடுத்த இரு பெண்கள்



➡ 06



**மலையகம் மீது வெளிநாட்டு தூதுவர்களின் புதிய அக்கறை**

எமது தொடர் முயற்சிக்கு கிடைத்த பலன்

03



மக்களின் நிலைப்பாட்டை அறிய

**சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு SJB கோரிக்கை**

06



**மலையக மேம்பாட்டுக்காக அமெரிக்கா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும்**

அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

07

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

ரூ. 2,345/-
ரூ.100,000க்கு வாடகை*



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான தவணைக கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

- மிகக்குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள்
0117 756 756
www.amanabank.lk

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

Amãna Bank
இது உங்கள் வங்கி

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

## நாட்டில் மீண்டுமொரு நிலநடுக்கம் பதிவானது

### கம்பளையில் 02 ரிச்டர் அளவில் பதிவு



கம்பளை பகுதியில் 02 ரிச்டர் அளவில் சிறிய நிலநடுக்கமொன்று நேற்று முன்தினம் (05) இரவு பதிவானதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் (15) இரவு கதிர்காமம்

06

## இலங்கைக்கு கடத்தவிருந்த 300 கிலோ கஞ்சா பறிமுதல்

### தமிழக முத்துப்பேட்டையில் மூவர் கைது

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

தமிழகத்தின் முத்துப்பேட்டை கடலோர பகுதியில் இலங்கைக்கு கடத்த முயன்ற 300 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது . கடத்தல் முயற்சியில் ஈடுபட்டதாக கூறப்படும் 03 பேரும் கைதாகினர். திருவாரூர் மாவட்டம்



06

## கனரக வாகனத்துடன் வேன் மோதி விபத்து

### இருவர் பலி, திருமலையில் சம்பவம்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை, கண்டி பிரதான வீதியில் கனரக வாகனத்தில் வேனொன்று மோதி விபத்துக்குள்ளானதில்

06



91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்





ஹோமாகம பிடிபன பொசன் வலையத்தில் நடைபெற்ற பொசன் வெளிச்சக்கூடு கண்காட்சியில் வெற்றிபெற் றோர்களுக்கு அமைச்சர் பந்துல குணவர்தன பரிசு வழங்குவதை படத்தில் காணலாம். (படங்கள் – நிஷ்ஷங்க விஜேரத்ன, ரன்ஜித் அசங்க)

## மிஹிந்தலை விஹாராதிபதியிடம் கப்பம் கோரி அச்சுறுத்திய நபர் கைது செய்ய பொலிஸ் குழு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதி வலவா ஹெங்குனவெவ தம்மரத்ன தேரரிடம் ஒரு கோடி ரூபா பணத்தினை கப்பமாக கோரி தேரரை அச்சுறுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்காக வேண்டி அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையம் இரு பொலிஸ் குழுக்கள் அமைத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

விஹாராதிபதிக்கு கடந்த முதலாம் திகதியன்று வட்சப் மூலம் அழைப்பொன்றினை ஏற்படுத்தி தங்களுடைய வீடியோ காணொளி மற்றும் உரை அடங்கிய தகவல்களை முக நூலில் பதிவு செய்வதை தவிர்ப்பதற்காக வேண்டி ஒரு கோடி ரூபா பணம் வேண்டுமென அச்சுறுத்தியதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் மிஹிந்தலை விஹாராதிபதி தாக்கல் செய்த முறைப்பாட்டினை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அநுராதபுரம் நகரில் ஹோட்டல் ஒன்றினை நடாத்திச் செல்லும் ஹோட்டல் உரிமையாளர் மற்றும் பெண் ஒருவர் தொடர்பிலும் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## நாட்டில் சட்டங்கள் இருப்பது மக்களை நல்வழிப்படுத்தவே

### வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்

(புத்தளம் தினகரன் நிருபர்)

நாட்டில் சட்டங்கள் இருப்பதானது மக்களை அடித்து ஒடுக்குவதற்காக அல்ல. மாறாக மக்களை நல்வழிப்படுத்தி சரியான வழியில் செயற்படுத்தவே சட்டங்கள் உள்ளன. அதனால் தவறுகள் செய்வோரை ஏன் தவறுகளை செய்கின்றனர் என்பதை கண்டறிந்து நாம் அவர்களை நல்வழிபடுத்த வேண்டும். இதனை பொலிஸாராகிய எங்களுக்கு மட்டும் தனித்து செய்ய முடியாது.

ஆகவே பௌத்த நிலையங்கள், கோவில்கள், கத்தோலிக்க ஆலயங்கள், பள்ளிவாசல்கள் இவை அனைத்தும் இதனை வெற்றிபெறச் செய்வதற்கு மிகவும் முக்கியமாகுமென வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக்க டி சில்வா தெரிவித்தார்.



புத்தளம் ஐக்கிய வர்த்தக நலன்புரிச் சங்கம் (புட்வா) அலுவலகத்துக்கு விஜயம் (03) செய்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், அதன் நிறைவேற்றுச் சபையுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு வர்த்தக சங்கத் தலைவர் வை.எம். நிஸ்தாத், செயலாளர் இஹ்ஸாஸ் இல்யாஸ், பொருளாளர் எம்.ஏ.எம். ரியாஸ் உட்பட நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்களும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எஸ். கே. ரூபசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.பீ.கே.வைத்யதிலக, புத்தளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குலதுங்க உட்பட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த நாலக டி சில்வா, நாங்கள் பணியாற்றுவது மக்களுக்காக. பொது மக்களின் பணத்தில் தான் நாங்கள் தங்கியிருக்கின்றோம். இந்த சீருடையைக் கூட எங்களுக்கு வழங்குவது மக்கள் தான். ஆகவே அவர்களைப் பாதுகாக்க, அவர்களை சட்டத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்த நாம் தெரிந்திருக்க வேண்டும்.

அதிகமான மனிதர்கள் உங்களிடம்தான் வருகின்றார்கள். நீங்கள் தான் மனிதர்களின் நடத்தைகளைக் காண்பவர்கள். இந்த நகரில் திருட்டு, குற்றங்களை இல்லாமலாக்க முடியுமாகுவது உங்கள் ஒத்துழைப்பினாலாகும். நாங்கள் அதற்கான பாதுகாப்பை வழங்குவோம். சந்தேகத்துக்குரியவர்களைக் கண்டால் எங்களுக்கு தெரிவித்தால் நாங்கள் உடனடியாக அதுவிடயமாக கவனம் எடுப்போம்.

புத்தளம் நகரம் அழகாக சுத்தமாக இருக்க வேண்டும். புத்தளம் நகரத்தின் பாதுகாப்பு, போதை வஸ்துக்கள், குற்றச் செயல்கள், திருட்டை இல்லாமலாக்குதல், நகரத்தை அழகுபடுத்தல் போன்ற பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

## பாகிஸ்தானில் உயர்கல்வி பெற தேர்வுப்பரீட்சை





பாகிஸ்தான் உயர்கல்வி ஆணையம், அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டத்திற்கான தேர்வுப் பரீட்சையினை கடந்த மே மாதம் 29ம் திகதி முதல் ஜூன் 4 வரை இலங்கையில் நடத்தியது. புத்தளம், மட்டக்களப்பு, கண்டி, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாடளாவிய ரீதியில் இருந்து மாணவர்கள் இத்தேர்வில் கலந்துகொண்டனர். பல்வேறு இனங்களை சேர்ந்த மாணவர்கள் தேர்வில் பங்கேற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். இத்தேர்வின் முடிவுகள் ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்படும்.

மேலும், தெரிவு செய்யப்பட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உயர் கல்வி ஆணையத்தின் தலைவரினால் வழங்கப்படும். பாடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்து, கல்வி நடவடிக்கைகள் இவ்வருட ஒக்டோபர் முதல் ஆரம்பிக்கப்படும்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

## களுத்துறை மாவட்டத்தில் கனமழை; பல பகுதிகள் நீரில் மூழ்கின

களுத்துறை சுழற்சி நிருபர்

களுத்துறை மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மாவட்டத்தின் பல தாழ் நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கின. ஐந்து செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில வீதிகளில் வெள்ளம் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக புளத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மோல்க்காவ, இஹல வெல்கம கல்லுமலை வீதி, லத்பந்துர வீதி, பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதுரெலிய கலவான வீதி, அகலவத்தை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குடலிகம வீதி, வலலாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அவித்தாவ வீதி, மதுராவல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகல்ல கலனவான உள்ளிட்ட வீதிகள் நீரில் மூழ்கி போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரி அரவிந்த் அமரசேகர தெரிவித்தார்.

### O/L பரீட்சை மாணவர்களுக்கு கடற்படை உதவி





தற்போது க.பொ.த சா/த பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருப்பதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கூட எவ்வித தடங்களுமின்றி தமது பரீட்சை நிலையங்களுக்கு கடற்படை, தனியார் படகுகள் மூலம் வெள்ளத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும் வெள்ளப்பகுதிகளில் எவ்வித தடங்களுமின்றி அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவியுடன் சேவைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய விஜயம் பெருவெற்றி ; நேபாள பிரதமர் மகிழ்ச்சி

புதுடில்லிக்கு தாம் மேற்கொண்ட நான்கு நாள் பயணம் பெரு வெற்றியாக அமைந்துள்ளது என நேபாள பிரதமர் புஷ்ப கமல் பிரசண்டா, காத்மண்டு திரிபுவன் விமான நிலையத்தில் வந்திறங்கி ஊடகங்களுடன் பேசியபோது மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அடுத்த 10 வருட காலப்பகுதியில் இந்தியாவுக்கு பத்தாயிரம் மெகாவொட்ஸ் மின்சாரத்தை விற்பனை செய்ய வேண்டும் என்ற நேபாளத்தின் எதிர்பார்ப்பு இப் பயணத்தில் நிறைவேறி இருப்பதாக கூறிய அவர், பிரதமர் மோடியே இதைத் தெரிவித்தாகவும் மின்சாரத்தை பகிர்ந்து கொள்ளும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

கடந்த மே 31ம் திகதி தன் குழுவினருடன் இந்திய விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் பிரசண்டா, இப் பயணத்தின் பின்னர் இரு தரப்பு உறவுகள் மேலும் நெருக்கமடைந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

நேபாளத்தில் இந்தியா பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கட்டமைப்பு வசதிகள், சுகாதாரம், நீர்வளம், கல்வி, கிராம சமூக வளர்ச்சி என்பனவற்றில் இந்தியா ஈடுபட்டிருந்தாலும் நேபாளத்தில் நீர்மின்சாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இந்தியாவுக்கு மின்சாரத்தை பெற்றுக் கொள்வதை அந்நாடு முதன்மையாகக் கருதுகிறது. இவ்வகையில் இரு நாடுகளும் மின் உற்பத்தியில் கூட்டாக ஈடுபட்டுள்ளன.

## சீனன்கோட்டை மு.கா முக்கியஸ்தர் தாஜுத்தீன் அனஸ் காலமானார்

### மு.கா தலைவர் ஹக்கீம், அஸ்லம் அனுதாபம்



பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த பேருவளை நகர சபை (ஸ்ரீல.மு.கா) முன்னாள் உறுப்பினர் தாஜுத்தீன் அனஸ் நேற்று (06) மாலை காலமானார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அன்னார், பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக நீண்டகாலம் பணியாற்றியதோடு இன்னும் பிரதேச சமூக சேவை அமைப்புகளில் தன்னை ஈடுபடுத்தி தான்சார்ந்த சமூகத்திற்கு சேவையாற்றினார்.

அன்னாரின் ஜனாஸா இன்று சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்படும். அன்னாரின் மறைவு குறித்து மு.கா தலைவர் றவூப் ஹக்கீம் அனுதாபச்செய்தியொன்றை வெளியிட்டுள்ளார். அச்செய்தியில்; சகோ. தாஜுத்தீன் அனஸ் எமது கட்சியின் மூத்த போராளிகளுள் ஒருவர். பேருவளை தொகுதியில் மு.காவின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டதை நான் இச் சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவுகூருகிறேன். அன்னாரின் சகல நற்கருமங்களையும் வல்ல நாயன் கபூல் செய்ய பிரார்த்திப்பதாகவும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார். அன்னாரின் மறைவு குறித்து முன்னாள் எம்.பி. எம்.எஸ்.எம். அஸ்லம், முன்னாள் நகர சபை உறுப்பினர் சியாம் முனவ்வர் ஆகியோரும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

## தினகரன் ஹஜ்ஜுப் பெருநாள் விளையாட்டுப் போட்டிகள்

### பேருவளை மாளிகாஹேன விளையாட்டு மைதானத்தில்



தினகரனின் 91 ஆவது ஆண்டை முன்னிட்டு பேருவளை மாளிகாஹேன விளையாட்டு மைதானத்தில் 'இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்' என்ற தொனிப்பொருளில் சிறுவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹஜ்ஜுப் பெருநாள் விளையாட்டுப் போட்டிகள் தினகரன்,வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் ஹஜ்ஜுப் பெருநாளை தொடர்ந்து அதை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான தேசமான்ய பாஸி ஸூபைர் தெரிவித்துள்ளார்.

இப்பெருநாள் விழாவுக்கு பூரண அனுசரணையை Hameed Gypsum Moulding, Hameed Gypsum Civilim(PVT)Ltd நிறுவனம் வழங்குவது குறிப்பிடத்தக்கது. சிறுவர்களுக்கான பலூன் ஊதுதல், ஊசிக்கு நூல் கோர்த்தல், யானைக்கு கண் வைத்தல், சங்கீத கதிரை, புத்தக பெலன்ஸ் ரேஸ், பானை உடைத்தல், பனிஸ் சாப்பிடுதல், நீர் நிறைத்தல், அரிசி மணி எண்ணுதல், தேசிக்காய் பெலன்ஸ் ரேஸ், நடை ஓட்டம், புத்தகம் வாசித்தல், இஸ்லாமிய கீத பாடல்கள், கவிதை பாடுதல், இன்றைய சிறுவர் சமூகத்தை சித்தரிக்கும் வகையில் மேடை நாடகம் போன்ற விளையாட்டு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் பாஸி ஸூபைரை தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம். 077 081 2420.

### தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

சட்டத்தரணி தினேஷ் தலைமையில் இன்று (07) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "வாடகைக் கொள்வனவும் அது தொடர்பான சட்டங்களும் " எனும் தலைப்பில் சட்டத்தரணி றொஷானி செந்தில்செல்வன் உரை நிகழ்த்தவுள்ளார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூன் 7 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.31
லுஹர் - 12.11
அஸர் - 03.38
மஃரிப் - 06.25
இஷா - 07.42

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் வைகாசி 24
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# க.பொ.த சாதாரண தர பரீட்சை: மூன்று மண்டபங்களில் மோசடி

**கையடக்க தொலைபேசி பயன்பாடு**

பிபிலை, வெல்லவ தேசிய பாடசாலையில் பரீட்சார்த்தி ஒருவர் தனது கைத்தொலைபேசியை பயன்படுத்தி ஆசிரியர் ஒருவரிடம் கணித பாட வினா பத்திரத்தை whatsapp மூலம் அனுப்பி விடைகளைப் பெற்றுள்ளார். இம்மோசடியை பரீட்சை மண்டப பொறுப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் கண்டுபிடித்துள்ளனர்.

இரண்டாவது மோசடி, ஹேனேகம மகா வித்தியாலய பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட்சார்த்திகள் இருவர் கைத்தொலைபேசியை பயன்படுத்தி கணித பாட வினா பத்திரத்தை வெவ்வேறு ஆசிரியர்களுக்கு அனுப்பி விடைகளை பெற்றுக் கொள்ள முற்பட்ட போது மேற்பார்வையாளரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

மூன்றாவதாக சீதுவ வித்தியாலயா பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் ஐவர் சமூக ஊடகத்தை பயன்படுத்தி கணித வினா பத்திரத்தை ஆசிரியர்களிடம் அனுப்பி விடைகளை பெற்றுக் கொண்ட சம்பவம் ஒன்றும் தெரிய வந்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று சம்பவங்கள் தொடர்பாக பரீட்சைகள் சட்டம் மற்றும் குற்றங்கள் சட்டத்தின் கீழ் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிவிப்பு செய்துள்ளார்.

# நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவின் ஆணை நீடிப்பு

உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜுலை முதலாம் வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச்செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ்நகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரடங்கிய ஆணைக்குழு கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

அந்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவுக்குவந்த நிலையில், அதன் இறுதி அறிக்கை டிசம்பர் மாதம் சமர்ப்பிக்கப் படுமென எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் அந்த ஆணைக்குழுவுக்கான ஆணை இவ்வாண்டு ஜனவரி 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, பின்னர் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து கடந்த மேமாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருந்தது.

தற்போது ஜனாதிபதியினால் அந்த ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை எதிர்வரும் ஜுலை மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை முழுமையாகத் தயார் செய்யப்பட்டிருப்பதாக அறியமுடிவதுடன் அது இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருந்த போதிலும், தவிர்க்க முடியாத சில காரணங்களின் விளைவாக அவ்வறிக்கை ஜுலை மாத முதல் வாரத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## கப்பல் விபத்துக்கள்:

# உண்மைகளை ஆராய்ந்து பரிந்துரைக்க விசேட குழு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எக்ஸ்பிரஸ் பேர்ள் மற்றும் டயமண்ட் கப்பல்கள் விபத்துக்குள்ளானமை தொடர்பில் உண்மைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று செவ்வாய்க்கிழமை (06) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இக் குழுவின் தலைவராக அமைச்சர் ரமேஷ் பத்திரன செயற்படுவார். சுரேன் ராகவன், டயானா கமகே, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத், சரத் வீரசேக்கர, நிரோஷன் பெரேரா, அஜித் மான்னப்பெரும, நிமல் லான்சா, துஷார இந்துனில், காவிந்த ஜயவர்த்தன, அகிலா எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, மதுர விதானகே ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

## MP பதவியை இரத்தாக்கும் வழக்கு

# டயனா கமகேவுக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

**ஜுலை 25 இல் தீர்ப்பு அறிவிப்பு**



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை, எதிர்வரும் ஜுலை (25) வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு மீதான தீர்ப்பை அறிவிப்பதற்காக நேற்று (06) இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ.மரிக்கார் ஆகியோர் தீர்ப்பை ஜுலை (25) வரை ஒத்திவைப்பதாக அறிவித்தனர். இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, பிரிட்டன் பிரஜை என்பதால் இலங்கை பாராளுமன்றத்தில் அமர அவர் தகுதியற்றவரென தீர்ப்பளிக்குமாறு கோரி, சமூக ஆர்வலர் ஓசல ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

# மலையகம் மீது வெளிநாட்டு தூதுவர்கள் புதிய அக்கறை

**எமது தொடர் முயற்சிக்கு கிடைத்த பலன்**



இலங்கை இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பான போதிய தெளிவு தற்போது சர்வதேச சமூகத்துக்கு ஏற்பட்டு வருவதாக, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான், பிரான்ஸ், ஆஸ்திரேலியா நாடுகளின் தூதுவர்களுடனும், அந் நாடுகளிலிருந்து இலங்கை வந்து போகும் ஐநா, உலக வங்கி உட்பட பன்னாட்டு

06

**செலான் வங்கி பீ.எல்.சீ.**

(2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 ன் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04 ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ. இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990 ஆம் ஆண்டின் 4 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ம் பிரிவின் கீழ் 2023/03/28ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

கிளை : ரண்பொக்குணுகம

கணக்கு இலக்கம் : 1280-30542162-001

(2007 ம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம்: P.Q.9 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர். ஜானக்க வெல்லப்பிலி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 மே 22ம் திகதியிடப்பட்ட 1280ம் இலக்க பிணைமுறி, பிரசித்த நொத்தாரிசு கே.டி.ரீ.கே. கழுஆரச்சி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 ஏப்ரல் 19ம் திகதியிடப்பட்ட 1718ம் இலக்க பிணைமுறி ஆகிய பிணைமுறிகளின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகு வைத்தவரான" பஸ்யாலையைச் சேர்ந்த லொக்கு எதிரிசிங்ஹ ஆரச்சிகே நிலந்த எதிரிசிங்ஹ என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறிகளின் மீது பெறப்பட்ட தவணைக் கடன் ஐ வசதிக்காக 2023 ஜனவரி 20ம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக அறுபத்து மூன்று மில்லியன் ஐந்நூற்று இருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா தொண்ணூற்று நான்கு சதத் (ரூ.63,529,394.94) தொகையை மற்றும் 2023 ஜனவரி 21ம் திகதி தொடக்கம் ஐம்பத்தேழு மில்லியன் எழுபத்து மூன்றாயிரம் ரூபா (ரூ.57,073,000.00) தொகை மீது பதினான்கு வீத (14%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து (சலுகைக் கால வசதி தவிர்த்து) செலான் வங்கி பீ.எல்.சீ க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான அறுபத்து மூன்று மில்லியன் ஐந்நூற்று இருபத்தொன்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபா தொண்ணூற்று நான்கு சதத் (ரூ.63,529,394.94) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2023 ஜனவரி 21ம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும், மற்றும் மேற்படி சட்டத்தின் 13 ம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீ யிடம் மேற்படி 1280 மற்றும் 1718 ம் இலக்க பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவு பெற்ற ஏலதாரர் திருமதி சந்திமா கமகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ இன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04 ம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் அத்தனகல்ல காணி பதிவாளர் பிரிவில் உடுகஹ பத்துவின் சியானே கோரளையின் அத்தனகல்ல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கலல்பிட்டிய இல. 343 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கலல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "வந்துராபொல வத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான டபிள்யூ.ஏ. யாப்பா என்பவரால் 2014 மே 18ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4851ம் இலக்க நில வரைபடத்தின் லொட் A என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள் பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடகிழக்கு: 2233ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 3 மற்றும் 40 தென்கிழக்கு: லொட் B யின் ஒரு பகுதி தென்மேற்கு 4282ம் இலக்க நில வரைபடத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள இதே காணியின் எஞ்சிய பகுதி வடமேற்கு : பிரதான வீதி ஆகிய எல்லைகளைக் கொண்ட காணியின் பரப்பளவானது முப்பத்தொன்று புள்ளி மூன்று பூச்சியம் பேர்ச் (ஏ.0-றூ.0-பே.31.30) ஆகும்.

வரியுரித்து :

மேற்குறித்த கலல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "வந்துராபொல வத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பீ.ஆர். பத்திராஜ என்பவரால் 1997 செப்டம்பர் 16ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2233ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 42 என பிரித்தொதுக்கப்பட்ட பாதையாக பயன்படுத்தப்படும் காணித் துண்டு ஆகும். அதன் எல்லைகளாவன: வடகிழக்கு: லொட் 13 மற்றும் 40 தென்கிழக்கு: லொட் 43, 45 மற்றும் 46 தொடக்கம் 50 வரை தென்மேற்கு லொட் 41 வடமேற்கு :லொட் 55 மற்றும் 33 தொடக்கம் 40 வரை ஆகிய எல்லைகளைக் கொண்ட காணியின் பரப்பளவானது இருபத்தைந்து பேர்ச் (ஏ.0-றூ.0-பே.25) ஆகும்.

மேற்குறித்த கலல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "வந்துராபொல வத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.பீ.ஆர். பத்திராஜ என்பவரால் 1997 செப்டம்பர் 16ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2233ம் இலக்க நில வரைபடத்தின் லொட் 13 என பிரித்தொதுக்கப்பட்ட பாதையாக பயன்படுத்தப்படும் காணித் துண்டு ஆகும். அதன் எல்லைகளாவன: வடகிழக்கு: லொட் 14,8,32,51,52,66,80,81,87,98,99,109,123,138 மற்றும் 139 தென்கிழக்கு: லொட் 96A,97,110,117,122,124,137,140 மற்றும் 149 தென்மேற்கு லொட் 8,12,33,42,50,67,76,79,88 மற்றும் 97 வடமேற்கு :கண்டி வீதி ஆகிய எல்லைகளைக் கொண்ட காணியின் பரப்பளவானது மூன்று றூட் மற்றும் முப்பத்தொன்று புள்ளி ஏழு பேர்ச் (ஏ.0-றூ.3-பே.31.7) ஆகும்.

அத்தோடு உத்தரவு பெற்ற நில அளவையாளரான டபிள்யூ.ஏ.யாப்பா என்பவரால் 2014 மே 18ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4851ம் இலக்க நில வரைபடத்தின் லொட் B என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டின் மீதான வழியுரித்துடன் சேர்த்து ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ.ஏ.ஆர்.ஜானக்க வெல்லப்பிலி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 மே 22ம் திகதியிடப்பட்ட 1280ம் இலக்க ஆரம்ப பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் அத்தனகல்ல பதிவாளர் பிரிவில் சியானே கோரளையின் உடுகஹ பத்துவின் அத்தனகல்ல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லையில் கலல்பிட்டிய இல 343 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கலல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள "வந்துராபொல வத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எம்.ஆர்.ஏ.என்.டி. ரத்னபால என்பவரால் 2012 டிசம்பர் 09ம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 260/F எனும் இலக்க நில வரைபடத்தின் லொட் 44 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள் பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: 2233ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 45 கிழக்கு: 2233ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 71 தெற்கு திரு. ஒபேசேகர என்பவரால் உரிமை கோரப்படும் இதே காணியின் எஞ்சிய பகுதி (4282ம் இலக்க நில வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணியின் எஞ்சிய பகுதி) மேற்கு : 2233ம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 43 ஆகிய எல்லைகளைக் கொண்ட காணியின் பரப்பளவானது பன்னிரண்டு பேர்ச் (ஏ.0-றூ.0- பே.12) ஆகும்.

குறித்த 260/F எனும் இலக்க நில வரைபடத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள 2233ம் இலக்க நிலவரைபடத்தின் (20 அடி அகலமான பாதை) லொட் 5,42,13 மற்றும் 45 ஆகியவற்றின் மீதான வழியுரித்துடன் சேர்த்து ஆகும்.

இந்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு கே.டி.ரீ.கே. கழுஆரச்சி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 ஏப்ரல் 19ம் திகதியிடப்பட்ட 1718ம் இலக்க பிணைமுறியின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ. பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

**எதிர்வரும் 16இல், 7,500 புதிய ஆசிரியர்கள் நியமனம்**

# இரு மடங்கு ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் ஓய்வு பெற்றதாலேயே பற்றாக்குறை ஏற்பட்டது

**லோரன்ஸ் செல்வநாயகம்)**



வழமையை விட, கடந்த வருடத்தில் இரண்டு மடங்கு ஆசிரியர்கள் ஓய்வு பெற்று சென்றுள்ளமையே ஆசிரியர் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வழமையாக வருடந்தோறும் 5,000 அல்லது 6,000 ஆசிரியர்களே ஓய்வு பெற்று செல்வதுண்டு. ஆனால் கடந்த வருடம் அது இரண்டு மடங்காகியுள்ளது. இதனாலேயே, ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனை நிவர்த்திக்க கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறியுள்ள 7,500 பேருக்கு எதிர்வரும் (16) ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்கள், தேசிய பாடசாலை மற்றும் மாகாண மட்ட பாடசாலைகளில் பணி புரிவர். இதற்கு மேலதிகமாக, 26,000 பட்டதாரிகளை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரியிருந்தோம்.

எனினும், இது தொடர்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டதால் , தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்ததும் பரீட்சைகள் நடத்தப்பட்டு இவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அதனைத் தவிர மேலும் 06 ஆயிரம் பட்டதாரிகளை குறிப்பிட்ட பாடங்களுக்காக தேசிய மற்றும் மாகாண மட்ட பாடசாலைகளில் நியமிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேவேளை, மேற்படி 26,000 பேரை நியமிக்கும் செயற்பாடுகளில் அரச சேவையில் உதவியாளர்களாக பணியாற்றியவர்களும் விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் இதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களும் பரீட்சை எழுதி ஆசிரியர் நியமனத்திற்குள் இணைந்து கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# சினிமா, திரைப்படத்துறைக்கென சுயாதீன ஒழுங்குபடுத்தல் நிறுவனம்



சினிமா மற்றும் தொலைக்காட்சி கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக சுயாதீன ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவையில் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். திரைப்பட ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்காக

06

**இலங்கை வங்கி**

**மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை**

கீழே குறப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்)

| இலங்கை வங்கி | நகைகளை அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏலவிற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| **மஹியங்கணை வலயம்**<br>பதுளை மேற்தரக்கிளை<br>ஆன்தாவுல்பொத்த<br>பதுளை நகரம்<br>பிபில<br>கிராந்துருகோட்டை<br>ஹாலி - எல<br>ஹசலக<br>லுணுகல<br>மஹஓய<br>மஹியங்கனை<br>மெதகம<br>மீகஹகிவுல<br>பதியதலாவ<br>பஸ்ஸர<br>கந்தகெட்டிய | 2022.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2022.02.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 23.06.2023 | 24.06.2023 மற்றும் 25.06.2023 மஹியங்கனை கிளை |
| **பண்டாரவளை வலயம்**<br>பண்டாரவளை மேற்தரக்கிளை<br>பல்லேகெட்டுவ<br>போகஹகும்புர<br>பொரகஸ்<br>தியதலாவ<br>எல்ல<br>அட்டம்பிட்டிய<br>ஹல்துமுல்ல<br>அப்புத்தளை<br>கெப்பிட்டிபொல<br>கொஸ்லந்த<br>லுனுவத்த<br>ஊவா பரணகம<br>வெலிமட | 2022.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2022.02.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 23.06.2023 | 24.06.2023 மற்றும் 25.06.2023 பண்டாரவளை மேற்தரக்கிளை |
| **மொணராகல வலயம்**<br>படல்கும்புர<br>புத்தள<br>தம்பகல்ல<br>தொம்பகஹவெல<br>எதில்வெவ<br>எதிமலே<br>மொணராகல<br>மொணராகல நகரம்<br>ஒக்கம்பிட்டிய<br>பெல்வத்த<br>செவனகல<br>சியம்பலாண்டுவ<br>தனமல்வில<br>வெல்லவாய | 2022.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2022.02.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 23.06.2023 | 24.06.2023 மற்றும் 25.06.2023 மொணராகலை கிளை |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏல விற்பனைகளை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கை வங்கி
பிரதிப்பொது முகாமையாளர் (கடன் செயற்பாட்டுக் கிளை - வீச்சு II)
தலைமை அலுவலகம், கொழும்பு 01.
தொலைபேசி - 011 239 9568 / 011 220 4545

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


சோபகிருது வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 17

## குறள் தரும் சிந்தனை



இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு

இருமனம் கொண்ட பொதுமகளிருடனும், மதுவுடனும், சூதாட்டத்தினிடமும் தொடர்பு கொண்டு உழல்வோரைவிட்டு வாழ்வில் அமைய வேண்டிய சிறப்பு அகன்றுவிடும்.

# பேக்கரி உற்பத்திகளின் விலை குறைக்கப்படுவதே நியாயம்

அந்நிய செலாவணிப் பற்றாக்குறையின் விளைவாகக் கடந்த வருடத்தின் ஆரம்பம் முதல் நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அதன் காரணத்தினால் அந்நிய செலாவணியை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பல பொருட்களது விலைகள் பெரிதும் அதிகரித்தன.

இவ்விலை அதிகரிப்பானது நாட்டின் அனைத்துப் பொருட்களதும் விலைகள் அதிகரிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது. அவற்றில் பேக்கரி உணவு உற்பத்தி பொருட்களும் அடங்கின.

கடந்த ஆண்டு ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றதும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் திட்டமிட்ட அடிப்படையில் விரிவான முறையில் ஆரம்பித்தார்.

அவ்வேலைத்திட்டங்களின் பிரதிபலன்கள் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைக்கப்பெறத் தொடங்கின. குறிப்பாக பொருளாதார நெருக்கடி தீவிர நிலையில் இருந்த போது நாட்டில் நிலவிய எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கு நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலை நீங்கியது. அத்தோடு மக்கள் எதிர்கொண்ட ஏனைய அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வருவதற்கு ஏற்ப அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலைகளும் கட்டம் கட்டமாக குறைக்கப்பட்டு வருகின்றன. தற்போது பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் நாடு பிரவேசித்துள்ளது.

ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதியும் கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்தும் வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

அதேநேரம் கடந்த 09 மாத காலப்பகுதியில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட பல பொருட்களது விலைகள் பல சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டுள்ளன. இவ்விலைக் குறைப்பின் ஊடாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வருவதன் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்படுவது தெளிவாகிறது. அதுவே நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதும் ஆகும்.

கடந்த வருட முற்பகுதியில் பொருளாதார நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டுதான் நாட்டில் எல்லாப் பொருட்களது விலைகளும் அதிகரிக்கப்பட்டன. அப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வருவதற்கு அமைய தற்போது பொருட்களது விலைகள் குறைக்கப்பட்டு வருகின்றன. இதன் ஊடாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் உருவாகியுள்ளன. பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் மற்றும் அசௌகரியங்களில் இருந்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவே இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதை இவ்வேலைத்திட்டங்களின் ஊடாகவும் அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன, 'எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்க முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார். இவரது கூற்று நியாயமற்றது என்பது தான் மக்களின் கருத்தாகும்,

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வருவதற்கு அமைய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு வருகின்ற போதிலும், பேக்கரி உணவு உற்பத்திப் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது எனக் குறிப்பிடுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

பேக்கரி உணவு உற்பத்திப் பொருட்களின் விலைகளும் குறையும் என மக்கள் எதிர்பார்த்துள்ள சூழலில் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவரின் கூற்று மக்களுக்கு ஏமாற்றத்தையே அளிப்பதாகவே அமைந்துள்ளது.

அத்தோடு 'எரிவாயு விலை அதிகரித்த போது தாம் பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கவில்லை' என்று அவர் குறிப்பிட்டிருப்பது மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போன்றதாகும்.

அதேநேரம் 'சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் 75 வீதமான பேக்கரிகள் மின்சாரத்தில் இயங்குவதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால் சமையல் எரிவாயுவைப் போன்று மின்சாரத்திற்கு பயன்படுத்தப்படும் பிரதான மூலப் பொருட்களாக விளங்கும் எரிபொருட்களுக்கும் பல தடவை விலைகுறைப்புக்கள் செய்யப்பட்டிருப்பதை இவர்கள் மறந்து விடலாகாது.

ஆகவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்றுவருவதற்கு அமைய பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதற்கு அமைய பேக்கரி உணவு உற்பத்தி பொருட்களுக்கும் விலை குறைப்பு செய்யப்பட வேண்டும். அதுவே நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# பழைமை மிகுந்த சுற்றாடல் சட்டத்தை திருத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சி பாராட்டுக்குரியது



## '101 கலந்துரையாடல்' நிகழ்வில் சுற்றாடல் ஊடகவியலாளர் அருண் டயஸ் கருத்து

நாட்டில் காணப்படும் 43 வருடங்கள் பழைமையான சுற்றாடல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு சுற்றாடல் ஊடகவியலாளர் அருண் டயஸ் பண்டாரநாயக்க பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக இலங்கையில் நிறுவப்படவிருக்கும் காலநிலை அனர்த்தங்கள் தொடர்பிலான பல்கலைக்கழகம் முழு உலகையும் இலங்கையை நோக்கி திரும்பிப் பார்க்கச் செய்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் '101 கலந்துரையாடல்' நிகழ்வில் நேற்றுமுன்தினம் (05) கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2048 இல் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதற்கான வேலைத்திட்டத்திற்கு இணையாக 47 ஆம் இலக்க சுற்றாடல் திருத்தச் சட்டமூலம் தற்போதும் நீதித்துறையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு சிங்கராஜ வனம், ஹோட்டன் தென்னை, நக்கில்ஸ் மலைத் தொடர் பகுதி மற்றும் மகாவலி வலயங்களை உயிர்ப்புடன் காணப்படும் (living entities) அம்சங்களாக அறிவிப்பதற்கான பிரகடனமொன்றை உருவாக்குவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய கொள்கைகள் நியூசிலாந்து மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் அமுலில் உள்ளதாகவும், அதனால் அந்நாட்டு மக்கள் சுற்றுச்சூழலையும் உயிருள்ள அம்சங்களாக கருதி பாதுகாக்கும் வழக்கத்தை பின்பற்றி வருகின்றனர் என்றும் ஊடகவியலாளர் அருண் டயஸ் சுட்டிக்காட்டினார்.

சுற்றால் என்பது பரந்த விடயப்பரப்பு என்பதாலும் அதனைப் பாதுகாக்க தவறும் பட்சத்தில் எமது எதிர்கால சந்ததிக்கு நாடு எஞ்சியிருக்காது என்றும் சுற்றாடல் தொடர்பில் சமூகத்தின் அறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "சுற்றாடல் என்பது மிகப்பெரிய விடயப்பரப்பும் வளமும் ஆகும். சுற்றாடல் பாதுகாப்பினை தனியொருவரால் மாத்திரம் உறுதிப்படுத்திவிட முடியாது. சமூகம் முழுவதுமாக ஒன்றுபட்டு சுற்றாடல் பாதுகாப்பிற்காக அர்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். அதேபோல் பசுமை பொருளாதாரம் ஒன்றை நாம் உருவாக்கத் தவறும் பட்சத்தில் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க நேரிடலாம் எனவே சுற்றாடல் பாதுகாப்பிற்கான வலுவான சட்டங்கள் அவசியமாகும்.

சுற்றாடல் பற்றிய மாற்று சிந்தனைகள் சமூகத்தில் தோற்றம் பெற ஆரம்பித்துள்ள நிலையில் வியாபாரிகள் மாத்திரமின்றி பொதுமக்களும் புதிய முயற்சிகளின் போது சுற்றாடல் என்ற விடயத்தை மறந்து செயற்பட ஆரம்பித்துள்ளனர். அதனால் சட்டதிட்டங்களுக்கு மாறாக சுற்றாடல் மீதான நமது அணுகுமுறைகள் எவ்வாறு உள்ளன என்பதை பற்றியும் மக்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பிற்கான சட்டங்கள் தற்போதும் உள்ளன. அவற்றுக்கு மதிப்பளிக்க நாம் சகலரும் கற்றுக்கொள்ள வேண்டும், சமூகம், பாடசாலை மற்றும் மாகாண மட்டங்களில் இது குறித்த தெரிவுகள் அவசியமாகும். அதேபோல் சுற்றாடல் தொடர்பில் நாம் கொண்டுள்ள தெரிவுகள் போதுமானதல்ல. சிலர் விலங்கினங்களே சுற்றாடல் என்று கருதுகின்றனர்.

அதற்கு அப்பாற்பட்ட பல்வேறு விடயங்கள் சுற்றாடலில் காணப்படுகின்றன. அவை அனைத்தினதும் முக்கியத்துவத்தை நாம் உணர மறுப்பதால் சுற்றாடல் பாதுகாப்பற்றுப் போகின்றது. இது பற்றிய புரிதல்களை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதோடு, இளைஞர்கள் சுற்றாடல் மீது பற்று கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

சுற்றாடலின் பெறுமதியான அம்சங்களை உயிர்ப்புள்ள விடயங்களாக பெயரிடுவதானது வரவேற்புக்குரியதாகும். சீகிரியா போன்ற சொத்துக்களை அழித்துவிட முடியாது என்பதை சகலரும் அறிவோம். அதேபோன்று நக்கீல்ஸ் மலைத்தொடரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். மரங்களை வெட்டி வியாபாரம் செய்ய நாம் முற்படுகின்ற வேலையில் பாரிய விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அந்த வகையில் நாட்டின் இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முனைப்பு காலோசிதமானதாகும்.

முன்பை விடவும் தற்போது வெப்பநிலை அதிகரித்துள்ளது. எனது இளம் வயதில் காணப்பட் மழைவீழ்ச்சி பதிவாகும் முறைமைகள் இன்று மாறிப் போயுள்ளன. இந்நிலை தொடர்ந்தால் எமக்கென ஒரு நாடு எஞ்சியிருக்காது. காலநிலை அனர்த்தங்களே இந்நிலைக்கு காரணமாகும். அடுத்த வருடம் இந்நாட்டில் காலநிலை அனர்த்தங்கள் தொடர்பிலான பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்று அறியக் கிடைத்தது. அதனால் முழு உலகமும் இலங்கையின் பக்கமாக திரும்பிப் பார்க்கும். வேறு நாட்டிலுள்ள விஞ்ஞானிகள் நமது நாட்டிற்கு வந்து ஆய்வுகளை மேற்கொள்வர். அறிவை மேம்படுத்திக் கொண்டால் மாத்திரமே காலநிலை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க முடியும்.

புத்தகங்களுக்கு மாத்திரம் கட்டுப்பட்டு கிடக்காமல் பாடசாலை மட்டத்திலிருந்து சுற்றாடல் கற்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இவை அனைத்தையும் ஒரே நாளில் செய்துவிட முடியாது என்றாலும், இலக்கு ஒன்றுடன் முன்னோக்கி நகர வேண்டியுள்ளது. விலங்கினங்கள், மர இனங்கள், உட்பட எமது சுற்றாடலில் காணப்படும் பெறுமதிமிக்க வளங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். சுய ஒழுக்கத்துடன் அந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்" எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற '101 கலந்துரையாடல்' நிகழ்வில் கலந்துகொண்டிருந்த சுற்றாடல் ஊடகவியலாளர் அருண் டயஸ் பங்குபற்றிய வீடியோ காணொலி இணைப்பு (https://youtu.be/1SvT53mBk8).

'101 கலந்துரையாடல்' நிகழ்வில் தகவல்களை தெரிந்துக்கொள்வதற்கான வட்ஸ் அப் குழுவில் இணைந்துக்கொள்ள (https://tinyurl.com/101Katha)

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 80 ஆம் வருட அமுதவிழா

## எதிர்வரும் 09ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் விமரிசையான நிகழ்வுகள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நிகழ்த்தும் 'அமுத விழா' கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் எதிர்வரும் 09ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வாக 2023.06.09ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஊர்வலம் சைவ மங்கையர் வித்தியால முன்றலில் ஆரம்பமாகி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தை வந்தடையும். க.க.பொன்னம்பலம் முதலியார் ஞாபகார்த்த அரங்கில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நிகழ்வு நடைபெறும். இவ்விழாவில் மங்கலவிளக்கை .அரவாண்டிப்பிள்ளை ஜெயராசா (பிரதம நிறைவேற்று அதிகாரி, நித்திய கல்யாணி ஜுவலரி, வெள்ளவத்தை) மற்றும் திருமதி கல்யாணி ஜெயராசா தம்பதியர் ஏற்றி வைக்க, தமிழ் வாழ்த்தை செல்வி சங்கரிப்பிரியா தேவபிரகாசம், செல்வி கபிலாஜினி நந்தகுமார், செல்வி சபலக்ஷிகா கேசவன் ரெட்டியார் ஆகியோர் வழங்குவர்.



முனைவர் செல்வி திருச்சந்திரன்



முனைவர் கனகஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி)



பேராசிரியர் சி.தில்லைநாதன்



பேராசிரியர் சி.பத்மநாதன்



சாகித்தியரத்னா தி.ஞானசேகரன்

சண்டிலிப்பாய் நர்த்தன சித்திர கலைமன்றத்தின் மாணவர்கள் வரவேற்பு நடனம் நிகழ்த்துவர். வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க கல்விக்குழுச் செயலாளர் திருமதி பவானி முகுந்தனும், தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத்தலைவர் மா.கணபதிப்பிள்ளையும் நிகழ்த்துவர். பேராசிரியர் சி.தில்லைநாதன், முனைவர் கனக ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி), பேராசிரியர் சி.பத்மநாதன், முனைவர் செல்வி திருச்சந்திரன், 'சாகித்திய ரத்னா' தி.ஞானசேகரன் ஆகியோர் 'இயல் முனைவர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவர். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்துவார்.

இரண்டாம் நாள் நிகழ்வு 2023.06.10 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு திருமிகு வி.ஏ.கந்தையா ஞாபகார்த்த அரங்கில் கலாநிதி க.இரகுபரன் தலைமையில் நடைபெறும். தமிழ் வாழ்த்தை முதுகலைமாணி திருமதி சந்திரிக்கா ரவிக்குமார் வழங்குவார். தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன் நிகழ்த்துவார்.

'இயற்கை சார்ந்த மரபுரிமைகள் ஆய்வும், அவசியமும்': மா.மோகனகிருஷ்ணன், 'உணவுசார் மரபுரிமைகள் மரபும், மாற்றமும்': சின்னராஜா ரமணராஜா, 'விவசாய மரபுரிமைகள் மரபும், மாற்றமும்': சதாநந்தன் பாலகிருஷ்ணன், 'உள்ளூர் ஆற்றுகைக் கலைகளின் மரபுரிமைகளும், கூத்து மீளுருவாக்கமும்': து.கௌரீஸ்வரன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

இரண்டாம் நாள் நிகழ்வு 2023.06.10 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மு.வைரவப்பிள்ளை ஞாகார்த்த அரங்கில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜெயந்தி விநோதன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் மங்கல விளக்கை ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் விதிவிடப் பிரதிநிதி எஸ்.திருஞானசம்பந்தர், திருமதி விஜயலட்சுமி திருஞானசம்பந்தர் தம்பதி ஏற்றி வைக்க, தமிழ் வாழ்த்தை செல்வி வைசாலி யோகராஜன் வழங்குவார்.

தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத்தலைவர் மருத்துவர் தி.ஞானசேகரன் நிகழ்த்துவார். தியாகராஜர் கலைக்கோவில் இயக்குனர் நாட்டியக்கலைமணி பவானி குகப்பிரியா அவர்களது மாணவர்களின் 'ஈழத்து குறவஞ்சி' நடனமும், தென்மயிலை அளவெட்டி சுகுமார் குழுவினரின் ஒயிலாட்டமும், தொல்புரம் கலாலயம் குழுவினரின் 'தாய் கண்ட சேய்' இசை நாடகமும், காரைக்கவி கந்தையா பத்மானந்தன் தலைமையில் 'நாமிருக்கும் நாடு' என்னும் தலைப்பில் கவிரங்கமும் இடம்பெறும். கவியரங்கத்தில் கவிஞர் இரா.தனுஷா, கவிஞர் ந.மயூரன், கவிஞர் அலி அக்பர், கவிஞர் சுபாஷினி பிரணவன், கவிஞர் செல்வ திருச்செல்வன், கவிஞர் கிண்ணியா அமீர்அலி ஆகியோர் பங்குபற்றுவர்.

மூன்றாம் நாள் நிகழ்வாக 2023.06.11 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கலாநிதி எச்.டி.டபிள்யூ. தம்பையா (கியூ.சி.) ஞாபகார்த்த அரங்கு பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். தமிழ் வாழ்த்தை செல்வன் கிருஸ்ணகுமார் மோஹித்ஷால் வழங்குவார். தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்துவார்.

'வழிபாட்டு சமய மரபுரிமைகள் நம்பிக்கைகளும், சடங்குகளும்': முனைவர் தி.செல்வமனோகரன், 'நாட்டார் மரபுரிமைகள் தேடவலும், ஆவணமாக்கலும்': பிரசாத் சொக்கலிங்கம், 'தொல்லியல் மரபரிமைகள் சட்டமும், அடையாளச் சிதைப்பும்': ஜெகதீஸ்வரன் டிசாந்த், 'நிலைத்து நிற்கும் சமூகங்களின் உருவாக்கலில் தொட்டுணராப் பண்பாட்டு மரபுகளும், மீளுவாக்கமும்': பேராசிரியர் சி.ஜெயசங்கர், 'மரபுரிமையும் தேசிய இனங்களும்': கலாநிதி சபா ஜெயராசா ஆகியோர் ஆய்வுரைகளை ஆற்றுவர்.

மூன்றாம் நாள் நிகழ்வு 2023.06.11 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கலாநிதி க.செ.நடராசா ஞாபகார்த்த அரங்கில் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் மங்கலவிளக்கை ஆலய அறங்காவலரும் ஈஸ்வரன் குழும தலைவருமான கணேஸ் தெய்வநாயகம், வைத்திய கலாநிதி திருமதி மருதினி தெய்வநாயகம் தம்பதி ஏற்றி வைக்க, தமிழ் வாழ்த்தை செல்வி பிரியங்கா ஆன்பிரான்சிஸ் வழங்குவார். தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க நிதிச்செயலாளர் செல்வ திருச்செல்வன் நிகழ்த்துவார்.

'ஈழத்துத் தமிழியற் புலங்கள்' என்னும் அமுதவிழா ஆய்வு நூல் வெளியிடப்படவுள்ளதுடன், வெளியிட்டுரையை பேராசிரியர் வ.மகேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் 'சங்க வரலாறு 80' அன்றும் இன்றும் என்றும் சங்கத்தின் இருப்பு என்ற சிறப்பு நூலும் வெளியிடப்படவுள்ளதுடன் வெளியிட்டுரையை கலாநிதி க.இரகுபரன் நிகழ்த்தவுள்ளார்.

கிளிநொச்சி பிரசாந்தனி நர்த்தன நாட்டியாலய மாணவர்களின் ருத்ர தாண்டவமும், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடம், பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தலைமையில் இன்றைய இளைஞர்கள் தமிழர் மரபுரிமைகளினை பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்கின்றார்கள். ஆம்/இல்லை என்னும் தலைப்பில் விவாத அரங்கும் இடம்பெறவுள்ளன.

**பேராசிரியர் சி.தில்லைநாதன், முனைவர் கனக ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி), பேராசிரியர் சி.பத்மநாதன், முனைவர் செல்வி திருச்சந்திரன், 'சாகித்திய ரத்னா' தி.ஞானசேகரன் ஆகியோர் 'இயல் முனைவர்' பட்டம் வழங்கிகௌரவிப்பு**

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி...
பொதுச்செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளன தலைவராக மீண்டும் கலாபூஷணம் மீரா இஸடீன்

அம்பாறை மாவட்ட உடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த ஒன்று கூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை 2023.06.04 முழுநாள் நிகழ்வாக நடைபெற்றன.

சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா. எஸ்.இஸடீனின் தற்காலிக தலைமையிலும், செயலாளர் ஏ.ஜே.எம்.ஹனிபாவின் நெறிப்படுத்தலிலும், ஒலுவில் இஸ்மாயில் ஹாஜியார் (அஸீஸ்) தோட்டமண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கையின் முதன்மை மிக்க ஊடக அமைப்பான அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயற்பாடுகளை புதிய உத்வேகத்துடனும், வினைத்திறனுடனும் முன்னெடுப்பதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் நிகழ்வில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது மீண்டும் தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ். இஸடீன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் இத்தெரிவு மூலம் அவர் சம்மேளனத்தின் ஆயுட்காலத்தலைவராக செயற்படுவாரெனவும் உறுப்பினர்களின் ஏகோபித்த தீர்மானமாக அறிவிக்கப்பட்டது.





(06ஆம் பக்கம் பார்க்க)

துறைநீலாவணை நிருபர்...

# 'நபி வழியில் ஹஜ், உம்ரா அனுபவக் குறிப்புகளுடன்' அக்குறணை அஸ்னா ஜும்ஆப் பள்ளிவாசலில் நூல் வெளியீடு

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் எச். உமர்தீன் எழுதிய 'நபி வழியில் ஹஜ், உம்ரா அனுபவக் குறிப்புகளுடன் ' என்னும் நூல்வெளியீட்டு விழா அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் ஏற்பாட்டில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் எச். உமர்தீன் எழுதிய இந் நூல்வெளியீட்டு விழா அக்குறணை அஸ்னா ஜும்ஆப் பள்ளி வாசலில் அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி சியாம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூல் பற்றிய கருத்துரையினை ஹக்கீமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் ஹிதாயத்துல்லாஹ் ரஸீன் (ரஹ்மானி), நூல் ஏற்புரையினை அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி எச். உமர்தீனும் ஆற்றினர். விசேட அதிதியாக தொழிலதிபர் நிஸைர் ஹாஜியார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

விழாவில் உலமாக்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பலதரப்பட்ட பிரமுகர்கள் உட்பட பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர்.

**அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் சியாம் வரவேற்புரையாற்றும் போது....**

நூல் எழுதுவது வெளியிடுவது என்பது எமது நாட்டுக்கு பழைமையானதாக இருந்தாலும் மக்கள் அதில் ஆர்வம் காட்டுவது மிகக் குறைவாக இருப்பது நாம் அறிந்த விடயம். எழுத்துத்தான் அந்த சமூகத்தை பற்றி எப்பொழுதும் பேசும். ஆனால் இப்பொழுது நான் பேசுகின்ற பேச்சுக்கள் கொஞ்சம் உங்கள் சிந்தனைக்கு வரும். பின்னர் மறந்து விடும். எழுத்து என்பது என்றுமே உங்கள் வாழ்க்கைக்கு பாதுகாப்பாக இருக்கும். பாதுகாப்பட வேண்டியவைதான் எழுத்து. எனவே நம் கையில் இருக்கக் கூடிய புனித அல்குர்ஆனைக் கூட ஒரு சாரார் மனனம் இட்டு இருந்தாலும் அடுத்தடுத்த சந்ததியினர்கள் ஓதுவதற்கு அது அச்சில் வந்ததே பெரும் உதவியானது. உலகில் தினசரி எத்தனையோ புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எல்லா மொழிகளிலும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதனை நன்கு வாசிப்பவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் புத்தக ஆசிரியர்களுடைய சிந்தனைகள் வளர்ச்சியடைகிறது. உலக அறிவு விருத்தியடைகின்றது.

புத்தகங்களை விரும்பி வாசிக்கின்றவர்கள் உலகில் உள்ளனர். அப்புத்தகங்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள். அதற்கு எவ்வளவு விலை கொடுத்தாவது வாங்கி வாசிப்பார்கள். நாம் வெளியிடும் புத்தகம் குர்ஆன் ஹதீஸ்களுடன் தொடர்புபட்டது. அது இஸ்லாமிய வாழ்க்கைக்கு தேவையானது. மறுமை வாழ்க்கைக்கு தேவையானது. இந்நூல்களை இஸ்லாமிய மார்க்க அறிஞர்களால் எழுதப்படும்.

ஆனால் சில புத்தகங்கள் வெறும் கனவுகளைக் காணும் புத்தகமாக அமைந்துள்ளது. அவற்றைப் படிக்கபடிக்க ஆசையாக இருக்கும். எவ்வளவு விலை கொடுத்து என்றாலும் வாங்கிப் படிப்பார்கள். அவர்களுடைய வாசிப்புத் திறனை வளர்க்கின்றார்கள். இவற்றை வாசிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. எனினும் இஸ்லாமிய நல்வழிகளைக் காட்டக் கூடிய புத்தகங்களை வாசிப்பது இன்றைய காலத்தின் தேவையாக இருக்கிறது. இஸ்லாமிய நூல்களைப் படிப்பது. அதனைப் பற்றிச் சிந்திப்பது எல்லாம் எமது வாழ்க்கையில் எப்பொழுது அதிகரிக்கப்படுகின்றதோ தானாகவே எங்களுடையே மார்க்க அறிவு வளர ஆரம்பிக்கின்றது. மார்க்கம் சம்பந்தமான அறிவு நமக்குக் கிடைக்கின்றது. வழி தவறுகின்ற வழி பிறழ்கின்ற சந்தர்ப்பங்கள் இல்லாமற் போகும். அந்த அடிப்படையில் இன்று வெளியிடப்படும் ஹழ்ரத் எச். உமர்தீனின் ' நபி வழியில் ஹஜ் உம்ரா அனுபவ குறிப்புக்கள் என்ற நூல் இன்றைய காலத்தின் தேவை அறிந்து எழுதப்பட்டுள்ளது, குறிப்பாக புனித ஹஜ்யாத்திரையினை மேற்கொள்ளவுள்ளவர்கள், எதிர்காலங்களில் இதனை மேற்கொள்ள எதிர்கால சந்ததியினர்கள் என எல்லோருக்கும் பிரயோசனம் அளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**நூல் பற்றிய கருத்துரையினை ஹக்கீமிய்யா அரபுக் கல்லூரி அதிபர் ஹிதாயத்துல்லாஹ் ரஸீன் (ரஹ்மானி)**

அரபு நாட்டில் நூற்றில் ஒரு விகிதம் பேருக்கு வாசிப்பு பழக்கம் இல்லை. ஐரோப்பிய நாடுகளில் சிறுவர் முதல் முதியோர் வரை வாசிப்பர். 1994 இல் ஜப்பானில் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் யாரும் இல்லை. வாசிப்பு மனிதம் உருவாகுவதற்கான சிறப்பான அம்சம். நாம் வாசிப்பை நேசிப்போம் என்போம். ஆனால் அன்று இஸ்லாமிய அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள் வாசிப்பை சுவாசிப்போம் என்று. ஒவ்வொரு மூச்சிலும் வாசிக்க வேண்டும். அந்தளவுக்கு எமது முன்னோர் சமூகம் வாசித்துள்ளார்கள்.

ஆதம் (அலை) அவர்களுக்கு இறைவன் முதலாவதாக பேசுவதற்கே கற்றுக் கொடுத்தார். இறைவனால் முதலாவது படைக்கப்பட்டது எழுதுகோலாகும். அதற்கு பெயர் இக்ராஹ் என்பதாகும். எல்லாம் எழுத்து எழுத்து என்றுதான் தொடங்குகிறது.

எமது சமூகம் வயிற்றுக்குச் செலவு செய்கிறது. வாழ்க்கைகும் தலைக்கும் செலவு செய்வது ரொம்பக் குறைவு என்பார்கள். ஒரு கடைத் தெருவில் விரைவான உணவுக் கடைகளில் எமது வாலிபர்கள் அதிகளவு அமர்ந்திருப்பார்கள். ஓரிரு புத்தகக் கடைகளே உள்ளன.

இன்று எச். உமர்தீன் அவர்களால் எழுதப்பட்ட ' நபி வழியில் ஹஜ் உம்ரா அனுபவக் குறிப்புக்களுடன்' என்னும் நூல் மக்காவிலுள்ள கவ்பாவை அழகிய அட்டைப்படமாகக் கொண்டு வெளிவந்துள்ளது. இறைவனின் சிந்தனையை ஏற்படுத்தக் கூடிய இறைவனின் அன்பை ஏற்படுத்தக் கூடிய முதல் அடையாளச் சின்னமான கவ்பாவின் படத்தைத் தாங்கி வெளிவந்துள்ளது. உலகில் நிரந்தரமாக எப்பொழுதும் அழியாமல் அதிகளவு மக்களுடைய மனதில் நிலையான அன்பைப் பிரதிபலிக்கக் கூடியவையே கவ்பாவாகும். நூலின் தலைப்புக்கு ஏற்றாற்போல் புனிதமிக்க கவ்பத்துல்லாவினைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இந்நூலாசிரியர் கடந்த 35 வருட காலமாக இலங்கையிலுள்ள ஹஜ் யாத்திரை கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவர் அழைத்துச் செல்லும் போது அவர் கண்ட அனுபவங்கள் ஹஜ் பற்றிய சட்ட திட்டங்கள், பிரயாண ஒழுங்குகள் ஆகியவற்றை நீண்ட நாள் அவாவாகக் கொண்டு எழுதப்பட்டவையே. அவர் 35 ஆண்டுகள் ஹஜ் கடமையை நிறைவேற்றவும் ஹஜ்யாத்திகர்களை வழிகாட்டியாகவும் அழைத்துச் செல்லக் கூடிய பாக்கியம் பெற்றவர். அவர் சுமார் 95 உம்ரா கடமைகளை நிறைவேற்றியுள்ளார். இது எல்லோருக்கும் கிடைக்கின்ற பாக்கியம் அல்ல. இறைவன் அவருக்கு வழங்கிய பெரும் பாக்கியம் ஆகும். இந்த அனுபவப் பகிர்வினையே எமக்கு நூலாசிரியர் புத்தக வடிவில் தந்துள்ளார்.

இந்நூலுக்கு நான்கு ஹஜ் முகவர்கள் சேர்ந்து ஆசிச் செய்தி வழங்கியுள்ளனர். அமானாத் பயண முகவர் இஸ்ஹாம், சேபே பயண முகவர் பாரூக், எப். என். எப். பயண முகவர் பாரிஸ், பயாஸ், புராக் பயண முகவர் கலீல் ஆகியோர் இணைந்து இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுள்ளனர். இந்த நான்கு பேர் இந்நூலுக்கு சான்றுபகிர்கின்றார்கள். அவர் இந்நூல் பற்றிக் கூறும் போது இப்புத்தகத்தில் வீட்டில் இருந்து புறப்பட்டு ஹஜ் கடமையை நிறைவேற்ற அல்லது உம்ரா கடமையை நிறைவேற்றிக் கொண்டு விமான நிலையம் வந்தடையும் வரையும் உள்ள அனைத்து விடயங்களும் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கிறது. ஓதக் கூடிய துஆக்கள் அனைத்தையும் கருத்துடன் தொகுக்கப்பட்டிருக்கின்றது என்று அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் எம். ஐ. எம். ரிஸ்வி முப்தி தனது ஆசிச் செய்தியில்**

' நபி நாயகம் (ஸல்) அவர்கள் முன் மாதிரியானவர்களாக இருந்து மார்க்க கடமைகளைச் செய்துள்ளதுடன் அவற்றைச் செய்து கொள்ளக் கூடிய விதத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.' அந்த வகையில் நூலாசிரியர் ஹஜ்ஜுடைய அமல்களை பொது மக்கள் இலகுவான முறையில் அறிந்து அமல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர்களில் ஒருவர் கண்டி தாருல் உலூம் அல்புர்க்கானிய்யாவின் பணிப்பாளர் எனது நெருக்கமான நண்பர் மௌலவி எச். உமர்தீன் ரஹ்மானி அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

இதில் ஹஜ்ஜுடைய நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கு தேவையான அனுபவ ரீதியிலான வழிகாட்டல்களை இலகுவான எளிய நடையில் அழகிய தமிழில் அமையப்பெற்றுள்ளது என்பது சிறப்பம்சமாகும். ஹஜ் , உம்ரா கடமைகளைச் செய்பவர்களுக்கு பயனுள்ளதாக இந்நூல் அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**முன்னாள் முஸ்லிம், சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வை. எல். எம். நவவியின் ஆசியுரையில்....**

ஓர் ஆலிம் கற்றுக் கொடுக்கின்ற பண்பை மிகச் சரியாகச் செய்துள்ளார். இலங்கை ஜம்மிய்யதுல் உலமாவின் உப தலைவரும் நாடறிந்த அறிஞருமான உமர்தீன் அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகம் படித்தவர் பாமரர் அனைவருக்கும் இக்கடமையை நிறைவேற்ற தெளிவான விளக்கத்தினை வழங்கக் கூடிய புத்தமாகக் காணப்படுகின்றது. உமர்தீன் ஹழ்ரத் அவர்கள் ஹஜ் வழிகாட்டியாக நீண்ட கால அனுபவம் கொண்டவர். எமது ஹாஜிகள் விடுகின்ற குறைபாடுகள் அனைத்தையும் விளங்கிக் கொண்டவர். அவரது அறிவு அனுபவம் இரண்டும் இப்புத்தகத்தில் தெளிவாக காணப்படுகின்றது. மிக இலகுவான முறையில் யாரும் விளங்கக் கூடிய விதத்தில் எழுதப்பட்டிருப்பது அதன் சிறப்பம்சமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

என்னுடைய பார்வையில் இப்புத்தகத்தை இலங்கையில் ஹஜ் கடமைக்கு செல்லவுள்ள அனைவரும் இந்நூலை கட்டாயம் வாசித்தல் அவசியமாகும். ஹஜ் சென்றவர்கள் கூட இந்நூலை வாசித்தால் ஹஜ் சென்ற அனுபவங்களை மீட்டிப் பார்க்கவும் மேலும் அவர்கள் செல்வதற்கான ஒரு புத்தாக்கத்தை அளிக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

ஹஜ் யாத்திரிகர்கள் தவறுகள் விடா தவாறு எவ்வாறு பிரயாணங்களில் ஒழுக்க மாண்புகளைப் பேணி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் தெளிபடுத்தியுள்ளார்.

ஹஜ் தொடர்பில் எதையுமே விட்டு வைக்காதளவுக்கு சகல அம்சங்களும் அடங்கிய நூலை அவருடைய முதிர்ந்த அனுபவமும் அறிவு ஆளுமையும் கொண்ட நூலாக வெளிக் கொணர்ந்துள்ளார். அவர் ஒரு பன்னூலாசிரியர் அவர் மென்மேலும் பல நூல்களைத் தர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் நூலாசிரியர் மௌலவி எச் உமர்தீன்,.......**

ஹஜ் கடமைகளுக்குச் செல்பவர்கள் விடுகின்ற சில தவறுகளை அடையாளம் கண்டிருந்தேன். இனிமேல் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கான ஒரு வழிகாட்டல் நூலொன்றை வெளிக்கொணர வேண்டும் என்ற எண்ணம் மிக நீண்ட காலமாக இருந்தது. இந்த வருடம் ஜமாஅத் சென்றிருந்த பொழுது கிடைக்கின்ற ஒய்வு நேரத்தை இந்நூலை எழுதுவதற்கு முயற்சி எடுத்தேன். குறிப்பாக ஜமாஆத் பயணம் சென்றால் ஒய்வு நேரம் கொஞ்சம் தருவார்கள். ஆனால் நான் அந்த ஒய்வு நேரத்தை இந்தப் புத்தகத்திற்காகப் பயன்படுத்தினேன். அது மட்டுமல்ல உம்ராவுக்கு சென்ற சமயம் நோய் ஏற்பட்டது. அதனால் ஐந்து நாட்கள் சிரமங்களை எதிர்நோக்கினேன். அதற்கு இலங்கையில் மருந்தாகப் பயன்படும் ஜீவனிப் பெக்கட் இருந்தால் போதும். பலரிடம் ஜீவனிப் பெகட் இருக்கிறதா என்று வினவினேன். கடைசியாக ஒரு தாய் தந்தார். அதன் மூலம் உடல் ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைத்தது, இந்த விடயங்கள் எல்லாம் சின்ன விடயங்கள் தான். ஆனால் எத்தனை கோடி கொடுத்தாலும் மிகப் பிரயோசனமானதாக இருக்கும். இதே போல நடைமுறைகளில் எத்தனையோ சம்பவங்கள் உள்ளன. அங்கு என்னென்ன பொருட்கள் கொண்டு செல்ல வேண்டும் எவ்வளவு தொகை கொண்டு செல்ல வேண்டும். எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் விடயங்களை பொது மக்களுக்கு சொல்ல வேண்டும் என்ற அவா இருந்தது. அதன் அடிப்படையில் இந்த வழிகாட்டல் நூலை எழுதியுள்ளேன். இதில் ஆக முக்கியமான விடயம் என்னவென்றால் இலங்கையில் இருந்து முதலில் ஹஜ் செல்வதற்கு ஆயத்தம் செய்வோர் அரபாவில் இருந்து துஆக் கேட்டால் அத்தனையும் பிரதிபலன் கிடைக்கும். ஆனால் போகும் முன் ஊரில் எத்தனையோ பேருடன் நாம் கோபித்துக் கொண்டு செல்கின்றோம். சின்னச் சின்ன கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, கடைப்பிரச்சினை, திருமணப் பிரச்சினை, வேலிப் பிரச்சினை என்கிற முரண்பாடுகளின் காரணமாக நாங்கள் சொந்த பந்தங்களுடனும் இரத்த பந்தங்களுடன் கோபித்துக் கொண்டு புனித இடமான ஹஜ்ஜுக்குச் செல்கின்றோம். ஒரு தொலைபேசி அழைப்பைக் கொண்டு அவர்களுடன் கதைத்து மன்னிப்புக் கேட்காமல் எத்தனையோ இலட்சக் கணக்கில் செலவு செய்து இரண்டு கபன் துணியோடு செல்கின்றோம். பாவம் தனது சுய கௌவரத்தை விட்டுக் கொடுக்காலம ஹஜ் செய்வதில் எந்த பிரயோசனமும் இல்லை. எனவே பிரச்சினைகளை எல்லாம் ஆணித் தரமாக சொல்ல வேண்டிய விடயங்களை உள்ளடக்கி இந்த நூலை எழுதியுள்ளேன் என்று அவர் மேலும் தொவித்தார்.

**இக்பால் அலி...**












# தோட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் வேண்டும்



## ஜனாதிபதியை தலையிடக் கோருகிறார் SLFP திருமுருகன்

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாமான சம்பளத்தை பெற்றுக்கொடுக்க, ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரதிநிதி குழுத் தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தமிழ் பிரதிநிதிகள் கலந்துக்கொண்ட இக்கூட்டத்தில் திருமுருகன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதார நெருக்கடியால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான சம்ளஉயர்வை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளம் சகல தோட்டங்களிலும் வழங்கப்படுவதில்லை.

அத்துடன், கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக முதலாளிமார் சம்மேளனம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால் இந்த ஒப்பந்தத்துக்கேற்ப தோட்ட கம்பனிகள் செயற்படு வதில்லை.

இதனால் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக வழிநடத்துகின்றன.

எனவே, தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, நீதிமன்ற வழக்கை மீளப் பெற வேண்டும்.

மேலும், கூட்டு ஒப்பந்த முறைமையை கொண்டு வந்து, பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்சினையை தீர்த்து வைக்க ஜனாபதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்டப்பகுதியில் தேயிலைச் செடி உற்பத்தி செய்யப்படாத காணிகளை, பெருந்தோட்ட இளைஞர்களுக்கு விவசாயம் அல்லது மாற்று விவசாயம் செய்வதற்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

## சென்னை இலங்கை சர்வதேச...

ஆரம்பித்து வைத்தார். சென்னை, எண்ணூர் காமராஜர் துறைமுகங்களில் கடந்த நிதியாண்டில் சிறப்பாக செயற்பட்ட நிறுவனங்களுக்கு, பாராட்டு விழா சென்னை கிண்டியிலுள்ள நட்சத்திர விடுதியில் திங்கட்கிழமை நடைபெற்றது.

துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மத்திய அமைச்சர் சர்வானந்த சோனோவால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இச்சேவையை ஆரம்பித்து வைத்தார்.

சென்னை, இலங்கையின் ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களிடையே இக்கப்பல் பயணிக்கவுள்ளது. எம்.வி.எம்பிரஸ் என்ற இச்சுற்றுலா பயணிகள் சொகுசுக் கப்பல் சேவை அமைச்சர் சர்வானந்த சோனோவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கால இடைவெளியின்றி தொடர்ந்து இயக்கப்படும். தொடர்ச்சியாக, சுற்றுலா பயணிகளுக்கான சொகுசு கப்பலை இயக்குவது என்பது சென்னை துறைமுக வரலாற்றில் முதல் முறையாக செயற்படுத்தப் பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்களை இணைக்கும் வகையில் இக்கப்பல் இயக்கப்படும். இந்த கப்பல் 02 முதல் 05 இரவுகளுடன் கூடிய பயணத்தை கொண்ட பேக்கேஜுகளுடன் சுற்றுலா கப்பலாகவும் இயக்கப்படுகிறது.

சுமார் 1,600 பேர் பயணம் செய்யக்கூடிய இக்கப்பலில் குறைந்தபட்சம் ரூ.1.06 இலட்சம் முதல் அதிகபட்சம் ரூ.4.37 இலட்சம் வரை பயணக் கட்டணமாக தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## காணிகளை விடுவிப்பதற்கு...

ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கா தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இக்கலந்துரையாடலில், காணிகளை விடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய குழு ஒன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய இக் குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கக் கூடிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

அதேபோன்று, வலி வடக்கு பிரதேசத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுடமையாக்குவது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6,000 ஏக்கர் காணிகளில் சுமார் 3,000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதால் அந்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

காணி விடுவிப்பு தொடர்பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்கு தேவையான காணி அளவீடுகளை மேற்கொள்வதற்கும், இன்னும் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றுவதற்கும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடலில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

## கொழும்பை சுற்றிவளைப்போரை...

சட்டத்தின் கீழ், ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டு மக்கள் எப்போதும் கஷ்டத்திலேயே வாழ வேண்டும். எரிபொருள், சமையல் எரிவாயு, பால் மாவுக்கான வரிசைகளில் மக்கள் பல நாட்கள் காத்திருக்க வேண்டும். அப்போதுதான் தமது விருப்பத்துக்கேற்ப நாட்டை வைத்திருக்க முடியுமென சிலர் நினைக்கின்றனர்.

அவ்வாறு சிந்திப்பவர்களே நாளை ஜூன் (08) கொழும்பை சுற்றிவளைக்கப்போவதாக தெரிவித்துள்ளனர்.

நாடும், நாட்டு மக்களும் இயல்பு நிலைக்கு திரும்புவதை இவர்கள் விரும்பவில்லை. இந்த முன்னேற்ற நிலையை கெடுக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம். இதனால்தான், வீதியில் இறங்கி கொழும்பை சுற்றி வளைக்கப் போவதாக கூறுகின்றனர்.

இவர்களை, இராணுவமோ பொலிஸாரோ விரட்டத்தேவையில்லை. மக்களே விரட்டியடிப்பார்கள்.

நோயாளி ஒருவருக்கு ஏற்றப்பட்டுள்ள 'சேலைன் ' போத்தலை பிடுங்கி எறிய மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். அப்படி யாராவது செய்ய முயன்றால் மக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டு அத்தகையோரை விரட்டியடிக்கவே செய்வர்.

சில நோய்களை குணமாக்க சில சிகிச்சை முறைகள் உள்ளன. எனவே, இவ்வாறான நோய்கள் உள்ளவர்களை குணமாக்கும் சிகிச்சையை ஜனாதிபதி கையிலெடுக்க வேண்டும். அதுதான், இந்நோயைக் குணமாக்க ஒரே வழியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோதமான முறையில்...

*Toyota Prius* கார்கள், கழற்றி உதிரிப் பாகங்களாக கொண்டு வரப்பட்டிருந்தன, இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான *Manchester* வெளிநாட்டு சிகரெட்டுகள், 16 மில்லியன் ரூபா பெறுமதியான 69 VAT மதுபான போத்தல்கள் . சுமார் 18 மில்லியன் ரூபா பெறுமதியான ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பிரிட்டனில் உற்பத்தி செய்யப்பட்ட வாசனை திரவியங்கள், அழகுசாதனப் பொருட்கள், ஆலிவ் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை சுங்கத்தினர் கையகப்படுத்தினர்.

இந்த பொருட்கள் சுங்கத்துக்கு அறிவிக்கப்படாமையால் அரசாங்கத்துக்கு சுமார் 22 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சுங்க வருமான கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளர் நிமல் சமரதுங்க தெரிவித்தார்.

சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட இந்த பொருட்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுங்கத்திணைக்கள வருவாய் கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளர் நிமல் சமரதுங்கவின் மேற்பார்வையில் இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

சிரேஷ்ட பிரதி சுங்கப் பணிப்பாளர் நளின் பிரேமரத்னவின் வழிகாட்டலின் கீழ், சுங்க அத்தியட்சகர்களான சி.எஸ்.விக்கிரமரத்ன, ஏ.டபிள்யூ.எல்ல சி.வீரகோன், பொறுப்பதிகாரி அருண அமரசிங்க, உதவி சுங்க அத்தியட்சகர்கள், சுங்க பரிசோதகர்கள் மற்றும் சுங்க ஒழுங்குமுறை அதிகாரிகள் ஆகியோர் இந்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம்...

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொண்டால், அச்சட்டம் மூலத்தை அரசியலமைப்புக்கு ஒத்திசைவானதாக அமைத்துக்கலாமென உயர் நீதிமனறம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபாநாயகரின் அறிவிப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் சபாநாயகர் மேலும் தெரிவிக்கையில்:

அரசியலமைப்பின் 121 (1) ஆம் உறுப்புரையின்படி உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பிலான உயர் நீதிமன்றத் தீர்ப்பு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டதா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் இவ்வாறு அமைந்துள்ளது. சட்டமூலத்தின் 1, 2(1)(f), 2(2), 3(2), 4(1)(a), 4(1)(b), 4(3), 17(1), 21, 31(2), 163(2)(h), 40, 48(3), 49(1)(f), 50(1)(a), 53(1), 62(1), 65, 67(5), 71(6) மற்றும் (8), 80, 93, 99, 101, 112, 149 மற்றும் 162 ஆகிய சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது.

எவ்வாறாயினும், உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள திருத்தங்கள் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படுமாயின் இந்த முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும். இத்திருத்தங்களுக்கு மேலதிகமாக, சட்டமூலத்தின் 8(3), 136, 141, 142 மற்றும் 156 சரத்துக்கள் தொடர்பில், மேலதிக சொலிசிட்டர் ஜெனரலால் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் மூலம் மனுதாரர்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு தீர்வுகாண முடியும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் சபையில் குறிப்பிட்டார்.

## சினிமா, திரைப்படத்துறைக்கென... (03ஆம் பக்கத் தொடர்)

சட்ட வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக சினிமா துறையிலுள்ள பிரபலங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் கருத்துக்கள், யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை நேற்று (06) தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சர் முன்வைத்த கருத்துக்கள், பரிந்துரைகள் என்பவற்றை ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சட்ட வரைவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசின் அனுமதியை கேட்டதாகவும், அச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை குழு திரைப்பட ஒழுங்குபடுத்தலுக்கு மாத்திரமல்ல ரூபவாஹினி ஆக்கங்களுக்கும் ஒழுங்குபடுத்தல் தேவையென கூறியதாக அமைச்சர் தெரிவித்தார்.

அந்நிய செலாவணியை ஈட்டும் கைத்தொழிலாக இந்தியாவில் திரைப்பட துறை அமைந்துள்ளதாகவும் இலங்கை திரைப்படங்களையும் அவ்வாறான நிலைமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய சினிமாவின் அபிவிருத்திக்காக 1971 இலக்கம் 47 என்னும் திரைப்பட கூட்டத்தாபன சட்டத்தின் கீழ் அரச திரைப்பட கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டதோடு 1980 ஆம் ஆண்டில் அது தேசிய திரைப்பட கூட்டுத்தாபனமாக பெயரிடப்பட்டது என அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது திரைப்படத்துறை பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பின்னடைவை சந்தித்துள்ளதாகவும் அத்துறையை மீண்டும் மேம்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தலில் ஈடுபடும் சுயாதீன நிறுவனம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தொலைக்காட்சி கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான வழிகாட்டுதலுக்காக அக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு சுயாதீன நிறுவனம் ஒன்று காணப்படுவது அவசியம் என தெரிவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633


## Stock Market declines modestly after four consecutive days of rises…

**Daily Market Watch**
06th June 2023

### Market Commentary


Following four consecutive days of rises, the Colombo Stock Market ended yesterday's trading session with the All Share Price Index shedding 0.23% to close at 8,746.45, while the S&P Sri Lanka 20 Index declined by 0.46% to close at 2,477.87. Turnover recorded LKR 482mn with trading in John Keells Holdings accounting for 20% of the total. Foreign purchase of Chevron Lubricants Lanka amounting to LKR 26mn was recorded during the day.

With the Average Weighted Prime Lending Rate (AWLR) having declined to 20.29% last week, we expect the AWLR to decline further and fall below 15.00% over next 3 months. Against this backdrop, we expect the Stock Market to perform due to lower interest rate on margin facilities, movement of funds from fixed income to stocks and expectations of higher earnings growth due to pick of economic activity.


### Market Performance

| | 06.06.2023 | 05.06.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,746.5 | 8,766.6 | -0.23 |
| S&P SL 20 Index | 2,478.4 | 2,489.9 | -0.46 |
| Turnover (LKR mn) | 482.2 | 710.4 | -32.1 |
| Foreign Purchases (LKR mn) | 29.6 | 12.5 | 136.3 |
| Foreign Sales (LKR mn) | 10.8 | 8.5 | 26.9 |
| Market Cap (LKR bn) | 3,685.5 | 3,698.9 | -0.4 |
| Market Cap (US$ bn) | 12.6 | 12.7 | -0.4 |
| Traded Companies | 232 | 239 | -2.9 |
| Market PER (x) | 4.7 | 4.8 | -0.4 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | -1.1 |
| Dividend Yield (%) | 4.3 | 4.3 | 0.2 |


### Top Gainers and Loosers





### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 06.06.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 20.29% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.84% |
| Treasury Bill Rate (364 Days) | 22.91% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 25.20% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS
Aitken Spence PLC (SPEN) - LKR 4.00. XD date - 04.07.2023.
Royal Ceramics Lanka PLC (RCL) - LKR 0.50. XD date - 04.07.2023.
LB Finance PLC (LFIN) - LKR 3.00. XD date - 04.07.2023.
Central Finance Company PLC (CFIN) - LKR 1.75. XD date - 04.07.2023.
Swisstek (Ceylon) PLC (PARQ) - LKR 0.20. XD date - 04.07.2023.
Lanka Tiles PLC (TILE) - LKR 1.10. XD date - 24.07.2023.
Lanka Walltile PLC (LWL) - LKR 0.90. XD date - 04.07.2023.
Aitken Spence PLC (SPEN) - LKR 4.00. XD date - 28.06.2023.
C I C Holdings PLC (HHL) - LKR 2.50. XD date - 04.07.2023.
Watawala Plantations PLC (WATA) - LKR 4.00. XD date - 26.06.2023.
Sunshine Holdings PLC (SUN) - LKR 1.15. XD date - 26.06.2023.
Central Industries PLC (CIND) - LKR 3.00. XD date - 30.06.2023.
Hemas Holdings PLC (HHL) - LKR 1.95. XD date - 04.07.2023.
Hayleys Fabric PLC (MGT) - LKR 0.10. XD date - 26.06.2023.
Kelani Valley Plantations PLC (KVAL)- LKR 1.50. XD date - 27.06.2023.
Dipped Product PLC (DIPD) - LKR 0.50. XD date - 28.06.2023.
Haycarb PLC (HAYC) - LKR 1.00. XD date - 30.06.2023.
Keells Food Products PLC (KFP) - LKR 0.50. XD date - 30.06.2023.
PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date - 20.07.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு SJB கோரிக்கை

## அமைப்பாளர் திஸ்ஸ வலியுறுத்து

தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு ஜனாதிபதியால் தனித்து எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது. எனவே தேர்தல் நடத்தப்பட வேண்டுமா? இல்லையா? என்பதை அறிவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் (05) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில், சுதந்திரமான தேர்தலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலேயே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து அமைந்துள்ளது.

தேர்தலை நடத்த முடியாதென்பதை ஜனாதிபதியால் தீர்மானிக்க முடியாது. மக்கள் தேர்தலை விரும்புகின்றனரா? இல்லையா? என்பதை அறிய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதனை விடுத்து ஜனாதிபதியின் விருப்பத்துக்கேற்ப தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு இடமளிக்க முடியாது. தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, இது தொடர்பில் தற்போது ஜனாதிபதி கருத்துக்களை வெளியிட்டுள்ளமை பொருத்தமற்றது. ஜனாதிபதித் தேர்தலை ஒரு வருடத்துக்கு முன்னரே நடத்துவதற்காக சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். இதை ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

எனவே, ஜனாதிபதி அதற்கான நடவடிக்கைகளையேனும் எடுக்க வேண்டும். எதற்காக தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார்? என கேள்வி எழுப்பினார்.

## வற்றாப்பளை ஆலயத்தில்....

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வைகாசி பொங்கல் விழாவில் பாற்குடங்கள், ஆட்டக்காவடிகள், பறவைக்காவடிகளென நேர்த்திக்கடன்களை அடியவர்கள் நிறைவேற்றிய காட்சி பார்ப்போரை கண்குளிரவைத்தது. இங்கு,நேற்று முன்தினம் இரவு பெண்களால் எடுக்கப்பட்ட தூக்கு காவடி பலரையும் மெய்சிலிர்க்கவைத்தது.

உள்நாட்டு போரின் பின்னர் பெண்ணொருவர் தொடர்ச்சியாக வற்றாப்பளை அம்மனுக்கு தூக்கு காவடி எடுதுவருகிறார். நேற்று முன்தினமும் வேறு இரு பெண்களும் பறவைக்காவடி எடுத்துவந்து அன்னைக்கு தமது நேர்த்திக்கடன் செய்திருந்தமை வற்றாப்பளை கண்ணகை அம்மனின் பெருமையை மேலும் எடுத்தியம்புவதாக அமைந்திருந்தது.

## கஜேந்திரகுமார் MPக்கு...

நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதவான் ஜெமீல் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வேளையில்,அவர் நீதிமன்றில் ஆநராகியிருக்கவில்லை. மேலும்,பொலிஸ் நிலையத்திலும் கஜேந்திரகுமார் எம்,பி வாக்குமூலம் வழங்கத் தவறியிருந்தார். இதையடுத்து, வெளிநாட்டு பயணங்களுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டது. இதேவேளை, நேற்று முன்தினம் வற்றாப்பளை பொங்கல் விழாவில், ஆலயத்தில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## நாட்டில் மீண்டுமொரு...

பகுதியில் நிலநடுக்கம் பதிவாகியிருந்ததாக புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் தெரிவித்திருந்தது.

எனினும், இந்நிலநடுக்கம் காரணமாக பாதிப்புகள் ஏற்படவில்லை என்றும் தகவல்கள் வெளியாகின. இந்த சூழலிலே மீண்டும் இரவு வேளையில், நிலநடுக்கம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நில அதிர்வு மஹாகனதராவ, ஹக்மன, பல்லேகலை மற்றும் புத்தல ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நில அதிர்வு அளவீடுகளில் பதிவாகியுள்ளதாக அப்பணியகம் குறிப்பிட்டுள்ளது.

## இலங்கைக்கு கடத்தவிருந்த...

முத்துப்பேட்டை கடலோர பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக திருவாரூர் மாவட்ட கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து கியூ பிரிவு பொலிஸார், நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முத்துப்பேட்டை அருகே உள்ள அலையாத்தி காட்டில் தீவிர சோதனை நடத்தினர். அங்கு சந்தேகத்துக்கிடமாக நின்ற மூன்று பேர் தப்பியோடினர். விரைந்து செயற்பட்ட பொலிஸார் மூவரையும் மடக்கி பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில், இவர்கள் அலையாத்தி காட்டில் 10 மூடை கஞ்சா வைத்திருப்பது தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து கஞ்சா மூட்டைகளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

## கனரக வாகனத்துடன்...

இருவர் ஸ்தலத்திலே பலியாகினர். இச்சம்பவம் நேற்று (06) காலை அலுத்ஓயா, சிங்ககம பகுதியில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து கிண்ணியாவுக்குச் சென்ற வேன் ஒன்றும், திருகோணமலையிலிருந்து கொழும்புக்குச் சீமேந்து ஏற்றிச்சென்ற *Cement Bulk Carrier* கனரக வாகனமுமே, இவ்வாறு மோதி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் கிண்ணியா பகுதியைச் 45 மற்றும் 47 வயதுடைய இருவரே, பலியானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். வேனில், பயணித்த மற்றொருவர் பலத்த காயங்களுடன் அதிதீவிர சிகிச்சை பிரிவில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## மலையகம் மீது... (03ஆம் பக்கத் தொடர்)

நிறுவன மற்றும் அரச பிரதிநிதிகளுடனும் தமிழ் முற்போக்கு கூட்டணி தொடர்ச்சியாக நடத்தி வரும் கலந்துரையாடல்கள், எம்மால் வழங்கப்பட்டுள்ள எழுத்து மூலமான ஆவணங்கள் காரணமாகவே இந்தத் தெளிவு தற்போது சர்வதேச சமூகத்துக்கு ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.இத்தகைய எமது முயற்சிகள் எதிர்வரும் வாரங்களிலும் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் சுமார் 15 இலட்சம் மலையக தமிழரின் தேசிய அரசியல் அபிலாசைகள் மற்றும் அவர்களது வாழ்வாதார நிலைமைகள் தொடர்பான எமது அறிவுறுத்தல்கள் பலனளிக்க ஆரம்பித்துள்ளதென்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார். அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள "அஸ்வெசுமஆறுதல்" என்ற நாளாந்த பிரிவினருக்கான கொடுப்பனவுகள் தொடர்பிலும் நாம் எடுத்துரைத்துள்ளோம்.இது, இன்று உலக வங்கியினதும், அரசாங்கத்தினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை பெற்றுள்ளன. "அஸ்வெசுமஆறுதல்" திட்டம் தொடர்பாக, உலக வங்கியுடனான எமது அடுத்த கட்ட காத்திரமான பேச்சுகள் அடுத்துவரும் சில நாட்களில் நடைபெறும்.

நாம் அரசில் அங்கம் வகிக்கும் போதும் கணிசமாக பணி செய்தோம். இன்று அரசில் அங்கம் வகிக்கவில்லை என்பதற்காக, நாம் அங்கம் வகிக்கும் எமது அரசு மீண்டும் உருவாகும் வரை ஒய்வாக இருக்க மாட்டோம். எதிரணியில் இருந்தவாறு பணி செய்வோம் என்றார்.

## அம்பாறை மாவட்ட... (04ஆம் பக்கத் தொடர்)

தலைவர் மீரா இஸடீன் சுகவீனம் காரணமாக ஒரு சில வருடங்கள் தலைமைப் பதவியிலிருந்து விலகியிருந்த காலகட்டத்தில் சம்மேளனத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்த தொய்வு நிலைமை குறித்து உறுப்பினர்கள் பலரும் கூடத்தில் கவலை வெளியிட்டனர்.

கடந்த 22 வருடங்களுக்கு மேலாக மேற்படி சம்மேளனத்தின் ஆளுமையும், செயற்திறனும் மிக்க தலைவராக செயற்பட்டுவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ்.இஸடீன்,

கிழக்கில் பிராந்திய ஊடகவியலாளர்களின் நலன்சார் பல்வேறு வேலைத்திட்டங்களை சம்மேளனம் மூலம் முன்னெடுத்து வந்ததுடன், தேசிய மற்றும் கிழக்கு ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் பல முக்கியத்துவமிக்க நிகழ்வுகளையும் தமது பெருமுயற்சியில் சிறப்புற நடத்தினார்.

கிழக்கிலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீமின் ஊடகத்துறை ஐம்பது ஆண்டுகள் நிறைவு விழாவை சம்மேளனம் சார்பில் பெருவிழாவாக நடத்தியதுடன், 'பொன் விழாக்காணும் சலீம்' எனும் சிறப்பு மலரொன்றையும் வெளியிட்டமையும் அவரது ஆளுமை செயற்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

பிராந்திய ஊடகத்துறைக்கு பெருமை சேர்த்த பெரும் ஆளுமையான கலாபூஷணம் மீரா எஸ். இஸடீன் மீண்டும் அம்பாறை மாவட்ட ஊடக வியலாளர் சம்மேளனத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்து பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

மேலும் சம்மேளனத்தின் புதிய செயலாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.ஏ.சமட், பொருளாளராக இஸட். ஏ.எம். றகுமான் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் சம்மேளன சிரேஷ்ட ஆலோசகர்களாக கலாபூஷணம் ஏ.எல்.எம். சலீம், எஸ்.சிறாஜுடீன், எம்.ஐ.எம்.சம்சுடீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# எழுபதாவது வயதில் காலடி பதிக்கும் வண. பொரலுகொட இந்தரதன தேரர்

சந்தர்மகீர்த்தி ஸ்ரீ ரத்தினசாரபி தான சல்பிடி கோரளையின் உப தலைமை சங்க நாயக்க, அதிவணக்கத்துக்குரிய பொரலுகொட இந்தரதன தேரர், புத்தர் பெருமானின் உபதேசங்களுக்கு அமைய ஒழுக்கமுடன். அறிவுடன் தர்ம வழியில் வாழும் பௌத்த தேரர் ஆவார்.

இங்கு நாம் கவனம் செலுத்துவது இன்று (7) தனது 70ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் வணக்கத்துக்குரிய இந்த ரத்தின தேரர் குறித்தாகும்.

பொரலுகொட இந்தரதன தேரர் செல்வம், அதிகாரம் பதவிகளுக்கு முன்னால் மாறாத, எல்லா இடங்களிலும் ஒரே விதமாக செயல்படுபவர். அவர் நாட்டு மக்களின் கௌரவத்திற்கும் உரியவர். தன்னலம் கருதாத பொதுநலம் கருதும் குணம் தேரரிடம் காணப்படும் விஷேட அம்சமாகும். அதனால்தான் அதிக வணக்கத்துக்குரிய பொரலுகொட இந்தரதன தேரர் துறவி வாழ்க்கைக்கு அர்த்தமாகின்றார்.

ஆனால் அந்த உத்தமமான வாழ்க்கையை அனைத்து தேரர்களாலும் அடைய முடியாது என்பதை சிந்திக்க வேண்டும். இலங்கையின் புத்த சாசனத்துக்கு, இலங்கை மக்களுக்கு அவர் பெரும் பணியாற்றுகின்றார். அது பற்றி கருதும் போது எமது தேரர் மேற்கொண்ட பணிகள் ஏராளம். இளம் வயதை அவர் கடந்திருந்தாலும் மனதால் இளைஞராக புதிய எண்ணங்களைக்



கொண்டவர். அவ்வாறான தேரர் வயதானவர், பண்புமிக்கவர், தியாக சீலமானவர், எளிமையானவர்.

பிக்குகள் அனைவருக்கும் எடுத்துக் காட்டானவர். ஒருபோதும் எந்த இடத்திலும் உயர்வு, தாழ்வு பேதம் இன்றி சம நிலையில் தன்னைப் பணிபவர்களுக்கு பணி செய்யும் குணத்தைக் கொண்ட தேரராவார்.

உண்மையில் அவ்வாறான பொரலுகொட இந்தரதன தேரர் புத்த சாசனத்தை பாதுகாத்ததன் காரணமாக மக்களின் வணக்கத்திற்குரிய தேரராக மாறியுள்ளார். பௌத்த மக்களின் அன்பைப் பெற்றுள்ள தோடு பௌத்தர்கள் அல்லாதவர்களின் கௌரவத்தையும் பெற்றுள்ள

**கலாநிதி**
**பந்துல குணவர்தன...**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர்**

தேரராவார்.

பொரலுகொட இந்தரதன தேரர் நவீன யுகத்திற்கு தேவையான தேரர் ஆவார். அவ்வாறான எமது தேரர் களுத்துறை மாவட்டத்தில் அகலவத்தையில் பொரலுகொட என்னும் அழகான சிறிய கிராமத்தில் கருணாதாச ரணசிங்க என்னும் பெயரில் 1953 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஏழாம் திகதி பிறந்தார். அவர் அக்குடும்பத்தின் ஏழாவது குழந்தை. அவரின் தாயார் பிரபல சமூக சேவகியான ஜேன் நோனா அபேசிங்க.

தந்தை கிராமத்தலைவரான ரத்தேனிஸ் ரணசிங்க. கல்வி கற்றது இந்துருபிட்டிய பாடசாலையில் என்று கூறினாலும் அப்பாடசாலை இன்று ஸ்ரீ பியரதன கல்லூரியாகும். 1964 ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி துறவு வாழ்க்கையில் இணைந்த அவர் இன்று தனது எழுபதாவது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். இந்தரதனதேரர் பொரலுகொட இரத்தினசார நாயக்க தேரரின் முதலாவது துறவு மாணவராவார்.

அவர் 1965 ஆம் ஆண்டு பன்னிப்பிட்டிய வித்யாலங்கார பிரிவேனயில் கல்வி கற்றார். 1977 ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். 1984 இல் பதுளை பியலும பலகொல்ல கல்லூரியில் ஆசிரியராக, பதில் அதிபராக, அதிபராக பதவி வகித்தார். அதேவருடம் ஸ்ரீ ரத்னசார அறநெறி பாடசாலையை சிறிதாக ஆரம்பித்தார். அவர் அறநெறி பாடசாலையை ஆரம்பித்த விகாரையை தற்போது அனைத்து வகையிலும் அபிவிருத்தி செய்துள்ளார் .

பல பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றுள்ள அவர் பௌத்தம் தொடர்பாக பல ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார். 2009 ஆம் ஆண்டு அரச சேவையில் தொடர்ந்தும் பணியாற்ற சந்தர்ப்பம் இருந்தபோதும் ஓய்வு பெற்றார். கஷ்டப் பிரதேச பாடசாலைகளை அபிவிருத்தி செய்து பல விகாரைகளின் குறைகளை பூர்த்தி செய்து தர்மம் , ஒழுக்கம் தொடர்பாக கற்பித்து புத்தசாசனத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பணியாற்றிய அதி வணக்கத்திற்குரிய இந்தரதன தேரருக்கு தொடர்ந்தும் புத்தசாசனத்தின் அபிவிருத்திக்காக பணியாற்ற சக்தியும், தைரியமும் கிடைக்க வேண்டுமென நாம் பிரார்த்தனை செய்வோம்.

(தமிழில்: வீ. ஆர். வயலட்)

# மலையக மேம்பாட்டுக்காக அமெரிக்கா தொடர்ந்து உதவிகளை வழங்கும்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சங்

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

மலையக பெருந்தோட்ட மக்களின் எதிர்கால பாதையை மாற்றுவதற்கான தருணமே இது. மலையக மேம்பாட்டுக்காக அமெரிக்கா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் அழைப்பின் பேரில் நுவரெலியா மாவட்டத்துக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க தூதுவர், பல தரப்பு சந்திப்புகளில் ஈடுபட்டதுடன், மக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களையும் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இவ்விஜயத்தின் ஓரங்கமாக ஹற்றனில் உள்ள தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்துக்கு சென்ற அமெரிக்க தூதுவருக்கு, உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

அதன்பின்னர் அதிகாரிகள் மற்றும் அங்கு பயிற்சிபெறும் மாணவர்களுடன் தூதுவர் கலந்துரையாடினார். இதன்போது, இருதரப்பு உறவுகளுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி காந்தி சௌந்தர்ராஜன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்புச்செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்ட அமெரிக்க தூதுவர் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப கல்விக்கு உதவிகள் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

அத்துடன், கல்வி, சுகாதாரம் என மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இணக்கம் தெரிவித்தார்.

மேலும், நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மலையக பெருந்தோட்ட மக்கள் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டனர். பல தடைகள் இருந்தன. இதனை நான் அறிவேன். எனவே, மலையக பெருந்தோட்ட மக்களின் எதிர்காலத்துக்கான பாதையை மாற்றுவதற்கான சிறந்த தருணமே இது.

இலங்கை தற்போது மீண்டெழுகின்றது. வர்த்தகம் மற்றும் முதலீடுகளை கொண்டு வருவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். உங்களுக்கு உதவுவதற்கான பங்காளியாக நாம் இருப்போம் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

## ஆசிய மெய்வல்லுநர் முற்பாய்ச்சல் போட்டியில் காவத்தை பாடசாலை மாணவன் சாதனை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**



காவத்தை மத்திய மகா வித்தியாலய பாடசாலை மாணவன் மலித் யசிரு ஆசிய மெய்வல்லுநர் ( முற்பாய்ச்சல்) போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

தென் கொரியாவில் நடைபெற்ற இப்போட்டியில் இவர் வெண்கலப் பதக்கத்தை வென்று நாட்டுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவருக்கு பிரமாண்டமான பாராட்டு விழாவொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

## கஞ்சா சுருட்டால் மனைவிக்கு சூடு வைத்த கணவன் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தனது மனைவியை கஞ்சா சுருட்டால் சூடு வைத்து துன்புறுத்திய கணவன் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை சமனலவெவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பம்பஹின்ன கிராமத்தில் வசிக்கும் நபரொருவரே இவ்வாறு மனைவியை துன்புறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பல நாட்களாக கஞ்சா புகைத்து விட்டு போதையில் தனது வீட்டுக்கு வந்து மனைவியை சித்திரவதை செய்துவந்துள்ளார். எனினும் தொடர்ந்து அவருடைய சித்திரவதையை பொறுக்கமுடியாத மனைவி இதுதொடர்பில் சமனலவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த பின்னர் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## இலஞ்சம் பெற்ற கமநல சேவைகள் அதிகாரிகள் இருவர் கைது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

அலவத்துகொடை பிரதேச கமநல சேவைகள் மத்திய நிலைய அதிகாரிகள் இருவர் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலஞ்சத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். வயற்காணி ஒன்றை தரைக்காணியாக மாற்றி போலி ஆவணம் தயாரித்து வழங்குவதற்கே ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர் இது தொடர்பாக இலஞ்சத் திணைக்களத்திற்கு அறிவித்ததையடுத்து அலவத்துகொடை கமநலசேவைகள் காரியாலத்தில் வைத்து கையும் களவுமாக கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களில் ஒருவர் விவசாய ஆய்வு உத்தியோகத்தராகும். மற்றயவர் உற்பத்தி உதவி அதிகாரியாகும். சந்தேகநபர்களை மாத்தளை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் நேற்று மடகொம்பரை தோட்டத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள பழமையான லயன் குடியிருப்புகளை சென்று பார்வையிட்டார். இதன்போது 150 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பழமையான லயன் வீடுகளையும் மக்களின் முயற்சியினால் மறுசீரமைக்கப்பட்ட லயன் வீடுகளையும் அமெரிக்க தூதுவர் பார்வையிட்டார். இவ்விஜயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் கலந்துகொண்டார்.**



## மலைச்சாரல்

## மினிப்பே பிரதேச சபையில் மூலிகைத் தோட்டம்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

மினிப்பே பிரதேச சபையின் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் மூலிகைத் தோட்டமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண ஆளுநர் முதலாவது மூலிகைச் செடியை நாட்டி அதனை ஆரம்பித்து வைத்தார். மேற்படி திட்டத்தின் அடிப்படையில் திண்மக்கழிவுகளை பசளையாக மாற்றி அதனையும் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நுவரெலியாவில் அதிக விலையில் சமையல் எரிவாயு விற்பனை; மக்கள் புகார்

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

நுவரெலியாவில் அதிக விலையில் சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதுதொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் கிளை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாவால் கடந்த (4) ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் உத்தியோகபூர்வமாக குறைக்கப்பட்ட போதிலும் நுவரெலியா மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களில் பழைய விலைக்கே விற்பனை செய்வதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். மேலும் விற்பனையாளர் பற்றுச்சீட்டு வழங்க மறுத்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். விலை அதிகரிக்கப்படும்போது உடனடியாக அதிகரிக்கின்றனர். எனினும் விலை குறைக்கப்படும்போது வர்த்தகர்கள் விலையை குறைப்பதில்லையென பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.06.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5136 | ரூ. 10,000,000.00 | S | 8 8 6 3 8 5 |
| கொவிசெத (Govisetha) | 3378 | ரூ. 60,402,707.20 | B | 01 14 45 63 |
| தன நிதானய | 1166 | ரூ. 93,197,858.40 | L | 23 39 69 77 |
| ராசி சுப பலன் (Handahana) | 445 | ரூ. 3,140,491.80 | வெற்றி இலக்கினம்: தனுசு; விசேட இலக்கினம்: தனுசு | 23 44 49 56 |
| Mega Power | 1484 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 326,979,226.00 | N; சுப்பர் இலக்கம் 22 | 12 47 56 67 |
| ஜாதிக சம்பத | 1591 | ரூ. 11,925,865.60 | வெற்றி இலக்கினம்: ரிஷபம் | 6 9 6 8 0 3 |

Mega Power: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# கிழக்கின் குரல்



## சுற்று சூழலை பாதுகாக்கும் நோக்கில் ஏறாவூரில் மணல் அகழ்வு நிறுத்தப்படும்

### இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்

(மட்டக்களப்பு விசேட, பெரியபோரதீவு தினகரன், ஏறாவூர் சுழற்சி நிருபர்கள்)

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்வுக்காக இதுவரை 1300 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் சுமார் 1270 மணல் அனுமதிப் பத்திரங்களை நீக்கி தற்போது 30 அனுமதிப் பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் இவையும் நீக்கப்படும் என வர்த்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

செங்கலடி குமாரவேலியார் கிராமத்தில் உள்ள தாமரைக் குளத்தருகே திங்கட்கிழமை (05) இடம்பெற்ற உலக சுற்றுச் சூழல் தினத்தை அனுசரிக்கும் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அனுசரணையில் ஏறாவூர்ப் பற்று பிரதேச சபை மற்றும் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகம் ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில், கிராம பொது மக்களால் குளத்தருகே கொட்டப்பட்ட பொலித்தீன் பிளாஸ்ரிக் கழிவுகள் அகற்றப்பட்டதோடு மர நடுகையும் இடம்பெற்றது.

மேலும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களால் விழிப்புணர்வு நாடகமும் நிகழ்த்தப்பட்டது.



இந்நிகழ்வில் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலர் கே. பவாகரன், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைச் செயலாளர் வி. பற்குணம், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார், பிரதேச செயலக சுற்றுச் சூழல் அலுவலர் எம்.ஐ. ஐயூப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## த.தே.கூ. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸ் காலமானார்

(துறைநீலாவணை, வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வில்லியம் தோமஸ் தங்கத்துரை செவ்வாய்க்கிழமை (06) காலமானார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் உப தலைவரான இவர், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த க.பத்மநாதன் காலமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பாராளுமன்றம் சென்றவர்.

மருத்துவரான இவர், போர்ச் சூழல் நிலவிய காலத்தில் பிரசைகள் குழுவில் இணைந்து பணியாற்றியவர்.

மேலும் கல்முனை பிரதேசத்திலுள்ள பல்வேறு சமூக நல அமைப்புக்களில் இணைந்து சமூக நலப் பணியில் ஈடுபட்டவர்.

துறைநீலாவணைக் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர், தற்சமயம் பாண்டிருப்பில் வசித்து வந்த நிலையில் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்தார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் இன்று (07) புதன் கிழமை பாண்டிருப்பில் இடம்பெறவுள்ளது.

## இளம் குடும்பஸ்தர் மரணம்

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (6) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்ற போது அதில் ஒருவர் படகில் தூங்கியுள்ளார்.

நீண்டநேரமாக தூங்கிய நபரை எழுப்பிய ஏனைய மீனவர்கள் அவர் மரணமடைந்து கிடந்ததை அறிந்துள்ளனர்.

## கல்முனையில் போதைப் பொருள் கருத்தரங்கு

(மருதமுனை தினகரன் நிருபர்)

கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் தடுப்பு கருத்தரங்கு வியாழக்கிழமை (01) மருதமுனை சமுர்த்தி வலயத்திற்குட்பட்ட பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் சிரேஷ்ட தலைமைபீட முகாமையாளர் ஏ.ஆர் எம்.சாலிஹ் கலந்து கொண்டார். வளவாளராக சிரேஷ்ட உளவளத்துணையாளரும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருமான என்.எம்.நௌஸாத் மற்றும் வலய உதவி முகாமையாளர் பி.எம். இஷாக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சைபுதீன் மற்றும் சங்கங்களின் தலைவர்கள், சமுர்த்திப் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

## மாணவர்களுக்கு பொலிசார் விடுக்கும் வேண்டுகோள்

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

சிறுவர் கடத்தல் தொடர்பாக பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டும் வேலைத் திட்டத்தில், மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் துண்டுப் பிரசுரம் மூலம் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்கள்.

'மட்டக்களப்பு தலைமை பொலிஸார் விடுக்கும் பாடசாலை மாணவர்களுக்கான அறிவித்தல்' என வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் பாடசாலை அதிபர்கள் உரிய வகுப்பாசிரியர்கள் மூலம் அல்லது காலை ஒன்றுகூடலில் இது தொடர்பான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதற்கமைவாக பாடசாலை முடிந்தவுடன் மாணவர்கள் அநாவசியமாக வெளியில் நிற்காமல், வீடுகளுக்கு உடன் செல்ல வேண்டும்.

இனந்தெரியாதவர்கள் வாகனங்களில் ஏற்றி வீடுகளுக்கு விடுகிறோம் என மாணவர்களை பணித்தால் வாகனங்களில் ஏறக் கூடாது, என்பதோடு மாணவர்கள் தங்களின் பெற்றோர்களுக்கும் தெரியப்படுத்த அறிவுரை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக சந்தேகத்திற்கிடமானவர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால், பொலிஸ் அவசர அழைப்பிற்கு 119, 0652224356 மற்றும் 0652224422 ஆகிய இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## காரைதீவில் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு



(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் இறுதி நிகழ்வான குளிர்த்தி பாடும் சடங்கு செவ்வாய்க்கிழமை (6) பக்திபூர்வமாக சிறப்பாக நடைபெற்றது.

இம் முறை வைகாசி திருக்குளிர்சி சடங்கு கடந்த மூன்று வருடகாலத்தை விட ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கடந்த 29 ஆம் திகதி கல்யாணக்கால் நடுதலுடன் ஒருவார காலமாக பறை மேளம் குழல் ஒலிக்க, கப்புகன்மார் முன்னிலையில், உடுக்கை ஒலியுடன் பக்தர்களின் அரோஹரா கோஷம், குரவை ஒலிக்கு மத்தியில் பகலில் பச்சை கட்டல் இரவில் ஊர்சுற்றுக்காவியம் பாடல் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் 12ஆம் திகதி எட்டாம் சடங்கு பூஜை இடம் பெறும். இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மருதமுனையில் தெருவிளக்குகள்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

மருதமுனை சுனாமி வீட்டுத் திட்டத்தில் உள்ள, உள்ளக தெருக்களுக்கான மின் விளக்குகளை பொருத்தும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை (05) மருதமுனை சுனாமி வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம் அஸீம், பொறியியலாளர் ஏ.ஜ.ஜௌஸி தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வீட்டுத்திட்டத்தில் ஏற்கனவே தனித் தனி வீடுகளுக்கான மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், தெருக்களில் உள்ள மின் விளக்குகள் இதுவரை காலமும் இல்லாமையினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு உட்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## அறுகம்பே பிரதேசத்தில் தொட்டிகள் வழங்கும் நிகழ்வு



(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

இலங்கையின் சிறந்த சுற்றுலாத் துறை தளமாக விளங்கும் அறுகம்பேக்கு வெளிநாட்டு உல்லாச பயணிகள் தற்போது பெருமளவில் வரத்தொடங்கியுள்ளனர்.

கடற்கரை பிரதேசத்தையும் கடல் நீரலைச்சறுக்கல் பிரதேசத்தை துப்புரவு செய்யும் பணிகளில் இங்குள்ள துறைசார் திணைக்களங்கள், பிரதேச சபையினர், தொண்டர் மற்றும் சிவில் சமுக அமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்றவாரம் அறுகம்பே கிலீன் லங்கா அமைப்பினர் மீள் சுழற்சிக் குப்பைகளை ஒன்றுசேர்க்கும் தொட்டி களை முக்கிய தளங்களில் வைத்துள்ளனர்.

இந்தப் பணியை கடந்த செவ்வாய்க்கிழமை அமைப்பின் தலைவர் எ.முசம்மில், செயலாளர் எச்.எம் இமாம் ஆகியோர் அம்பாறை மாவட்ட ஜே.எம்.எ. டக்ளசிடம் குப்பைதொட்டிகளை வழங்கி ஆரம்பித்து வைத்தனர்.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமால் நெத்திமணி, மொனராகலை பொலிஸ் அத்தியட்சகர் எ.எஸ். பீ. குணசிறி, பொத்துவில் பிரதம பொலிஸ் உத்தியோகஸ்தர் பீ.எம். கே.தீ. செனிவிரத்ன, பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்றில் நடைபெற்ற பொசன் மிகுந்து பெரஹரா நிகழ்வு

(வாச்சிக்குடா விசேட நிருபர் )

அக்கரைப்பற்று ஸ்ரீ தம்மரெத்தின சிங்கள மகா வித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஒருங்கிணைப்பில், அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயாராம மகா விகாரையில் மூவின மக்களையும் உள்ளடக்கியதாக திங்கட்கிழமை (05) இடம்பெற்ற பொசன் மிகுந்து பெரஹராவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் முதல் முறையாக மூவின மக்களையும் உள்வாங்கி இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் இடம்பெற்ற பொசன் மிகுந்து மகா பெரஹராவில், புனித சின்னங்கள் அடங்கிய பேழை தாங்கிய இரு யானைகளும் பவனியாக சென்றதுடன் தமிழ், சிங்கள கலாசார நடன நிகழ்வுகளும் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து வருகை தந்த நடனக்கலைஞர்கள் மாணவர்கள் என பலரும் பங்குபற்றியதுடன், பொதுமக்களின் வரவேற்பையும் பெற்றுக்கொண்டனர்.



ஸ்ரீ விஜயாராம மகாவிகாரையில் இடம்பெறும் விசேட பூஜையின் பின்னர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக, ஆரம்பமான பெரஹரா பிரதேச செயலக மகா கணபதியை தரிசித்து, சாகாம வீதி ஊடாக அக்கரைப்பற்று மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து பொத்துவில் வீதி ஊடாக சரணபாலபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து அதே வீதியூடாக திரும்பி விகாரையினை அடைந்தது.

பின்னர் விகாரையின் உள்ளே அங்கு இடம்பெற்ற விசேட பூஜையுடன் நிறைவுற்றது.

பெரஹராவிற்கான ஒத்துழைப்பை பிரதேச வாழ் அனைத்து மக்களும் இணைந்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் மீண்டும் தென்னங் கன்றுகள் நடுகை

(மூதூர் தினகரன் நிருபர்)

கடந்த காலங்களில் பெருமளவில் அழிவுற்றுள்ள தென்னைகளை மீண்டும் உற்பத்தி செய்யும் முயற்சியில் வேதத்தீவு, ஜின்னா நகர், நாணல்சேனை, அறபாநகர், இறால்குழி கிராம தோட்ட கிராம மக்கள் தற்போது புதிதாக தமது தோட்டக்காணிகளில் தென்னங்கன்றுகளை நட்டு வருகின்றனர்.

பெருமளவிலான மக்கள் கடந்த கால அசாதாரண சூழல் நிலவிய காலங்களில் இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். இதனால் தென்னைகள் வெட்டப்பட்டும், யானைகளினாலும் பெரிதும் அழிவுற்றன.

தற்போது இக்கிராமங்களில் மக்கள் மீண்டும் வசித்து வரும் நிலையில், தமது தோட்ட மேட்டு நிலங்களில் புதிதாக தென்னைகளை நடுவதில் வருவதில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## திருடன் பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி ஏ.எல்.எஸ். மாவத்தை மற்றும் நாவற்குடாவிலுள்ள படுகட்டார் வீதியிலுள்ள இரு வீடுகளில் நுழைந்து, திருட்டு முயற்சியில் ஈடுபட்ட 22 வயது இளைஞர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம்.எஸ். ஏ.றஹிம் தெரிவித்தார்.

காத்தான்குடியைச் சேர்ந்த இவ் இளைஞன் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கிராமமொன்றில் திருமணமுடித்துள்ளார்.

அங்கிருந்து சொந்த ஊருக்கு வருகை தந்து இவ்வாறு கொள்ளையிலீடுபட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## காசோலை கையளிப்பு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி வீட்டு லொத்தர் சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிரினால் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைமைபீட முகாமையாளர் ஏ. எம். ஹமிட், முகாமைத்துவ பணிப்பாளர் ரீ. பரமானந்தம், கருத்திட்ட முகாமையாளர் எஸ். எல். அஸீஸ், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எஸ். எம்.உனைஸ் மற்றும் பிரிவு உத்யோகத்தர் ஏ. ஜே. எம். அனீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஏறாவூர் பிரதேச செயலகத்தில் நிருவாக உத்தியோகத்தராக கடமையாற்றி இட மாற்றம் பெற்றுச் செல்லும் எஸ்.ஏ. றஹீமிக்கு ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜுத் நினைவுச் சின்னம் வழங்கி வைத்த போது. (படம்: ஏறாவூர் சுழற்சி நிருபர் )

# தினகரன் Business

# இலங்கை வங்கியின் 'BOC META' சமூக ஊடக வங்கிச் சேவை




இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கி டிஜிட்டல் வங்கிப் பயணத்தில் மற்றொரு மைற்கல்லை எட்டும் வகையில், வாடிக்கையாளர்களுக்கு ஈடிணையற்ற சமூக ஊடக வங்கி அனுபவத்தையும் அதிகளவிலான டிஜிட்டல் வங்கியியல் வசதிகளையும் வழங்கும் BOC META வங்கிச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது வட்ஸ்அப் வங்கி வசதியாகும்.

இதன் மூலம் இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் BOC META வங்கி மூலம் கணக்கு மீதி விசாரணை மற்றும் அந்தந்த வங்கிக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய பரிவர்த்தனைகள் (நடைமுறை, சேமிப்பு மற்றும் காலக் கணக்குகள்), கடன் அட்டைகள் மற்றும் கடன்கள் முதலான தகவல் சார்ந்த சேவைகளைப் பெற முடியும். Embedded Remittance Tracker வசதி வாடிக்கையாளர்களின் பண அனுப்பல் நிலைவரம் பற்றி அறிந்துகொள்ள உதவுவதோடு அருகிலுள்ள ATM/CDM/CRM கிளை மற்றும் BOC Connect முகவர் போன்றவற்றின் அமைவிடத்தைக் கண்டறியும் வசதிகளையும் வழங்குகிறது.

மேலும், வாடிக்கையாளர்கள் வைப்புகள், கடன்கள் மற்றும் அந்நிய செலாவணி வீதங்கள், புதிய கணக்குகள் பற்றிய தகவல்கள் நேரடி இணைப்புகளுடன் கூடிய சலுகைகள் பற்றிய தகவல், கணக்கு அட்டைகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றிய தகவல்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நேரலை முகவர் உரையாடல் (Live Agent Chat) கருவி BOC META வங்கியின் மற்றொரு முக்கிய அம்சமாகும், ஏனெனில் இது BOC வாடிக்கையாளர்கள் BOC தொடர்பு மைய முகவருடன் நேரடியாக உரையாடும் வசதியை வழங்குகிறது.

BOC META வங்கிச் சேவையை பெற விரும்பும் வாடிக்கையாளர்கள் BOC தொடர்பு எண்ணைச் சேமித்து (011 220 4444) அதை Whatsapp இல் கண்டறியலாம் அல்லது QR குறியீட்டை ஸ்கான் செய்து வெறுமனே 'Hi'என தட்டச்சு செய்து உரையாடலைத் தொடங்கலாம்.

# ஜித்தா 48ஆவது IsDB வருடாந்த சந்திப்பில் அமானா வங்கி



IsDB வருடாந்த சந்திப்பில், அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் மற்றும் தவிசாளர் அஸ்கி அக்பரலி ஆகியோருடன், IsDB குழுமத்தின் இடைக்கால பணிப்பாளர் நாயகம் அமிர் புக்விச் காணப்படுகின்றார்.

சவுதி அரேபியாவின், ஜித்தாவில் அண்மையில் இடம் பெற்ற 48ஆவது IsDB வருடாந்த சந்திப்பில் அமானா வங்கி பங்கேற்றிருந்தது. இந்த நிகழ்வில் OIC அங்கத்துவ நாடுகளின் நிதி அமைச்சர்கள், மத்திய வங்கியின் ஆளுநர்கள் மற்றும் IsDB முதலீடுகள் வங்கிகள் மற்றும் நிறுவனங்களின் விருந்தினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நான்கு நாட்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வு, 57 OIC அங்கத்துவ நாடுகளின் பிரசன்னத்துக்கு மேலதிகமாக, உலகளாவிய ரீதியில் 90 நாடுகளின் 4000க்கும் அதிகமானவர்களை கவர்ந்திருந்தது.

உலக வங்கி, IMF, UNDP மற்றும் ADB போன்ற 89 முன்னணி பிராந்திய மற்றும் சர்வதேச பங்காளர் நிறுவனங்களும் இணைந்து கொண்டன. அமானா வங்கியின் சார்பாக அதன் தவிசாளர் அஸ்கி அக்பரலி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், பங்குபற்றுநர்களுடனான அமர்வுகளில் உயர் மட்ட கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர். 'Partnerships to Fend off Crises' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், கைகோர்ப்புகள், புத்தாக்கம் மற்றும் தந்திரோபாய இணைவுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தன.



ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் வடக்கு பிராந்தியத்தில் தனது இருப்பை விரிவுபடுத்தியுள்ளது. வடக்கு பிராந்தியத்தில் இரண்டு முகவர் வர்த்தக அபிவிருத்தி நிலையங்களை (ABDC) திறந்துள்ளது. புதுக்குடியிருப்பு,கொடிகாமம் கிளைகளை பிரதிப் பொது முகாமையாளர்/சந்தைப்படுத்தல் திருமதி நமலி ஏ.சில்வா திறந்து வைத்த போது பிடிக்கப்பட்ட படங்கள்.

# மக்கள் வங்கியின் ஒருங்கிணைந்த வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 4.6 பில்லியனாக பதிவு



மக்கள் வங்கியானது 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த அதன் காலாண்டிற்கான நிதியியல் பெறுபேறுகளின்படி மொத்த ஒருங்கிணைந்த செயல்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் ஆகியன முறையே ரூபா 24.0 பில்லியன் மற்றும் ரூபா 7.2 பில்லியன் (2022 1வது காலாண்டு: ரூபா 42.6 பில்லியன் மற்றும் ரூபா 11.0 பில்லியன்) தொகையாகப் பதிவாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டைப் போலவே, இக்காலாண்டில் அதிக வட்டிச் செலவுகள் தொடர்ந்து வகைப்படுத்தப்பட்டதுடன், இக்காலப்பகுதியில் நிலவிய அதிக வட்டி வீத சூழலே இதற்கு காரணம். இது 2022, 1 ஆம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, ஒருங்கிணைந்த தேறிய வட்டி வருமானம் 49.7% ஆல் குறைவடைந்து ரூபா 15.3 பில்லியனாக இருந்தது. வங்கியின் சில கடன்களின் மீள்விலையிடல் நடவடிக்கையை அதன் அதிகம் பாதிக்கப்படக்கூடிய வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு ஒத்திவைக்கும் முயற்சிகளின் பிரதிபலிப்பிற்கு இதுவும் ஒரு வகையில் காரணமாகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் ரூபா 4.5 பில்லியன் ஆகும். இது 2022, 1 ஆம் காலாண்டின் போது ஒரு குறிப்பிட்ட உருப்படி நீங்கலாக, இதே காலாண்டு ஒப்பீட்டு அடிப்படையில் 40.0% வளர்ச்சியைக் காண்பித்துள்ளது. பணவீக்கத்தை பிரதிபலிக்கும் செலவு அழுத்தங்களைப் பொறுத்தவரையில், இதில் பெரும்பாலானவை 2022, 1 ஆம் காலாண்டுக்குப் பின்பு எழுந்தவை. ஒருங்கிணைந்த மொத்த செயல்பாட்டுச் செலவுகள் 10.1% ஆல் அதிகரித்து ரூபா 14.4 பில்லியனை எட்டியது (2022, 1 ஆம் காலாண்டு ரூபா 13.1 பில்லியன்). இது தொழில்துறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டதுடன், அதன் ஒரு பகுதியாக, நியாயமான முறையில் சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செலவுக் கட்டுப்பாட்டிற்கான குழுமவாரியான அதிக முயற்சிகளையும் பிரதிபலித்தது.




Janet அழகுதாசனப் பொருட்கள் விற்பனை நிலையம் யாழ்ப்பாணத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது,...

# அழகிய, பல்வகை தங்க நகைகளின் தொகுப்பை வெளியிடும் Pure Gold by Tiesh



தியேஷ் (Tiesh) ஆனது, அதன் ஒப்பற்ற கைவினைத்திறன் மற்றும் நீண்ட காலத்திற்கு பொருத்தமான வடிவமைப்பு ஆகியன காரணமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு புகழ் பெற்ற நகை வர்த்தக நாமமாகும். அதன் துணை நிறுவனமான Pure Gold by Tiesh இன் கீழ் அதன் நவீன வடிவமைப்புகளைக் கொண்ட (filigree) தொகுப்பை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இது ஐரோப்பா, இத்தாலி, துருக்கி, துபாய் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர நகைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. இத்தொகுப்பில் இத்தாலிய 18 கரட் நகைகள் மற்றும் முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட 22 கரட் தங்கத் துண்டுகளும் உள்ளன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நவீன வடிவமைப்புகளைக் கொண்ட filigree நகைத் தொகுப்பானது நேர்த்தியான, பாரம்பரியமான, உயிர்ப்புமிக்க தன்மையை வெளிப்படுத்தும் ஈர்க்கக்கூடிய காதணிகள், நெக்லஸ்கள், வளையல்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் கவர்ச்சிகரமான தயாரிப்புகளை கொண்டுள்ளன. மூவர்ணம், இளஞ்சிவப்பு தங்கம், வெள்ளைத் தங்கம், மஞ்சள் தங்கம் ஆகிய வண்ணங்களில், Pure Gold by Tiesh தொகுப்புகள் கிடைக்கின்றன. குறிப்பாக திருமண பருவகாலங்களுக்கு ஏற்றவகையில், அதன் ஒவ்வொரு அம்சமும் நேர்த்தியாக, மிகக் கவனமாக இந்தத் தொகுப்பை Tiesh தொகுத்துள்ளது.

Pure Gold by Tiesh மற்றும் அதன் சமீபத்திய Filigree தொகுப்பு பற்றிய மேலதிக விடயங்களை அறிய, இல. 253, R. A. டி மெல் மாவத்தை, கொழும்பு 03 இல் உள்ள அதன் காட்சியறைக்கு விரையுங்கள்.

# இவ்வருட அன்னையர் தினத்தில் உங்கள் அம்மாவுக்கு அன்பான அனுபவத்தை வழங்கிய TikTok



தாய்மார்களைப் பாராட்டவும், தாயின் அன்பைப் போற்றும் தனித்துவமான யோசனைகள் மற்றும் உத்வேகங்களைக் கண்டறியவும், உலகெங்கிலும் உள்ள பலருக்கு TikTok ஒரு சிறந்த தளமாகும். இந்த சிறப்பு நாளில், TikTok உள்ளடக்கத்தை உருவாக்குபவர்கள் தங்கள் ஆக்கப்பூர்வமான மற்றும் ஈர்க்கக்கூடிய உள்ளடக்கத்தை உருவாக்கி, அவர்களின் ஆர்வத்தை TikTok மூலம் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த செல்வாக்கு செலுத்துபவர்கள் புத்தாக்கமான பரிசு யோசனைகள் மற்றும் வேடிக்கையான பரிந்துரைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள், பின்தொடர்பாளர்களுக்கு அன்னையர் தினத்தை ஸ்டைலாகவும் அன்பாகவும் கொண்டாட புதிய வழியை வழங்குகிறது. Mother's Day hub இல், உங்கள் தாயுடன் உங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ள பல்வேறு புத்தாக்கமான யோசனைகளைக் காணலாம்.

TikTok இன் சமூகம் #MothersDay என்ற ஹேஷ்டேக்கின் கீழ் தாய்மார்களைக் கொண்டாடவும் கௌரவிக்கவும் ஒன்றிணைந்தது. TikTok அன்னையர் தினத்தை கொண்டாடும் முன்னணி ஊடகமாக மாறியது, DIY திட்டங்கள் மற்றும் புதிய யோசனைகள் மற்றும் அம்மாக்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தியதற்காக அவர்களுக்கு பரிசில்களை வழங்குவதற்காக மறக்க முடியாத சுற்றுலா விருப்பங்களை அறிமுகப்படுத்துகிறது. அன்னையர் தினத்தை மறக்க முடியாத அன்பான நாளாக மாற்ற அனைத்து வகையான வேடிக்கையான மற்றும் ஆக்கப்பூர்வமான யோசனைகள் மற்றும் வாய்ப்புகளை TikTok வழங்குகிறது.

இலங்கையில் உள்ள TikTok பாவனையாளர்கள் தங்கள் தாய்மார்களை கௌரவிப்பதன் மூலமும், தாய்மார்கள் தங்கள் குடும்பங்களுக்கு அளிக்கும் ஊக்கம், ஆதரவு மற்றும் இரக்கத்தைப் பாராட்டுவதன் மூலமும் அன்னையர் தினத்தைக் கொண்டாடினார்கள். உள்ளூர் பிரபலங்கள் மற்றும் TikTok செல்வாக்கு செலுத்துபவர்கள் #MothersDay என்ற ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி தாய்மார்களுக்கான பாராட்டுச் செய்தியைப் பகிர பாவனையாளர்களை ஊக்குவித்தது.

கொரோனா முடக்கத்தில் முளைவிட்ட herb line

# online ஆயுர்வேத அழகு சாதன பொருட்கள் விற்பனையில் முன்னணியில்



ஹேர்ப் லைன் (herb line)குறுகிய காலத்தில் ஆயுர்வேத அழகு சாதன பொருட்களில் முன்னணியில் திகழும் நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் ஆயுர்வேத அழகு சாதனப் பொருட்கள் தரம் மற்றும் இயற்கையான பொருட்கள் அடங்கிய பிரத்தியேக தனிப்பட்ட கலவைகளில் உருவாக்கப்பட்டதாகும்.

இலங்கையில் 275,000 நிகழ்நிலை வாடிக்கையாளர்களை (herb line) கொண்டுள்ளது.நிகழ்நிலை ஆயுர்வேத அழகு சாதன பொருட்கள் விற்பனையில் முதல் தரத்தில் இருக்கிறது. இந் நிறுவனம் தற்போது கனடா, மலேசிய போன்ற நாடுகளிலும் தனது கிளைகளை நிறுவி விற்பனையில் ஈடுபட்டு நாட்டு அந்நிய வருமானம் ஈட்டலையும் மேற்கொண்டு வருகிறது. குறுகிய காலத்தில் இமாலய வளர்ச்சியை தொட்டு நிற்பதற்கு அந் நிறுவனத்தின் தலைவர், விற்பனை பணிப்பாளரான டாக்டர் பிரியதர்ஷன பெந்தொட்ட ஆரச்சியின் தொடர் உழைப்பே காரணம் என்றால் மிகையாகாது,..

அவர் கடந்து வந்த முள் பாதைகளும் முட்டுகட்டைகளை விவரித்த போது,...

ஜயவர்த்தன பல்கலைக்கழத்தில் விற்பனை முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு அதே துறையில் பல தொழில்களை செய்து இறுதியில் லேக்ஹவுஸ் நுகேகொடை கிளை முகாமையாளரின் அறிமுகத்தில் ஆயுர்வேத அழகுசாதன பொருட்கள் விற்பனை பிரதிநிதியாக வேலைசெய்யும் போதே இத்துறை தொடர்பில் எனக்கு ஈடுபாடு வந்தது.அத்தோடு ஆயுர்வேத துறையில் டிப்ளோமாவை முடித்து இந்தியாவில் சாஸ்ரபதி பல்கலையில் பட்டப்படிப்பை மேற்கொண்டேன். நான் பல்கலையில் படிக்கும் காலத்தில் கொழும்பு கோட்டையில் ஆயுர்வேத இலை குலைகளை வாங்கி வந்து இரவு அதை அவித்து எண்ணைதாயாரித்துள்ளேன். அதன் தொடர்ச்சியாக கொரோனா காலத்தில் அனைவரும் முடங்கிக் கிடந்த நேரத்தில் எனது ஆயுர்வேத அழகு சாதன உற்பத்தியை எனது வீட்டில் ஆரம்பித்தேன்.கொரோனா காலத்திலும் அதற்கு பின்னரான காலத்தில் டொலர் தட்டுப்பாட்டால் அழகுசாதன பொருட்கள் இறக்குமதி நிறுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு சிறிதாக உற்பத்தி ஆரம்பித்து onlinயில் விற்பனையை ஆரம்பித்தேன். முதலில் 'கேசவர்தனி' என்ற பெயரில் ஆயுர் வேத எண்ணெய் ஒன்றை தயாரித்து 'கொரோனா' காலம் என்பதால் onlineஇல் தான் விற்பனை செய்தேன். அவ்வாறே ஒவ்வொன்றாக ஆரம்பித்து செய்து வந்தேன். 06 மாதங்களில் நான் தொழிற்சாலையை அமைத்தேன்.அதுவும் என்னிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை.வியாபாரத்தில் வந்த பணத்திலே எல்லாவற்றையும் செய்தேன்.படிப்படியாக இரண்டு வருடத்தில் ஒரு நிலையான கட்டத்துக்கு நிறுவனத்தை கொண்டு வந்தேன். அப்போது பன்னாட்டு நிறுவனங்கள் எமது கம்பனியின் வளர்ச்சியை தடுக்க பல செயற்பாடுகளை மேற்கொண்ட போதும் நாம் அவற்றுக்கு முகம் முட்டிமோதி மீண்டு வந்தோம் என்றார். எனது மகனின் பெயரில் தயாரித்த 'ஆயுஷ்'என்ற சவர்க்காரத்திற்கு எதிராக யுனிலீவர் நிறுவனம் லண்டனில் இருந்து எனக்கெதிராக மனு அனுப்பியிருந்தது.அதையும் நான் சட்டப்படி முகம் கொடுத்து நிவர்த்தித்தேன்.ஆயுர்வேத அழகு சாதன பொருட்களை தயாரிப்பதற்கு எமது நாட்டில் மூலப் பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது.இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்கிறோம்.

# வடக்கின் உதயம்

## சிலாவத்துறையில் ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடம் திறப்பு



கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கமைய ISRC தனியார் நிறுவனத்தின் அனுசரணையில் சிலாவத்துறை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (05) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மக்கள் பாவனைக்காக இந்தக் கட்டடத்தை காதர் மஸ்தான் எம்.பி. திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல், முசலி பிரதேச செயலக பிரதேச செயலாளர் ரஜீவ், மன்னார் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஒருங்கிணைப்பாளர் மணிவர்ணன், ISRC நிறுவனத்தின் பணிப்பாளர் எம். சையாப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மன்னார் வைத்தியசாலை மீது வன்னி எம்.பிக்கள் கரிசனை செலுத்த வேண்டும்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைக்கு உரிய வசதிகளின்மையால் 100 கிலோமீற்றர் தூரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை கொண்டு செல்லும் போது உயிரிழக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக, அண்மையில் நடைபெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனைவரினதும் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்கொள்ள வேண்டுமெனவும், இதன்போது தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சீ.ரி.சீ. ஸ்கேனரின் அவசியம் தொடர்பாக ஆராயப்பட்டது.



இதன்போது, வடமாகாண பதில் சுகாதாரப் பணிப்பாளரும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி தெரிவித்த போது,

"சுகாதார நிலைமையில் மன்னாரும் முல்லைத்தீவும் மிகவும் பின்தங்கிக் காணப்படுகின்றன. நோயாளர்களை சிகிச்சைக்காக மன்னாரிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது நோயாளர்கள் அதிகளவில் உயிரிழக்கின்ற சம்பவங்கள் காணப்படுகின்றன.

இது முல்லைத்தீவுக்கும் பொருந்தும். மன்னார் வைத்தியசாலையில் ஆய்வுகூடம் காணப்படும் போது, கடுமையான நோயாளர்களை கவனிக்கக்கூடிய போதியளவான வசதிகளின்மையால் நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய நிலைமை உள்ளது.

அத்துடன், மன்னார் மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்கு வைத்திய நிபுணர்கள் வருவதிலும் பின்தங்கிய நிலைமையே காணப்படுகின்றது" என்றார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், இந்த விடயம் தொடர்பாக எழுத்து மூலம் எமக்கு அனுப்பி வைப்பதுடன், இதன் பிரதிகளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந்த விடயம் தொடர்பாக தாம் கவனம் செலுத்துவதாகவும், தெரிவித்தார்.


கட்டுநாயக்க சீதுவ நகர சபை

### கேள்வி அறிவித்தல்

இங்கு கீழ் அட்டவணையில் உள்ள கைத்தொழில்களை மேற்கொள்வதற்காக என்னால் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் C7 தரத்தில் பதிவுடன் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் சங்கத்தில் அங்கத்துவம் உள்ள நகர சபையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூ. 500.00 தொகை மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பாக அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு காசு செலுத்திய பின்னர் கேள்விப் படிவங்களை 2023.06.22 பி.ப. 3.00 வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை 2023.06.23 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு 'செயலாளர், கட்டுநாயக்க சீதுவ நகர சபை, சீதுவ' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து அலுவலக கேள்விப் பெட்டியில் உள்ளிடல் 2023.06.23 பி.ப. 2.00 இற்கு முன்பு இடம் பெற வேண்டியதுடன் அதன் பிறகு எந்த வகையிலும் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட வேண்டியதுடன் அழிக்கப்பட்டு வெட்டி அல்லது உருமாற்றம் செய்யப்பட்ட விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கிடைக்கப்பெறும் கேள்விகள் 2023.06.23 பி.ப. 2.00 ஐ தாண்டியவுடன் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது எந்தக் காரணமும் கூறாமலேயே நிராகரிக்கும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் இந் நகர சபையின் கேள்விச் சபைக்கு உரியது.

கேள்வி பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ் அலுவலகத்தின் கைத்தொழில் பிரிவில் தொ.பே. இலக்கம் 011-2253575ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**எஸ்.ஏ.கே.என். இந்திரஜித்,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி**
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை, சீதுவை.**

2023.06.06ம் திகதி
**கட்டுநாயக்க சீதுவ நகர சபை,**
**சீதுவை.**

| தொடர் இல. | செயற்றிட்டத்தின் பெயர் | கேள்வி வைப்புத் தொகை | தரம் |
|---|---|---|---|
| 01 | கட்டுநாயக்க 18ம் கட்டை பிரைம் லேன்ட் பொது வசதிகளுக்காக காணியைச் சுற்று மதில் மற்றும் தூண் நிர்மாணித்தல் | ரூ. 29,500.00 | C7 |



### கேள்வி அறிவித்தல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**கேள்வி இல.: 39/28.06.2023**

**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு HD/UHD 1ME DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEM ஒன்றின் பெறுகை**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு HD/UHD 1ME DIGITAL VIDEO PRODUCTION SWITCHER SYSTEM ஒன்றின் பெறுகைக்காக இலங்கை, கொழும்பு7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

உயர் தரத்திலான ஒலிபரப்பு உபகரணங்களின் உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் இக்கேள்வியில் பங்குபெற்றலாம். 2023-06-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளருக்கு (பெறுகைகள்) எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபா) இக்கூட்டுத்தாபன பிரதான கணக்காளரிடம் செலுத்துதல் வேண்டும். 2023-06-27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரின் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்வி ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்துக் கேள்விகளுடனும் விலைமனுப் பிணையொன்று (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உற்பத்தியாளர்களின் சார்பாக இக்கேள்வியில் பங்குபெறுவதற்கு அதிகாரமளிக்கப்படுவதற்காக முதன்மையாளர்களினால் வழங்கப்பட்ட தரஅங்கீகார/அற்றோணித்தத்துவ கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

FOB விலையில் முகவர் தரகுப்பணம் ஏதாவது உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தொகையானது தனியாக காட்டப்படல் வேண்டும்.

2023-06-28ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதி பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : +94 112 580 136/ தொலைநகல் +94 112 500373)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**
**இலங்கை.** **(SLRC Website : http://www.rupavahini.lk)**


## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம்

**மாங்குளம் குறூப் நிருபர்**





வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (05) இனிதே நடைபெற்று முடிந்தது.


அன்றையதினம் அதிகாலையில் முள்ளியவளைகாட்டு விநாயகர் ஆலயத்தில் பொங்கல் உற்சவம் நிறைவடைந்ததை தொடர்ந்து, அவ்வாலயத்திலிருந்து மடப்பண்டம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு கொண்டு வரப்பட்டு பொங்கல் உற்சவம் ஆரம்பமாகியது. இதன்போது தூக்குக் காவடி, பறவைக் காவடிகளை எடுத்தும் பால் செம்பு, கற்பூரச்சட்டிகளை ஏந்தியும் தத்தமது நேர்த்திக்கடன்களை பக்தர்கள் நிறைவேற்றினர். இதேவேளை, இம்முறை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் கடந்த வருடத்தை விட அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## வற்றாப்பளை அம்மன் ஆலயத்திலிருந்து வீடு திரும்பிய இளைஞர் விபத்தில் பலி

**யாழ். விசேட, சாவகச்சேரி விசேட, நாகர்கோவில் விசேட நிருபர்கள்**

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தினுடைய பொங்கல் உற்சவத்துக்குச் சென்று விட்டு, வடமராட்சி கிழக்கு குடத்தனை பிரதேசத்திலுள்ள தனது வீட்டுக்கு திரும்பிய இளைஞர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை (06) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார். 31 வயதுடைய குணசெல்வம் நிரோஜன் எனும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞர், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து கொடிகாமம் ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, இவரது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வரணி பிரதேசத்தில் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதாக, பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.


afc தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.03.2023 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 22.06.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
722, கோட்டை வீதி இராஜகிரிய
22.06.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600



### அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

வ/ப வயம்ப கிராமிய வங்கி சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளைாகச் செயற்படும் வ/ப புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புத்தளம், வனாத்தவில்லு எலுபங்குளம் பாலாவி பொத்துவில்லு கல் அடிய ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.04.25ம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2023.04.25ம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2023.06.26ம் திகதி மு.ப. 10.00 முதல் வரையறுக்கப்பட்ட புத்தளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவாளர்,**
**பொது முகாமையாளர்,**
**தொ.பே. இல. 032 2265270, 032 2265274**
**வ/ப புத்தளம் பலநோக்குக்**
**கூட்டுறவுச் சங்கம்.**


### பாக். வெளிச்சந்தை டொலர் விலை குறைந்தது

## செல்வந்தர்களே பலன் அடைவார்கள் என விமர்சனம்

கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் டொலர் கையிருப்பு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானில் அமெரிக்க டொலர் மதிப்பு 15 ரூபா வரை வெளிச்சந்தையில் குறைந்துள்ளதாகவும், பாக். மத்திய வங்கி எடுத்த நடவடிக்கையாலேயே டொலர் மதிப்பு குறைவதற்கான காரணம் என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பண அட்டைகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு பண பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதற்கான அனுமதியையும், அதற்கான டொலர்களை வங்கிகளுக்கு இடையிலான பணச் சந்தையில் பெற்றுக் கொள்ளவும் மத்திய வங்கி அனுமதி அளித்ததையடுத்தே வெளிச்சந்தையில் 311 அல்லது 318 ரூபாவாக விளங்கிய டொலரின் பெறுமதி 298 ரூபாவாகக் குறைந்திருப்பதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற முயற்சித்துக் கொண்டிருக்கும் பாகிஸ்தானுக்கு அந்நிதியம் விதித்த நிபந்தனைகளில் ஒன்றாகவும் இதை ஊடகங்கள் அடையாளப்படுத்துகின்றன. வெளிச் சந்தையில் டொலர் பெறுமதி குறைந்திருந்தாலும் டொலரின் அதிகாரபூர்வ விலை 311 ஆக நீடிக்கிறது. எனினும் வெளிச் சந்தையில் டொலர் விலை குறைப்பு என்ற மத்திய வங்கியின் நடவடிக்கை செல்வந்த குடும்பங்களுக்கு உதவும் ஒரு முயற்சி என சில வங்கியாளர்களும் பண பரிவர்த்தனையாளர்களும் வியாக்கியானம் செய்துள்ளனர்.

வெளிச்சந்தை டொலர் விலை குறைப்பு ஜூலை இறுதிவரை நீடிக்கும் என மத்திய வங்கி கூறியிருப்பதை சுட்டிக்காட்டும் இவர்கள், இக்கோடைப் பருவத்தில் செல்வந்த பாக். குடும்பங்கள் வெளிநாடுகளில் உல்லாச பயணம் மேற்கொள்வது வழக்கம் என்றும் பண அட்டை கொடுப்பனவுகளின் பேரில் டொலர் பெறுமதி குறைக்கப்பட்டிருப்பதால் பயன் பெறப் போவது வெளிநாடு செல்லும் இச் செல்வந்தர்களே தவிர ஏழை, நடுத்தரவர்க்கத்தினர் அல்ல என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## காஷ்மீர் சம்பா மாவட்டத்தில் கலிகோ புடவை உற்பத்தி

காஷ்மீரின் சமூக பாரம்பரிய பின்னணி கொண்ட கலை வடிவமான கலிகோ வர்ண துணி தயாரிப்பை கிராம மற்றும் நகர மட்டங்களில் குடிசைக் கைத்தொழிலாக ஊக்குவிக்கும் முயற்சி சம்பா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நூறு வருடங்களுக்கு மேலாக, மகாராஜா ரஞ்சித்சிங் காலத்தில் இருந்து காலிகோ துணி அச்சிடும் முறை சம்பாவில் பேணப்பட்டு வந்துள்ளதாகவும் அதை மீளவும் வருமானமீட்டும் தொழிலாக மாற்ற வேண்டும் என்றும் சம்பா மாவட்ட அபிவிருத்தி ஆணையாளர் அபிஷேக் சர்மா கூறியுள்ளார். மாவட்டத்தின் 50 சுய உதவிக் குழுக்களிடம், குறிப்பாக பெண்களிடம் இக்கலையை எடுத்துச் செல்வதற்கான வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர்களுக்கு மத்தியில் ஒரு போட்டி நடத்தப்படவுள்ளதாகவும் இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜம்மு – காஷ்மீரின் கலை ஆர்வமும் சுயதொழில் ஆர்வமும் கொண்ட மாணவர்களும் இதில் பங்கு பெறலாம் என்றும் கூறியுள்ள ஆணையாளர் ஷர்மா, வெற்றி பெற்ற ஓவியங்கள் கைப்பணி மற்றும் கைத்தறி உற்பத்திகளில் பயன்படுத்தப்படும் என்றார்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**107**

### டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

WP KV-7191 Toyota Prius, 2011, car அதியுயர் விலைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 034291

65-1162 Toyota, 1993 car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 034293

**112**

### மெஸ்டா கார்கள் விற்பனைக்கு

CP GS-7427 Mazda Demio, 1998, car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 034299

**119**



### பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

SP DAC-4190 Tata Ace, 2015, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 034298

**122**




### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP GW-0921 Bajaj, 2002, three-wheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0705999163. 034295

## வேலைவாய்ப்பு

**325**



### தொழில்துறை பொது

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பொதி செய்வதற்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு சம்பளம் 50,000/= முதல் 60,000/= வரை. 077-9718056, 074-0065770, 074-1705817 033745

தேங்காய் பால் பொருட்கள் நிறுவனத்தின் பெக்கேஜிங் துறைக்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. சம்பளம் 45,000/= 55,000/= உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. 077-9718056, 074- 0065770, 074-1705817 033749

## சொந்த விடயம்

**524**



### முத்திரைகள், நாணயங்கள்

இலங்கை மற்றும் வெளிநாட்டு முத்திரைகளின் சேகரிப்பாளர் அவரது முழு சேகரிப்பையும் அப்புறப்படுத்துகிறார். ஒரு சில அல்பங்களில் உள்ளது. முத்திரை நிறைய கருப்பொருளை கொண்டுள்ளது. அத்துடன் இலங்கை ஸ்ரீ லங்கா வெளிநாட்டு கரன்சி நோட்டுகள் வாங்கவும், விற்கவும் மாற்றிக் கொள்ளவும். அத்துடன் மாதிரி Over Print Notes களும் உள்ளடக்கம். மத்திய கிழக்கு நோட்டுகளுக்கு உயர்ந்த விலைகள். தொடர்பு 0777997950, h.sanoon@yahoo.com 032807

## பெயர்மாற்றம்

தலவாக்கலை, புதிய வீடமைப்புத்திட்டம், இல.A74ஐச் சேர்ந்த விக்ரம சயானனி என்ற நான் புனித இஸ்லாம் சமயத்தை தழுவியதால் எனது பிறப்பு பதிவுப்புத்தகத்தில் விக்ரம சயாளினி என்ற பெயரினை சப்ரினாபேஹம் என்று மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும், இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது பெயரினை சப்ரினா பேஹம் என்று பயன்படுத்துவேன். அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

சப்ரினா பேஹம்

**Repeat Your ad For Better Offers**

# அறிவித்தல்

## திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கு இல. TR/185/2023**

இராஜரத்தினம் சிவநாதன்
4ஆம் வட்டாரம், வாழையடியூற்று
இறைக்கண்டி

- **மனுதாரர்**

இவ்வழக்கு 'கணபதிமுத்து காசிநாதர் நம்பிக்கைப் பொறுப்பு ஆதனம்' என்ற நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளரான மேலே குறிப்பிட்ட மனுதாரரால் மனுவின் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 'முகத்துவாரக்காடு அல்லது வாழையூற்றுக்காடு' மற்றும் 'உயித்தடிவயல்' என்ற ஆதனங்களை விற்பனை செய்வதனை பிரதான நிவாரணமாகக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிடப்பட்ட வழக்கில் மனுவில் கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 08.06.2023ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி கோப்பிடுமாறு அறிவித்தல் தரப்படுகின்றது.

**'மன்றின் கட்டளைப்படி'**

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம், திருகோணமலை.**

திகதி: 07.06.2023

# இலங்கை திரிபோஷ லிமிட்டெட்

# பதவி வெற்றிடங்கள்

இலங்கை திரிபோஷ கம்பனியின் கீழ்க்காணப்படும் பதவிகளிற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1) கொதிகலன் இயக்குநர் (Boilerman)

### (அ) வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

**i. கல்வி**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

**ii. தொழில்நுட்ப நிபுணத்துவம்/திறன்கள்**

- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தீர்மானித்துள்ளவாறு தேசிய தொழிற்றகைமை திறன்களில் (NVQ) இரண்டாம் அல்லது மூன்றாம் நிலைக்கு இயைபானவாறு மேற்படி பதவிகளுக்கு தொழில்நுட்ப நிபுணத்துவம்/ திறன்கள் சான்றிதழுடன் 03 ஆண்டுகளிற்குக் குறையாத பயிற்சி/ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்
- முதல் தர ஆவி கொதிகலன் இயக்குநர் உரிமம் (Class 1 Boiler Operator Licence)
- 02 ஆண்டுகளிற்குக் குறையாத ஆவி கொதிகலன்களில் அனுபவம் (2500 kg /hr)

### (ஆ) உள்ளக விண்ணப்பதாரர்கள்

**1) கல்வி**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தயடைந்திருத்தல் வேண்டும் மற்றும்

**2) அனுபவம் - தொழில்நுட்ப திறன்கள்**

நிரந்தர சேவையில் 06 ஆண்டுகளுக்குக் குறையாத சித்திகரமான சேவையுடன் குறித்த துறையில் 05 ஆண்டு காலத்திற்குக் குறையாத தொழில்சார் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் தொழிற்றுறைப் பரீட்சையொன்றில் உறுதிப்படுத்தப்படக் கூடிய உறுதியான தொழில்நுட்பத் திறன்களைக் கொண்ட நபர்களாக இருத்தல் வேண்டும்.

## 2) பொருத்துநர் (Fitter)

### (அ) வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமகள்

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் மற்றும்

**தொழில்நுட்ப நிபுணத்துவம்/ திறன்கள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு வினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய வாழ்க்கைத் தொழில் நிபுணத்துவம் (NVQ) இரண்டாம் அல்லது மூன்றாம் மட்டத்திற்கமைய மேற்படி பதவிக்கான தொழில்நுட்ப நிபுணத்துவம்/ திறன்கள் சான்றிதழுடன் 02 ஆண்டுகளிற்குக் குறையாத கைத்தொழிற்துறையொன்றில் பயிற்சி/ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### (ஆ) உள்ளக விண்ணப்பதாரர்கள்:-

**கல்வி**

கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

**மற்றும்**

**அனுபவம் - தொழில்நுட்பத் திறன்கள்**

நிரந்தர சேவையொன்றில் 06 ஆண்டுகளிற்குக் குறையாத சித்திகரமான சேவையுடன் குறித்த துறையில் 05 ஆண்டுகளிற்குக் குறையாத தொழிற்றுறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் தொழில்சார் பரீட்சையொன்றில் உறுதிப்படுத்தப்படக் கூடிய தொழில்நுட்பத் திறன்களைக் கொண்டுள்ள நபர்களாக இருத்தல் வேண்டும்.

## 3) லேத் மென் (கடைசல் பிடிப்போர்) (Lathmen)

### (அ) வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:

**i. கல்வி**

கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

**மற்றும்**

**ii. தொழில்நுட்பத் திறன்கள்/நிபுணத்துவம்**

மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழலசார் நிபுணத்துவத்தில் (NVQ) இரண்டாம் அல்லது மூன்றாம் மட்டத்திற்கு இயைபானவாறு மேற்படி பதவிக்கான தொழில்நுட்ப நிபுணத்துவம்/ திறன்களுக்கான சான்றிதழுடன் இரண்டு ஆண்டுகளிற்குக் குறையாத பயிற்சி/ அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### (ஆ) உள்ளக விண்ணப்பதாரர்கள்

**i. கல்வி**

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை (சாதாரண தரம்) பரீட்சையில், குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மற்றும்**

**ii. அனுபவம் தொழில்நுட்ப நிபுணத்துவம்**

நிரந்தர சேவையொன்றில் 06 ஆண்டுகளிற்குக் குறையாத சித்திகரமான சேவையுடன் குறித்த துறையில் 05 ஆண்டுகளிற்குக் குறையாத தொழில்சார் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறே தொழில்சார் பரீட்சையொன்றில் உறுதிப்படுத்தப்படக் கூடிய உரித்தான தொழில்நுட்ப நிபுணத்துவத்துடன் கூடிய நபர்களாக இருத்தல் வேண்டும்.

## பொது

**அடிப்படை சம்பள அளவுத்திட்டம்:-**

2016.01.01 முதல் PL 2-2016 - தரம் III

ரூபா 25,750/- அதற்கு மேலதிகமாக அரசு அனுமதித்துள்ள கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

**ஏனையவைகள்**

i. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்
ii. பதவிக்கு உரித்தான கருமங்களை சீராக மேற்கொள்வதற்கான மற்றும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்குகந்த உடல் மற்றும் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்ஒழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து அனைத்து தகவல்கள் மற்றும் தகைமைகளை உட்படுத்தி உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு அவ்விண்ணப்பங்களை 2023.06.21 இற்கு முன்னர் மனித வளங்கல் பிரிவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அன்றேல் மின்னஞ்சல் (email) தொலைநகல் (fax) மூலம் அனுப்புதல் அல்லது பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மின்னஞ்சல்: thriposha@gmail.com
தொலைநகல்: 011 2237363

**முகவரி:**

***சிரேஷ்ட முகாமையாளர்***
***(மனித வளங்கள் மற்றும் சட்டம்)***
***இலங்கை திரிபோஷ லிமிட்டெட்,***
***த.பெ. 17, கபுவத்த - ஜா-எல.***

**சிரேஷ்ட முகாமையாளர்**
**(மனித வளங்கள் மற்றும் சட்டம்)**

2023.06.05

# பெறுகை அறிவித்தலின் பிழைதிருத்தம்

## போதனா வைத்தியசாலை - அநுராதபுரம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் டிஜிட்டல் கதிரியக்க (X Ray) இயந்திரத்திற்காக அறையொன்றை நிர்மாணித்தல் (Construction of Room for Digital X-Ray Machine) தொடர்பாக 2023.05.29 அன்று தினமின பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் CIDA மற்றும் NCPC தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **C5** அல்லது **C6** என்ற தகைமைகளானவை **C7** அல்லது **C6** அல்லது **C5** எனத் திருத்தி அமைக்கப்படுகின்றதென அறிவித்துக் கொள்கின்றேன்.

அதன் பிரகாரம், மேற்படி திருத்தங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறே இருக்கும் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**அநுராதபுரம்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகாதார அமைச்சு

## அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம

## "Sonial Vision Unit" இற்கு மின்சாரத்தை வழங்குதல்

கீழே விபரிக்கப்படுமாறு மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலையின் "Sonial Vision Unit" இற்கு மின்சாரத்தை எவழங்குவதற்காக தகைமையும் தகுதியுமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளரின் சார்பாக மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கின்றார். அத்துடன் ஒப்பந்தக்காலம் 14 நாட்களாகும்.

ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளை கொண்டிருத்தல் வேண்டும்.

- நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவு தேவைப்படும் விசேடம் - மின்னியல் மற்றும் இயந்திரவியல் தரம் - EM-04 அல்லது அதற்கு மேல்

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மஹரகம அபேக்ஷா, வைத்தியசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்தடன் மேலே தரப்பட்டுள்ள முகவரியில் 9.00 மணிமுதல் 15.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.

ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1000.00 செலுத்துவதன் பேரில் 2023.06.21 9.00 மணி முதல் 15.00 மணி வரை மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளருக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

விலைமனுக்கள் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக (கையில்) 2023.06.22 (நேரம்/திகதி) 10.00 மணிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரியில் உள்ள மஹரகம, அபேக்ஷா வைத்தியசாலை, பணிப்பாளருக்கு விநியோகித்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுக்கள் விலைமனுதாரர்களின் சமுகமளிக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.

எல்லா விலைமனுவுடனும் ரூபா 59,497.50 ஓர் விலைமனுப்பிணை இணைக்கப்படல் வேண்டும்.

விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

விலைமனுப்பிணையானது விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

பெறுகைக்குழுவின் முடிவு இறுதி முடிவாக இருக்கும்.

மேலே சொல்லப்பட்ட முகவரியானது

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மஹரகம.**
**தொலைபேசி - 0112844450.**

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

## விலைகேள்வி இலக்கம் : 033/T/2022

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் மென்பொருள் தொகையீட்டுத் தளத்தினை வழங்குதல்**

(SUPPLY OF SOFTWARE INTEGRATION PLATFORM)

இலங்கையின் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் மென்பொருள் தொகையீட்டுத் தளத்தினை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

இலங்கை ரூபா பதினொராயிரம் (ரூபா 11,000.00) மீள- திருப்பித்தரப்படாத விலைக்கேள்வி ஆவணக் கட்டணம் காசாக செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் பெற்றுக்கொண்ட ஆவணங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் விலைக்கேள்வியாளரால் வெளியிடப்பட்ட, உத்தியோகபூர்வ கோரிக்கை கடிதத்துடன் சமர்பித்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் (AASL) இணையத்தளத்தினூடாக ரூபா பதினொராயிரம் மீள திருப்பி செலுத்தப்படாத கட்டணமொன்று நிகழ்நிலையில் செலுத்தியும் விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் 2023.06.08 ஆந் திகதி முதல் 2023.07.04 ஆந் திகதி வரை வேலை செய்யும் நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும். விலைக்கேள்வி ஆவணங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் இலவசமாக பார்வையிடுவதற்காக வைக்கப்படும்.

விலைக்கேள்வி ஆவணங்கள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் அந்த நடவடிக்கைக்காக வைக்கப்பட்டுள்ள ஒப்பந்த புள்ளி பெட்டியினுள் வைப்பீடு செய்தல் வேண்டும். விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம், முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் அவர்களினால் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

விலைக்கேள்வி ஆவணங்களை பொறுப்பேற்றல் 2023.07.05 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முடிவடைவதுடன், அதற்குப் பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் விலைக்கேள்விகள் திறந்து வைக்கப்படும். விலைக்கேள்விகள் திறந்து வைக்கும் சந்தர்ப்பத்தில் விலைக்கேள்வியாளர்களுக்கு அல்லது அவர்களினால் முறைப்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் இந்த சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரின் பெயருக்கு செலுத்த முடியுமான, இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையின் அதன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வங்கியொன்றின் மூலம் வெளியிடப்படுகின்ற இலங்கை ரூபா எட்டு இலட்சம் (ரூபா. 800,000.00) பெறுமதிக்குச் சமமானான கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி உத்தரவாதமாக விலைக்கேள்வி ஆவணங்களுடன் சமர்பித்தல் வேண்டும்.

விலைக்குறிப்பீட்டுடன் தொடர்புடைய தெளிவுபடுத்தல்கள் 2023.06.21 ஆந் திகதி மு.ப. 10.00 இற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில், அமைந்துள்ள புது நிர்வாகக் கட்டிடத்தில் கருத்தரங்கு கூடத்தில் நடைப்பெறும்.

மேற்படி தகவல்களுக்காக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தின், தொலைபேசி இலக்கம் 011-2264103 / 011-2264106 மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் ஊடாக விசாரிப்பதற்கு அல்லது எமது www.airport.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்க**

# மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப.9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/03/2023 | 01/04/2023 | 23, 26, 28 /06/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அம்பாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,



SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377

E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 | 011 2 429 342/ 343

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023-06-07

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | திருகோணமலை - புல்மோட்டை நீர் வழங்கல் திட்டம் - புல்மோட்டையிலுள்ள பெக்கேஜ் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் மேற்பரப்பிற்கு மணல் விசுறுதல் மற்றும் நிறப்பூச்சு பூசும் வேலைகள்<br>ஒப்பந்த இல: RSC(E)/DGM/RH/SAND BLASTING/WTP-PULMODAI/2023/025 | 12,500/- + VAT ** | ரூபா 140,200/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 14.02 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele : 026-2222519/ 026-2222028<br>Fax : 026-2225225 | 21/06/2023 மு.ப. 10.00 மணி |
| 02 | அம்பலாந்தோட்டை நீர் வழங்கல் திட்டம் - நீர்த்தாங்கிக் கோபுரங்களின் உட்புறத்திற்கு (எக்கஸ்ஸ, போலன, மிரிஜ்ஜவில மற்றும் பல்லகஸ்வெவ) Hand Rail on Platform வழங்குதல் மற்றும் பொருத்துதல்.<br>ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/HAND RAIL/WATER TOWER/A'TOTA/RH/2023-25 | 4,000/- + VAT | ரூபா 30,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு | 2.73 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele : 0412222105<br>Fax : 0412221329 | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| 03 | தெஹிவளை, தர்மபால வீதி, MLP2 பம்பி நிலையத்தில் எல்லைச் சுவரின் ஒரு பகுதியை தகர்த்தல் மற்றும் மீள்நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: NWSDB/GCWR/RH/M-DM/2023/09 | 4,000/- + VAT | ரூபா 56,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு | 3.7 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை.<br>Tele : 011 2623681<br>Fax : 011 2636205<br>மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை "Tender Fees-DGM Tender Board" எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 28/06/2023 மு.ப. 10.00 மணி |
| 04 | அம்பன்கஹ நீர் வழங்கல் திட்டத்தில் வருமானமற்ற நீர் குறைப்பிற்கான நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: RSC-C/CN/CIVIL/O&M/AMBANGAGA/2023/47 | 12,500/- + VAT ** | ரூபா 110,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 10.7 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, மத்திய வடக்கு அலுவலகத்தில் 2023-06-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P 0812492311) | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| 05 | கம்பொல நீர் வழங்கல் திட்டம் - ஹில் ஸ்ட்ரீட் வீதியில் குழாய்களை பதித்தல் மற்றும் பொருத்துதல் மற்றும் இணைப்புகளை இடம்மாற்றுதல்<br>ஒப்பந்த இல: RSC-C/CS/LAY/NRW/ GAMPOLA/2023/92 | 12,500/- + VAT ** | ரூபா 242,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 21.72 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கெட்டம்பே, மத்திய தெற்கு அலுவலகத்தில் 2023-06-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P- 081 2388086) | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| 06 | Flow Meter அறைகளை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/NRW/CONSTRUCTION OF FLOW METER CHAMBERS/2023/032 | 6,000/- + VAT ** | ரூபா 100,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6, C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 9.0 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| 07 | வன்னி நீர் வழங்கல் திட்டத்திற்கு சேகரிப்புக் கிணறு, Infiltration Gallery மற்றும் பம்பி இல்லங்களை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: RSC/N/DGM/RH/CONSTRUCTION OF COLLECTING WELL-VELANAI/2023/023 | 12,500/- + VAT ** | ரூபா 181,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 18.08 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 08 | 60,000 எண்ணிக்கையான Volumetric Displacement type 15mm (1/2'') வீட்டு நீர்மானி உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: DGM/M&E/WMSP/15/2023/01 | 35,000/-+ VAT ** | ரூபா 2,140,400/- மற்றும் தேநீவவ சபைக்கு மாதிரி பரீட்சித்தல் கட்டணமாக 19,550.00 ரூபா செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு | 60,000 எண்ணிக்கையான Volumetric Displacement type 15mm (1/2'') வீட்டு நீர்மானி உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் மற்றும் ஆவணத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு. | 124.08 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele : 011-2605328<br>Fax : 011-2635885 | 28/06/2023 மு.ப. 10.00 மணி |
| 2023-05-31ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. 40,000 எண்ணிக்கையான 15mm (1/2'') Gunmetal Ferrules வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: SUM&MM/GF-03/2022/23 - இந்தக் கேள்வியின் ஒப்பந்த இலக்கம் SUP&MM/GF-03/2022/23 என மாற்றப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **M & E கேள்விகள்** | | | | | | | |
| 09 | ரம்படகல்ல நீர் வழங்கல் திட்டத்திற்கு Borehole Type பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்.<br>ஒப்பந்த இல: RSC(NW)/M-KURU/P/RH/ RAM/2023/15 | 4,000/- + VAT | ரூபா 22000/- | பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 1.875 மில்லியன் | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele : 037-2223158<br>Fax : 037-2230086 | 28/06/2023 பி.ப. 2.00 மணி |
| 2023-05-17ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. கனன்கே உள்ளீர்ப்பு பம்பி இல்லத்திற்கு 75kW Variable Speed Drive வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல். ஒப்பந்த இல :RSC(S)/P&C/S/VSD/KANANKE INTAKE/RH/2023-45 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2023-06-14ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 10 | பிஒநி (மேற்கு - தெற்கு) அலுவலகத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSC/W-S/P&C/LABOUR(01)/ DGM/ O&M/2022/40 | 20,000/- + VAT ** | ரூபா 530,450/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெறாத தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele : 011-2605328<br>Fax : 011-2635885 | 28/06/2023 மு.ப. 10.00 மணி |
| 11 | திஸ்ஸமகாராம நீர் வழங்கல் திட்டத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: RSC(S)/P&C/J/THISSA/ O&M/2023-80 | 4,000/- + VAT | ரூபா 30,300/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 3.02 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele : 0412222105<br>Fax : 0412221329 | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| 12 | கட்டுகஸ்தோட்டையிலுள்ள தரைக்கீழ் நீர் அலுவலகத்திற்கு ஜெனிட்டோரியல் சேவையை வழங்குதல்<br>ஒப்பந்த இல- RSC-C/GW/SER/O&M/ KATUGASTOTA/2023/125 | 2,000/- + VAT | ரூபா 15,250/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 1.02 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027<br>கட்டுகஸ்தோட்ட, நிலக்கீழ் நீர் அலுவலகத்தில் 2023-06-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். (T:P 0812492311) | 21/06/2023 பி.ப. 2.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 13 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள செங்கலடி நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(E) /DGM/O&M/THREE WHEELER/ CHENKALADY/BATTI/2023/026 | 2,000/- + VAT | ரூபா 2,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele : 026-2222519/ 026-2222028<br>Fax : 026-2225225 | 21/06/2023 மு.ப. 10.00 மணி |
| 14 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள வாழைச்சேனை நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(E) /DGM/O&M/CREW CAB/ VALACH / BATT/2023/027 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele : 026-2222519/ 026-2222028<br>Fax : 026-2225225 | 21/06/2023 மு.ப. 10.00 மணி |
| 15 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள களுவாஞ்சிக்குடி நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(E) /DGM/O&M/CREW CAB/ KALUWANCHIKUDY / BATT/2023/028 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele : 026-2222519/ 026-2222028<br>Fax : 026-2225225 | 21/06/2023 மு.ப. 10.00 மணி |
| 16 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள நிர்மாணப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(E) /DGM/RECH-BOI/VAN-HIRE/ BATTI/2023/030 | 6,000/- + VAT ** | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele : 026-2222519/ 026-2222028<br>Fax : 026-2225225 | 21/06/2023 மு.ப. 10.00 மணி |
| 17 | பிராந்திய ஒத்துழைப்பு நிலைய (மேற்கு/வடக்கு) அலுவலக நிர்மாணப் பிரிவிற்கு வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC(W/N)/SS/HIRING/RSC(RH)/2023/31 | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele : 0112922129<br>Fax : 0112922146 | 21/06/2023 மு.ப. 10.00 மணி |
| 18 | மத்திய தெற்கு பிராந்தியத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: RSC-C/M&E/HIRING/ O&M/CS/2022/180 R | 4,000/- + VAT | ரூபா 15,000/- | இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அல்லது வாகன உரிமையாளர்கள் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax : 081-2388027 | 21/06/2023 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

### பெறுகை இலக்கம் : 053/T/2022

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் குளிர்ந்த நீர் விநியோகம் இணைக்கும் குழாய் முறைமை அலைத்தாங்கி இயந்திரக அறையிலிருந்து (PIER PLANT ROOM) இலத்திறனவியல் உபகரண கடைத்தொகுதி (ELECTRONIC MALL), தீர்வைகளல்லாத கடைத்தொகுதி(DUTY FREE SHOPS) மற்றும் புறப்படு முனையத்தின் மக்கள் இணையியக்க மண்டபத்திற்குரிய (DEPARTURE PUBLIC CONCOURSE) குளிர்ந்த நீர் இயந்திரக அறைகள் வரையிலான கட்டுமானத்திற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்.**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் குளிர்ந்த நீர் விநியோகம் இணைக்கும் குழாய் முறைமை அலைத்தாங்கி இயந்திரக அறையிலிருந்து (PIER PLANT ROOM) இலத்திறனவியல் உபகரண கடைத்தொகுதி (ELECTRONIC MALL), தீர்வைகளல்லாத கடைத்தொகுதி(DUTY FREE SHOPS) மற்றும் புறப்படு முனையத்தின் மக்கள் இணையியக்க மண்டபத்திற்குரிய (DEPARTURE PUBLIC CONCOURSE) குளிர்ந்த நீர் இயந்திரக அறைகள் வரையிலான கட்டுமானத்திற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைப்பெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து அழைக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு திருப்பிச் செலுத்தப்படாத ரூபா ஐயாயிரம் (ரூபா 5,000.00) காசு செலுத்தி அக்குறித்த பற்றுச்சீட்டு மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையினை விடுத்து விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் விலைக்கேள்வி ஆவணங்கள், 2023.06.08 ஆம் திகதி முதல் 2023.07.11 ஆம் திகதி வரையில் வாரத்தில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள் வெளியிடப்படும்.

அனைத்து முத்திரைக்குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவினால் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளி பெட்டியினுள் வைப்பிட வேண்டும். விலைக்கேள்வியாளருக்கு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள் நேரடியாக சமுகமளித்து ஒப்படைக்க முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்படுகின்ற விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகளை பொறுப்பேற்பதற்காக வழங்கப்படுகின்ற காலஅவகாசம் 2023.07.12 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முடிவடைவதுடன் அதற்குப் பின்னர் உரிய கேள்விப்பத்திரங்கள் திறந்து வைக்கப்படும். அக்குறித்த விலைக்கேள்விகளைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் விலைக்கேள்வியாளர்களுக்கு அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.

விலைக்கேள்விகளை முன்வைப்பதற்கு முன்னர் தகவல்களை தெளிவுபடுத்துதல் 2023.06.21 ஆம் திகதி மு.ப 10.00 மணியிற்கு புதிய பராமரிப்பு பிரிவு கட்டிடத்தில் அமைந்துள்ள இயந்திர பொறியியல் கலந்துரையாடும் அறையில் இடம்பெறும்

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு வெளியிடப்படுகின்ற ரூபா எட்டு இலட்சம் (ரூபா 800,000.00) பெறுமதியான வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்கள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், பொறியியல் பிரிவின் தொலைபேசி இலக்கங்கள் : 011-2264600 /011-2264606 அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk மின்னஞ்சல் மூலம் அல்லது எமது www.airport.lk என்ற இணையதளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்க**

## பெயர் மாற்றம்

சம்மாந்துறை சொறிக்கல் முனை 01, எனும் முகவரியைச் **சேர்ந்த காளிமுத்து விமல்ராஜ்** ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை எனது சுயவிருப்பத்தில் தழுவி எனது பெயரை **'முகம்மது றினாஸ்'** என பெயர் மாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை ஜனனாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**முகம்மது றினாஸ்**

## அறிவித்தல்

2007 இல. 7 எனும் கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர்:
**காபன் லொக் ரிவோனூஷன் (கரண்டி) லிமிட்டட்**

கம்பனியின் பதிவு இலக்கம்: ஜீ. எல். **00270386**

பதிவு அலுவலக முகவரி :
**இல. 599/1/ஏ, அக்குரேகொட வீதி, பெலவத்த, பத்தரமுல்ல**

கம்பனியின் புதிய பெயர்:
**ஓஷன் அட்வொகேட்ஸ் (கரண்டி) லிமிட்டட்**

முன்னைய பெயர் மாற்றப்பட்ட திகதி:
**2023 மே 11ம் திகதி**

**லிவிக் கோப்பரேட் ஐ (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனியின் செயலாளர்கள்**

## பிழைதிருத்தம்

**1964 இல. 28 காணி சுவீகரிப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்டவாறு**

**காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

**தொடர் இல. DEV/LND/02/ACQU1/09-2(3)**
**DEV/LND/02/ACQU1/09-2(4)**

இங்கு கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணித் துண்டுகளை அரசிற்கு சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு இல. 2332/34 மற்றும் 2332/35 என்ற 19.05.2023ம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் விசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : தெஹிநுவர |
| கிராம அதிகாரி பிரிவு | : கந்தர மத்தி கந்தர கிழக்கு |
| காணியின் பெயர் | : அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது 2023 மே 31 புதன்கிழமை பிரசுரிக்கப்பட்டது |
| வரைபட இலக்கம் | : கெடஸ்டர் வரைபட இல. 820308 வலய இலக்கம் -01 பத்திர இலக்கம் -1 கெடஸ்டர் வரை பட இல. 820310 வலய இலக்கம் 01, பத்திர இலக்கம் 2 மற்றும் 3 |
| துண்டு இலக்கம் | : 01-4 (1.0853) ஹெக்டயர்) 01-46 (0.9556 ஹெக்டயர்) அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது) 2023 மே 31 புதன்கிழமை பிரசுரிக்கப்பட்டுள்ளது |

**டி.பி. லியனபட்டபெந்தி,**
**சுவீகரிப்பு அதிகாரி/**
**பிரதேச செயலகம் தெவிநுவர**

திகதி: 2023.05.15

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### காலியில் முன்மொழியப்பட்ட "சினமன் கேட்" தேசிய கறுவா கைத்தொழில் மற்றும் கலாசார ஊக்குவிப்பு நிலையம் (கட்டம் 1)

1. முன்மொழியப்பட்ட "சினமன் கேட்" தேசிய கறுவா கைத்தொழில் மற்றும் கலாசார ஊக்குவிப்பு நிலையத்தின் (கட்டம் 1) நிர்மாணத்திற்கு கட்டிடப் பணிகளுக்காக C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட பணிகளுக்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு செய்யப்பட்ட பொருத்தமாக மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழு (சிரேஷ்ட) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. முன்மொழியப்பட்ட முடிக்கப்படாதுள்ள கட்டிடப் பகுதிக்கான தரை தயாரிப்பு, அகழ்வு, பாறைகளை தகர்த்தல், அத்திவாரம், காப்பு சுவர்கள் மற்றும் மேற்கட்டுமானம் (தூண்கள், உத்திரங்கள் மற்றும் கற்பலகைகள்) உட்பட கட்டிடத்தின் கட்டம் 1 இன் நிர்மாணத்தை இந்தப் பணி கொண்டுள்ளது.
3. வரி இன்றி மதிப்பிடப்பட்ட நிர்மாணச் செலவு 165.0 மில்லியன் இலங்கை ரூபா. நிர்மாணக் காலம் 270 நாட்கள்.
4. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
5. விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை அளவுகோலை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் கட்டிட பணிக்காக C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டடப் பணிக்கு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   - 1987 இன் 03 இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவுக்கு அமைய விலைமனுதாரர் பொது ஒப்பந்த பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.
6. விலைமனு ஆவணங்களை வாங்கும் பொருட்டு அதனை வழங்கும் அலுவலகத்திற்கு தொடர்புடைய CIDA பதிவை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை அளவுகோலை பூர்த்தி செய்தல் வேண்டும்;
   - கடந்த ஏழு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளின் சராசரி ஆண்டுப் பெறுமதி குறைந்தது 330 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும்.
   - கடந்த 7 ஆண்டுக்காக மண் தாங்கு கட்டமைப்புகள், அத்திவாரம், கட்டிடங்கள், தரை தயார்படுத்தல்கள் (அகழ்வு, பாறை தகர்ப்பு முதலியன) உட்பட கட்டிடத்தின் நிர்மாணம் போன்ற இதனையொத்த பண்புடைய குறைந்தது இரு திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் மற்றும் குறைந்தது ஒரு திட்டத்திற்கான நிர்மாணப் பெறுமதி குறைந்தபட்சம் 115.5 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும். மேற்கொள்ளப்பட்ட பணியில் குறைந்தது 70% பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
8. எந்தவொரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து விலைக்கேட்பு நேரத்தில் பயன்படுத்துவதற்கான நிகர செயல்பாட்டு மூலதனம் மற்றும் கிடைக்கப்பெறும் கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 55 மில்லியன் ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
9. விலைமனுதாரர் மேலுள்ள 5 மற்றும் 7 உருப்படிகளில் தரப்பட்டுள்ள அளவுகோல்களை பூர்த்தி செய்வதற்கு தவறினால், விலைமனுதாரர்கள் பதலளிக்காதவர்களாக கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.
10. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தொ.பே.: 011-2177782, கணக்குப் பிரிவு (ஏ பிரிவு), பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 8ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு சாதாரண வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
11. வெட் உட்பட இலங்கை ரூபா முப்பத்து ஐயாயிரம் (ரூபா 35,000) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஜூன் 07 ஆம் திகதி தொடக்கம் 2023 ஜூன் 28 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கணக்குப் பிரிவு (ஏ பிரிவு), பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 8ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் II, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, செயலாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்தப்பட வேண்டும்.
12. இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 ஜூன் 30 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழு (சிரேஷ்ட), தலைவரின் பெயருக்கு கணக்குப் பிரிவு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 8ஆவது மாடி (ஏ பிரிவு), செத்சிறிபாய, கட்டம் II, பத்தரமுல்லை என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது மேலுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் அவை உடன் திறக்கப்படும்.
13. விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 121 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
14. அனைத்து விலைமனுக்களும் விலைமனு தரவின் 17.2 உட்பிரிவின்படி இலங்கை மத்திய வங்கி அல்லது வேலைதருநருக்கு ஏற்க முடியுமான நிறுவனம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட 2023 நவம்பர் 27 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை ரூபா ஒரு மில்லியனே அறுநூற்று ஐம்பது ரூபா தொகை ஒன்றுக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, செயலாளரின் பெயருக்கு வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட வடிவத்தை கொண்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றை கொண்டிராத எந்த ஒரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
15. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023 ஜூன் 15 ஆம் திகதி 10.30 மணிக்கு பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 8ஆவது மாடி, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, கேட்போர் கூடத்தில் (பிரிவு டி) இடம்பெறும். விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்கு முன்னர் தள விஜயம் ஒன்றுக்கு அனைத்து விலைமனுதாரர்களும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.
16. எந்த ஒரு விலைமனுவுடனும் தொடர்புபட்டு விலைமனுதாரருக்கு ஏற்படும் எந்த ஒரு செலவுகள் அல்லது இழப்புகளுக்காகவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு பொறுப்பேற்காது. எந்த ஒரு விலைமனு அல்லது விலைமனுக்களையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் அதிகாரம் அமைச்சு பெறுகைக் குழு (சிரேஷ்ட) வசமானது என்பதோடு பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு (சிரேஷ்ட),**
**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,**
**8ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை.**

# விலைமனுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம் - கண்டி

கீழே தரப்பட்டுள்ள உருப்படிக்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை கண்டி, நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளரின் அலுவலகத்தில் பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விலை மனு இல. | வேலையின் விபரம் | மதிப்பிடப் பட்ட செலவு ரூ. (மில்.) | குறைந்த பட்ச தரம் அல்லது CIDA பதிவு | முவுறுத்தல் காலம் | விலைமனுப் பிணை ரூபா (வங்கி உத்தர வாதம்) | விலை மனுக்கள் செல்லுபடியாக வேண்டிய காலம் | விலைமனு பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| DI/KAN/PRO/CON/ NCB/2023/03 | ஸ்ரீ தலதா மாளிகையின் அகழியில் உள்ள விஷ்ணு தேவாலயத்திற்கு அருகில் உள்ள பக்கச் சுவருக்கு பூச்சுப் பூசுதல் | 13.8 | C-06 அல்லது அதற்கு மேல் | 03 மாதம் | 140,000.00 | விலைமனு திறக்கும் திகதியில் இருந்து 77 நாட்கள் | விலைமனு திறக்கும் திகதியில் இருந்து 105 நாட்கள் |

02. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்வி முறைமை ஊடாக நடாத்தப்படும்.

03. ஓர் கம்பனி கடிதத் தலைப்பில் (மூலப்பிரதி) எழுத்துமூல வேண்டுதல் கடிதம் மற்றும் 2023.06.07 முதல் 2023.06.27 வரை வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 3000.00 செலுத்துவதன் பேரில் குண்டசாலை, நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

04. விலைமனுக்கள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் மேலே குறிப்பிடப்படுமாறு விலைமனுப் பிணையை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப் பிணையற்ற எந்த விலைமனுவும் பதிலளிக்கப்படாததாக கவனத்தில் கொள்ளப்பட்டு எந்த விசாரணையும் இன்றி நிராகரிக்கப்படும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதி மற்றும் நகல் விலைமனுக்கள் குண்டசாலை, நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பில் இடலாம். அல்லது 2023.06.28ம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு அவரை அடையுமாறு கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

06. விலைமனு ஆவணங்கள் உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சம்பந்தப்பட்ட விலைமனு இலக்கத்தை எழுதுதல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 2023.06.28ம் திகதி 15.00 மணிக்கு மூடப்படும். அத்துடன் உடனடியாகத் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியும். தமது சொந்த முடிவில் ஒன்றை அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் பிராந்திய பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதியானது.

08. மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்:

**பிரதம பொறியியலாளர், நீர்ப்பாசனப் பணிமனை, குண்டசாலை. தொ.பே. 081-2422982**
**பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளர், கண்டி. தொ.பே. 081-2420967**

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனை,**
**கண்டி.**

# விலைமனுக்கோரல்

### கேள்விபத்திர இலக்கம் : 012/T/2022

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் பிதுறுதலாகளை ஓய்வு விடுதியின் தாங்கு சுவர் கட்டுமானம்

தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 1 வறையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார்) கம்பனியின் மூலம் வரையறுக்கப்பட்ட விபானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் கம்பனியின் பிதுறுதலாகளை ஓய்வு இல்லத்தில் தாங்கு சுவர் கட்டுமானத்திற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைகளைக்கொண்ட பொருத்தமான விலைக்கூறுநர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை 120 நாட்களாகும். கருத்திட்டங்கள் அமைவிடம் : வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் இலங்கை) (தனியார) கம்பனியின் பிதுறுதலாகளை ஓய்வு இல்லம்

தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் இலங்கை) (தனியார்) கம்பனியின் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும், இந்த விலைக்கேள்வியாளர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின், கட்டிட கட்டுமானம் தொடர்பாக சீ (C-5) அல்லது சீ6 (C-6) தரங்களில் பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமான பணிகள் தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2023.06.08 முதல் 2023.07.04 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் முப 09.00 மணிக்கும் பி.ப. 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில், கிளைத்தலைவருக்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுவதன் மூலம் மற்றும் கேள்விப்பத்திர கட்டணமாக திருப்பி தரப்படாத ரூபா 6,000.00 (ஆறாயிரம் ரூபா) காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிட முடியும்.

கேள்விப்பத்திர உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக அந்த கேள்விப்பத்திர ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்ட ரூபா 250,000.00 (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம்) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் 05ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியொன்று அதற்கு சமனான உத்தரவாதம் (தேவையேற்படும் பட்சத்தில் பணமாக மாற்றக்கூடிய) அக்குறித்த விலைக்கேள்வியுடன் சமர்பித்தல் வேண்டும்.

2023.06.19 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு நுவரெலியா பிதுறுதலாகளை ஓய்வு விடுதியில் நடைபெறும் விலைக்குறிப்பிடல் தொடர்பான கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள், பிரதியொன்றுடன் 2023.07.05 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், பெறுகைக் குழு இலக்கம் 01, தவிசாளருக்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகார பூர்வமான பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 0112263500/3502 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக மற்றும் தொலைநகல் இலக்கம் 011 2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்க**

## கம்பனியின் பெயர் மாற்றல் பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
டார்கட் லெபோரேட்டரி - நிகம்பு (பிரைவட்) லிமிட்டட்

**இல:** PV00245248

**விலாசம்:**
இல. 37/3, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07.

**புதிய பெயர்:**
ஸ்மார்ட் லங்கா டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

செக்ரடேரியஸ் (பிறைவட்) லிமிடட்
PV 5958

## கம்பனியின் பெயர் மாற்றல் பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
திரசேன்ட் (பிரைவட்) லிமிட்டட்

**இல:** PV00248176

**விலாசம்:**
இல. 07, அலெக்ஸாண்ட்ரா பிளேஸ், கொழும்பு 07.

**புதிய பெயர்:**
லங்கா ஈ-மொபைல் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

செக்ரடேரியஸ் (பிறைவட்) லிமிடட்
PV 5958

# விலைக்கோரல் அறிவித்தல்

**வ/ப விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்**

**விலைக்கோரல் இல. 030/T/2023**

**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவன பாதுகாப்பு பணியாளர்களுக்கு தைக்கப்பட்ட சீருடைகளை (Readymade Uniforms) வழங்குதல்**

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவன பாதுகாப்பு பணியாளர்களுக்கு தைக்கப்பட்ட சீருடைகளை (Readymade Uniforms) வழங்குவதற்காக வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத ஆறாயிரம் ரூபா (6,000.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்கு 2023-06-08ஆம் திகதி முதல் 2023-06-27ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். தேவையானால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை வழங்கல் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தில் அமைந்துள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.

விலைக்கோரல்கள் 2023 ஜுன் 28ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தினால் கோரும் போது செலுத்தப்படும் நான்கு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவுக்கான (475,000.00 ரூபா) பெறுமதியான வங்கிப் பிணை முறியொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264102 / 011-2264103 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

# கேள்விகளுக்கான அழைத்தல்

**சுகாதார அமைச்சு**

**போதனா வைத்தியசாலை – பதுளை**

கீழ் வரும் வழங்கல்களை பெற்றுக் கொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பதுளை போதனா வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழுத் தலைவரினால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | வழங்கல் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்வி ஆவண கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| | | **Medical Equipment** | | | |
| 01. | PGHB/FC/01/2023 | Supply & Installation of OT Table (Orthopedic Traction Table) | 01 | 3500.00 | 300,000.00 |
| 02. | PGHB/FC/02/2023 | Supply & Installation of High Definition Optical Coherence Tomography System | 01 | 3500.00 | 380,000.00 |
| 03. | PGHB/FC/03/2023 | Supply & Installation of Full Body Photo Therapy | 01 | 3500.00 | 200,000.00 |
| 04. | PGHB/FC/04/2023 | Supply & Installation of Ultra Sound Scanner (Gyn & Obs) | 01 | 3500.00 | 220,000.00 |
| 05. | PGHB/FC/05/2023 | Supply & Installation of EEG Machine | 01 | 3500.00 | 240,000.00 |
| 06. | PGHB/FC/06/2023 | Supply & Installation of Video Laryngoscope | 01 | 3000.00 | 170,000.00 |
| 07. | PGHB/FC/08/2023 | Supply & Installation of Rapid Infuser | 01 | 3500.00 | 240,000.00 |
| 08. | PGHB/FC/092023 | Supply & Installation of Ophthalmic Operating Microscope | 01 | 3500.00 | 600,000.00 |
| 09. | PGHB/FC/10/2023 | Supply & Installation of Dermatology Laser | 01 | 3500.00 | 300,000.00 |
| 10. | PGHB/FC/11/2023 | Supply & Installation of Endovascular Laser | 01 | 2550.00 | 140,000.00 |
| 11. | PGHB/FC/12/2023 | Supply & Installation of Vessel Sealing | 01 | 1000.00 | 40,000.00 |
| 12. | PGHB/FC/13/2023 | Supply & Installation of Patient Warmer | 05 | 2550.00 | 140,000.00 |
| 13. | PGHB/FC/14/2023 | Supply & Installation of Pneumatic Compressor Device | 08 | 1600.00 | 80,000.00 |
| | | **Kitchen Equipment** | | | |
| 01. | PGHB/FW/2023/01 | Supply & Installation of coconut milk Extractor | 01 | 1000.00 | 12,000.00 |
| 02. | PGHB/FW/2023/02 | Supply & Installation of Potato Peeler | 01 | 1000.00 | 10,000.00 |
| 03. | PGHB/FW/2023/03 | Supply & Installation of Electric Rice Steamer | 01 | 1000.00 | 10,000.00 |
| 04. | PGHB/FW/2023/04 | Supply & Installation of Vegetable Cutter | 01 | 1000.00 | 6,000.00 |
| 05. | PGHB/FW/2023/05 | Supply & Installation of Mixer Machine | 01 | 1000.00 | 6,000.00 |

02. கேள்விகள் தேசிய போட்டிரீதியிலான கேள்வி முறைமை மூலம் கோரப்படும்.
03. இது தொடர்பான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளருடன் தொடர்பு கொண்டு (நீடிப்பு 1103) அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
04. தகைமை பெற்ற கேள்விதாரருக்கு ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத மேலே குறிப்பிட்டுள்ள கேள்வி ஆவண கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வைத்தியசாலையில் சிறாப்பரின் பிரிவில் செலுத்திய பின்னர், 2023.06.07 ஆம் திகதியிலிருந்து 2023.06.28 ஆம் திகதி வரையும் தேவையான கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
05. தொடரிலக்கம் 02, 05, 08 மற்றும் 10 ஆகியன தொடர்பான உபகரணங்களுக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2023.06.15 ஆம் திகதியன்று நடைபெறும்.
06. கேள்விப் படிவங்களை பெறுவதற்கான கோரிக்கைக் கடிதத்துடன் கம்பனிகள் பதிவு செய்தல் சான்றிதழ் அல்லது வர்த்தக பதிவு செய்தல் சான்றிதழின் பிரதியொன்று கட்டாயமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
07. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2023.06.30 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு முன்னராக பதுளை போதனா வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விப் பெட்டியில் நேரடியாக சேர்க்கப்படலாம். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். அதே நாளன்று மு.ப. 10.30 மணிக்கு பணிப்பாளரின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன், அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
08. கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான உரிமையானது பதுளை போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவிற்கே உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, பதுளை**
**தொலைபேசி இலக்கம்: 055-2222261** **தொலைநகல்:- 055-2231205**
**மின்னஞ்சல்:- info@badullapgh.org**

**2023.06.05**

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER Marriage Proposals
E-mail your advertisements to: classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

## இலங்கை அரசாங்கம்

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்திட்டம்

**கடன் இல. Cr. 5685-lk & 9255-lk**

# விலைக்கோரல் அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்திடமிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் ஒப்பந்தங்களுக்கு கொடுப்பனவாகச் செய்யவுள்ளது.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | தகைமை தேவைப்பாடுகள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | | | செயற்றிட்டப் பெறுகைக் குழு (மேல்நிலை) | | |
| | | | வலைக் கேள்விகள் | | |
| மொனராகலை மாவட்டத்தில் பதுளுகம சமூக நிர்வாக கிராமிய நீர் வழங்கல் திட்டத்தை புனரமைத்தல் ஒப்பந்த இல. **MWS&EID/WaSSIP/Monaragala/ NCB/Badullagammana / AF/ 2023/ 01** | ரூபா 12,500/- | ரூபா 1,080,000/- | C3 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜுபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஜுலை 05ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| மொனராகலை மாவட்டத்தில் மகலந்த நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பின் மிகுதி நிர்மாண வேலைகள் ஒப்பந்த இல. **MWS&EID /WaSSIP/Monaragala/ NCB/Mahalanda-Balance Work/AF/2023/02** | ரூபா 12,500/- | ரூபா 576,000/- | C5 அல்லது C4 தரத்தில் CIDA நிறுவனத்தில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையின் பதிவு மற்றும் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் சான்றிதழ் மற்றும் அடுத்தடுத்த வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018-10-16ஆம் திகதி சிலோன் டெய்லி நியூசில் பிரசுரமான பத்திரிகை விளம்பரம் | செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகம், நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம், இல. 230, ஈ.டபிள்யூ. பெரேரா மாவத்தை, ஜுபிலி போஸ்ட், நுகேகொடை. தொ.பேசி/ தொ.நகல்: 011-2890943/ 011-2890941 | 2023 ஜுலை 05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |

3. செயற்றிட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.
4. சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்பாட்டு செயற்றிட்டத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படுமிடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்விகளை ஒன்றில் நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் அனுப்பலாம்.
7. சகல கேள்விகளும் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்.**
**சமூக நீர் திட்டங்களின் சிக்கல்களுக்கு 1914 எனும் எண்ணைத் தொடர்புகொள்ளவும்.**

### விவசாயத் திணைக்களம்
### பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் கன்னொருவ

# கேள்வி அறிவித்தல்

**ஆய்வுகூட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்தல்- மண் மற்றும் தாவர போசணைப் பிரிவு பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், கன்னொருவ**

**(Purchasing of Laboratory Reagents - Soil and Plant Nutrition Division, Horticultural Crops Research & Development Institute, Gannoruwa)**

பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் அந்நிறுவனத்தின் மண் மற்றும் தாவர போசனைப் பிரிவிற்கு குறித்த ஆய்வு கூடங்களில் மண் மற்றும் தாவர ஆய்விற்காக பாவிக்கப்படும் பல்வேறு வகை இரசாயனப் பொருட்கள் 49ஐ கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. பெறுகை வழிகாட்டல் கோவையின் கீழ் 13 ஆவது அத்தியாயத்தின் 8:1 இல் தரப்பட்டுள்ளவாறு குறித்த விண்ணப்பதாரிகள் 1987 இல. 03 பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி விடயத்திற்காக ஒரு கேள்விப் படிவமொன்றை மாத்திரம் பாவித்தல் வேண்டும். ரூபா 3000/- மீளளிக்கப்படாத கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக செலுத்திப்பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை த.பெ. 11, கன்னொருவ பேராதனை என்ற முகவரியில் அமைந்துள்ள பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023 ஜூன் 07 முதல் ஜூன் 26ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படுவதுடன் இதற்காக ஆர்வம்காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேற்படி இடத்திலேயே அவ் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

சகல கேள்விகளும் முத்திரையிடப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறையில் இடது பக்க மேல் மூலையில் "Purchasing of Laboratory Reagents - Soil and Plant Nutrition Division, Horticultural Crops Research & Development Institute, Gannoruwa" என்று குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், த.பெ. 11, கன்னொருவ, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் உள்ள அலுவலகத்தில் அமைந்துள்ள அட்டவணையில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2023 ஜூன் 26ம் திகதி பிற்பகல் 16.00 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் திறக்கப்படுவது 2023 ஜூன் 27 மு.ப. 10.30 ஆகும். அவ் வேளையில் கேள்விகள் சமர்ப்பிப்போருக்கு அல்லது அவர்களது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 120300.00 (ஒரு இலட்சத்து முன்னூறு) வங்கிப் பிணை ஒன்றை விவசாய பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் காசாக செலுத்துவதாயின் பிணை ரூ. 60150.00 (அறுபதினாயிறத்து நூற்றி ஐம்பது) ஆகும். வங்கிப் பிணையின் செல்லுபடியாகும் காலம் 2023.10.09 வரை ஆகும்.

எந்தக் கொள்வனவு அல்லது நிராகரிக்கும் உரிமை அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமை பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்,**
**கன்னொருவ, பேராதனை.**

2023.06.07
**தொ. பே. இல. 081-2388011/12**

---

### மேல் மாகாண உயர் நீதிமன்றம் - கொழும்பு - 12

# கேள்வி அழைப்பு

## சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவையை வழங்குதல் - 2023/2024

கொழும்பு உயர் நீதிமன்ற வலயத்திற்கு சொந்தமான கீழ்க்காணும் நீதிமன்றங்களில் சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக கொழும்பு உயர் நீதிமன்றத்தின் பெறுகைக்குழுவினால் உள்ளூர் திறந்த விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | பெறுகையின் பெயர் நீதிமன்றம் | பொது மதிப்பீட்டு தொகை வருடாந்தம் ரூ.சதம் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூ.சதம் |
|---|---|---|---|
| 01 | சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பு | 1,240,600.00 | 2,500.00/- |
| 02 | வர்த்தக நீதிமன்றம் கொழும்பு | 1,449,100.00 | 2,500.00/- |
| 03 | நுகேகொட நீதிமன்ற கட்டிடத்தொகுதி | 1,769,100.00 | 2,500.00/- |
| 04 | பிரதான நீதவான் நீதிமன்றம் கொழும்பு | 3,796,900.00 | 2,500.00/- |
| 05 | சிறுவர் நீதவான் நீதிமன்றம் பத்தரமுல்ல | 636,300.00 | 2,500.00/- |
| 06 | தொழிலாளர் நீதிமன்றம், இல-32, கல்கிசை | 650,900.00 | 2,500.00/- |

மேற்படி விடயம் சம்பந்தமான சகல விபரங்களையும் கேள்வி ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை கொழும்பு உயர்நீதிமன்ற கணக்குப்பிரிவில் 2023.06.07 முதல் 2023.06.16 வரை கடமை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கிடையில்) பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்த கேள்விகள், 2023.06.20 பி.ப.2.00 வரை ஏற்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல், முடிவடைந்தவுடன், மேற்படி முகவரியில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் கேள்விகள் திறக்கப்படல் இடம்பெறுவதுடன், அதற்காக கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து, கொழும்பு உயர் நீதிமன்றத்தின் பிரதான பதிவாளரை அழையுங்கள், தொ.பே - 0112438893, எந்தக் கட்டணமும் இன்றியே கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு**
**உயர் நீதிமன்றம்**
**கொழும்பு - 12**

---

# கேள்வி அழைப்பு

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
### சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்தி பிரிவு
## WP PH3497 வாகனத்தை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்

பெறுகை இலக்கம்: MPC/2023/10

01. பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சு, சிறு ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்திப் பிரிவிற்கு சொந்தமான கீழ்க்காணும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பதிவு இலக்கம் | வாகன வகை | உற்பத்தி ஆண்டு | முதல் பதிவு ஆண்டு |
|---|---|---|---|
| WP PH-3497 | Micro Dual Purpose Van | 2014 | 2016 |

02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு இப்பிரிவின் உதவிச் செயலாளர் (தொ.பே.இல. 011-2078348) மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், 8ஆம் மாடி, 11ம் கட்டம் செத்சிரிபாய, பத்தரமுல்லயில் அமைந்துள்ள அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் 2023.06.07 முதல் 2023.06.20 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இரு பிரதிகளுடனான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ரூ. 2,000/- மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை கணக்குப் பிரிவின் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

03. சுஹுருபாய, பத்தரமுல்ல வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்த வாகனத்தை மேலதிக செயலாளரின் அனுமதியின் அடிப்படையில் 2023.06.07 முதல் 2023.06.20 மு.ப. 10.00 முதல் பி.ப. 1.00 வரை விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது கேள்வியுடன் மீளளிக்கப்படும் ரூ. 5,000/- பெறுமதியுடைய கேள்வி வைப்பொன்றை காசாக கணக்குப் பிரிவின் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் ‘மூலப் பிரதி’ மற்றும் ‘நகல் பிரதி’ என தயாரிக்கப்பட்டு வேறுவேறாக இரு உறைகளில் இட்டு இடது பக்க மேல் மூலையில் மேலே குறிப்பிடப்படும் பெறுகைப் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் பொறியிடப்பட்ட தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்விகள் 2023.06.21 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு ‘தலைவர், பெறுகைக்குழு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர் அபிவிருத்திப் பிரிவு, 8ஆம் மாடி, 11ம் கட்டம், செத்சிரிபாய, பத்தரமுல்ல’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் 2023.06.21 பி.ப. 2.10 இற்கு 8ம் மாடி, 11ம் கட்டம், செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற இடத்தில் இடம்பெறும். அதற்காக கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

07. இவ் வாகனத்தை விற்பனை செய்தல் சம்பந்தமாக வாகன மதிப்பீட்டு கமிட்டியினால் விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன் அதற்கு குறைவாக கேள்வி சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பங்களில் இவ் வாகனத்தை கேள்வி மூலம் விற்பனை செய்வதை இடை நிறுத்தும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

08. கேள்வி கோரும் செயற்பாடு சம்பந்தமாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையிலேயே சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எதிர்ப்புக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**சிறு ஏற்றுமதி பயிர் அபிவிருத்திப் பிரிவு,**
**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,**
**8ம் மாடி, 11ம் கட்டம், செத்சிரிபாய,**
**பத்தரமுல்ல.**

---

# கொழும்பு மாநகர சபை
## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/DR/53/2023 | கொழும்பு-06, ஸ்ரீ சுவிசுத்தாராம வீதியில் மழை நீர் வடிகால் முறைமையை நிர்மாணித்தல் (பாகம் - 01) | 5,750.00 | 350,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C 07, C 06 மற்றும் C 05 CIDA தரத்தைக் கொண்ட மழை நீரை அப்புறப்படுத்தும் நில வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 2 | ME/ME/DR/52/2023 | கொழும்பு-13, கிறீன் ஒழுங்கையிலுள்ள மழை நீர் வழியின் திருத்தவேலைகள் | 5,750.00 | 290,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C 07, C 06 மற்றும் C 05 CIDA தரத்தைக் கொண்ட மழை நீரை அப்புறப்படுத்தும் நில வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- ➢ வட்டார அலுவலகம் 04,
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.
- ➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
  மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02** - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-06-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2023-06-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2024.01.24ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.12.25ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2023-06-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# மதுஷ்கவின் அதிரடி பந்துவீச்சால் இலங்கை ஏ அணி இலகு வெற்றி



டில்ஷான் மதுஷ்கவின் அதிரடி பந்துவீச்சின் உதவியோடு தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் இலங்கை ஏ அணி 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது.

இதன்மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை ஏ அணியால் 1–1 என சமநிலைக்கு கொண்டுவர முடிந்துள்ளது.

பல்லேகலவில் நேற்று (06) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட தென்னாபிரிக்க ஏ அணியின் முதல் நான்கு விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து வீழ்த்த வேகப்பந்து வீச்சாளர் மதுஷ்கவால் முடிந்தது.

இதனால் 20 ஓட்டங்களுக்கே 4 விக்கெட்டுகளை இழந்த அந்த அணி 42 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை பறிகொடுத்தது. எனினும் 8 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ட்ரிஸ்டன் ஸ்டப் (59) மற்றும் கெரால்ட் கோட்சீ (77) 111 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

எனினும் தென்னாரிக்க ஏ அணி 42.2 ஓவர்களில் 175 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

டில்ஷான் மதுஷ்க 9 ஓவர்களுக்கும் 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய இலங்கை ஏ அணிக்கு ஆரம்ப வீரரும் விக்கெட் காப்பாளருமான நிஷான் மதுஷ்க சதம் பெற்றார். 85 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் ஆட்டமிழக்காது 107 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது அவர் 4 ஆவது விக்கெட்டுக்கு சஹன் ஆரச்சிகேவுடன் (ஆட்டமிழக்காது 50) இணைந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 104 ஓட்டங்களை பகிர்ந்து இலங்கை ஏ அணியில் வெற்றியை உறுதி செய்தார்.

இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை (08) நடைபெறவுள்ளது.

## குட்டி மாலிங்கவை சந்தித்தார் லசித்



ஒன்பது வயது சிறுவனின் பந்து வீச்சு பாணி தனது அவதானத்தை பெற்ற நிலையில் அந்த சிறுவனை கண்டறிய உதவியதற்கு சமூக ஊடக பயனர்களுக்கு இலங்கை முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

பேஸ்புக்கில் வீடியோ ஒன்றை வெளியிட்ட மாலிங்க, அந்த ஒன்பது வயது சிறுவனான வீரவிலவைச் சேர்ந்த தினெத் அனுஹஸின் பெற்றோருடன் தாம் பேசியதாக தெரிவித்துள்ளார். அந்த சிறுவன் பாடசாலையில் கிரிக்கெட் விளையாடுவதற்கு தாம் பயிற்சி வழங்குவதற்கான வாய்ப்பு பற்றியும் பேசியதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவனின் பந்துவீச்சு பாணி தனது அவதானத்தைப் பெற்றதாகவும், தினெத் பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட விரும்பினால், தம்மை விட சிறந்த வீரராக வரும் திறமை அந்த சிறுவனுக்கு இருப்பதாகவும் மாலிங்க தெரிவித்துள்ளார்.

## பவர் ஈஸ்டர் கிண்ணம் எவர்டொப் அணி வசம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று பவர் விளையாட்டு கழகம் நடத்திய பவர் ஈஸ்டன் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தைக்காநகர் எவர்டொப் விளையாட்டு கழகம் கிண்ணத்தை வென்றது. ஆலையடிவேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (04) நடைபெற்ற இந்தப் போட்டியில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களை உள்ளடக்கிய 64 அணிகள் பங்கேற்றன. இதன் இறுதிப் போட்டியில் ஆரையம்பதி விஸ்வகலா விளையாட்டு கழகத்தை எவர்டொப் அணி தோற்கடித்தது. இதில் தொடரின் சிறந்த வீரர் விருதை எவர்டொப் அணியின் முஹம்மட் சியான் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## தொடரை தீர்மானிக்கும் கடைசி ஒருநாள் இன்று



இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டி இன்று (07) ஹம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி இலங்கையை இலகுவாக வீழ்த்தியதோடு இரண்டாவது போட்டியில் இலங்கை அபார வெற்றியீட்டியது.

இந்நிலையில் இலங்கை அணி இரண்டாவது போட்டியில் ஆடிய அதே அணியுடன் இன்றைய தினத்திலம் களமிறங்க வாய்ப்பு உள்ளது. குறிப்பாக வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீர மற்றும் சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க அணிக்கு திரும்பி இருப்பது வலுச் சேர்ப்பதாக உள்ளது.

மறுபுறம், இன்றைய போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ரஷீத் கான் காயத்தில் இருந்து மீண்டு அணிக்குத் திரும்ப வாய்ப்பு உள்ளது. இது அந்த அணிக்கு வலுச் சேர்ப்பதாக அமையும்.

இலங்கை அணி அடுத்து உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆடுவதற்காக சிம்பாப்வே பயணிக்கவுள்ள நிலையில் ஆப்கானுடனான தொடர் வெற்றி என்பது அணிக்கு முக்கியமானதாக உள்ளது.

## 2024 டி20 உலகக் கிண்ணத்தை இங்கிலாந்துக்கு மாற்ற வாய்ப்பு



மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடத்துவதற்கு ஏற்பாடாகி இருக்கும் 2024 டி20 உலகக் கிண்ண போட்டியை வேறு நாட்டுக்கு மாற்ற வாய்ப்பு உள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

போட்டிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றத்தில் தாமதம் ஏற்படும் நிலையிலேயே சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் இது பற்றி அவதானம் செலுத்தியுள்ளது. தொடரை நடத்துவதற்கு இன்னும் ஓர் ஆண்டு காலமே இருக்கும் நிலையிலேயே ஐ.சி.சி உலகக் கிண்ணத்தை நடத்த வேறு தேர்வுகளை தேட ஆரம்பித்துள்ளது.

இதில் அடுத்த டி20 உலகக் கிண்ணத்தை இங்கிலாந்தில் நடத்த ஐ.சி.சி அந்நாட்டு கிரிக்கெட் சபையிடம் கோர வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அமெரிக்காவில் 2024 டி20 உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கு மைதானங்கள் இன்னும் தயாராகவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## இஸ்ரேலிய துப்பாக்கிச்சூடு: மூன்று வயது சிறுவன் பலி



இஸ்ரேலிய படையினரால் தலையில் சுடப்பட்ட மூன்று வயது சிறுவன் ஒருவன் நான்கு நாட்களின் பின் உயிரிழந்துள்ளான்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள நபி சாலிஹ் பகுதியில் தமது வீட்டில் இருந்து வெளியே செல்லும்போது முஹமது தமிமி மற்றும் அவனது தந்தை சுடப்பட்டுள்ளனர்.

அருகில் உள்ள யூத குடியேற்றம் ஒன்றில் தாக்குதல் நடத்திய இரு துப்பாக்கிதாரிகளை துரத்தியபோதே சூடு நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய ஹெலிகொப்டர் மூலம் சிகிச்சைக்காக இஸ்ரேலில் உள்ள சிறுவர் மருத்துவமனைக்கு தமிமி அழைத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்கவில்லை. அவனது தந்தை பலஸ்தீன மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையிலான பதற்றம் அதிகரித்திருக்கும் நிலையில் இந்த ஆண்டு ஆரம்பம் தொடக்கம் இஸ்ரேலிய படையினரால் சுமார் 150 பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மறுபுறம் இந்தக் காலப் பகுதியில் இஸ்ரேலிய தரப்பில் 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் மிக இளம் வயதானவராக தமிமி உள்ளார்.

## புது இடஞ்சார்ந்த கணினியை அறிமுகம் செய்தது ஆப்பிள்



ஆப்பிள் நிறுவனம் 'விஷன் ப்ரோ' என்ற அதன் புதிய கருவியை அறிமுகம் செய்துள்ளது.

இடஞ்சார்ந்த கணினி எனக் கருதப்படும் அதன் விலை 3,499 அமெரிக்க டொலர்களாகும். அது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் விற்பனைக்கு வரும்.

கலிபோர்னியா மாநிலத்தில் நடைபெற்ற அப்பிள் நிகழ்ச்சியில் அது அறிமுகம் செய்யப்பட்டது.

மெய்நிகர், உண்மையான சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் கலந்து கண்முன் கொண்டுவரும் கருவி அது வென்று கூறப்பட்டது.

வீடியோ விளையாட்டு, வீடியோ ஒளிபரப்பு, மாநாடு ஒளிபரப்பு ஆகியவற்றில் அது கவனம் செலுத்தும்.

பல ஆண்டுகளாக தயாரிப்பில் இருந்த அந்தக் கருவியில் 12 கெமராக்கள், 2 கண்களுக்கும் 2 திரைகள், ஒரு கணினி ஆகியவை உள்ளன. அதை மின்கலத்துடன் இணைத்தே பயன்படுத்த முடியும். அந்த மின்கலத்துடன் சுமார் 2 மணிநேரம் பயன்படுத்தலாம்.

## உலகின் பழமையான இடுகாடு கண்டுபிடிப்பு



சிக்கலான நடத்தைக்கு தகுதியற்றது என முன்னர் அறியப்பட்ட மனிதர்களின் தொலைதூர உறவான சிறு மூளையுடைய ஹோமோ நலேடிக்களின் எச்சங்களைக் கொண்ட உலகின் மிகப் பழமையானது என நம்பப்படும் இடுகாடு ஒன்று தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜொஹன்னஸ்பேர்க்கிற்கு அருகில் இருக்கும் உலக மரபுரிமை சொத்து ஒன்றான குகை அமைப்பில் சுமார் 30 மீற்றர் (100 அடி) நிலத்தடியில் மரம் ஏறும் கற்கால மனித இனக் குடும்பத்தைச் சேர்ந்தவற்றின் உடல் எச்சங்கள் இருந்துள்ளன. புகழ்பெற்ற மானுடவியலாளரான லீ பெர்கர் தலைமையிலான ஆராய்ச்சியாளர்களே இதனை கண்டுபிடித்துள்ளனர்.

இதற்கு முன்னர் சுமார் 100,000 ஆண்டுகளுக்கு முன்னதாக மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் கண்டிக்கப்பட்ட ஹோமோ சேபியன்களின் எச்சங்களை கொண்ட இடுகாடுகளே மிகப் பழமையானவை என்று நம்பப்பட்டது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இடுகாடு கி.மு 200,000 ஆண்டுகள் பழமையானதாகும்.

## ஹெய்ட்டி வெள்ளம்; 42 பேர் உயிரிழப்பு



ஹெய்ட்டியில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 42 ஆக அதிகரித்துள்ளது. 85க்கும் அதிகமானோர் காயமடைந்ததோடு 11 பேரைக் காணவில்லை. இதில் சுமார் 14,000 பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

வார இறுதியில் பெய்த கனத்த மழை வெள்ளத்தைக் கொண்டுவந்தது. ஆறுகள் கரைபுரண்டோடின. அதனால் மண்சரிவுகளும் ஏற்பட்டன.

வெள்ளம் வீதிகளுக்குள் புகுந்து வீடுகளைச் சேதப்படுத்தியது. வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. வானிலை மேம்பட்டுள்ளதால் அங்கு துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிகாரிகள் சேதத்தை மதிப்பிட ஆரம்பித்துள்ளனர். வீடுகளை இழந்தோர் தற்காலிகத் தங்குமிடங்களைத் தேட முயல்கின்றனர்.

இந்நிலையில் ஹெய்ட்டியில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக உலக உணவு அமைப்பு எச்சரித்துள்ளது.

## உக்ரைனின் பிரதான அணை வெடித்து பாரிய வெள்ள அபாயம்

### ரஷ்யா, உக்ரைன் பரஸ்பரம் குற்றச்சாட்டு



தெற்கு உக்ரைனில் பரவலாக வெள்ளத்தை ஏற்படுத்தி இருக்கும் அணை ஒன்று தகர்க்கப்பட்டது தொடர்பில் ரஷ்யா மற்றும் உக்ரைன் பரஸ்பரம் குற்றம் சாட்டியுள்ளன.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் கெர்சோன் பிராந்தியத்தில் உள்ள சோவியட் காலத்து நோவா அணையை ரஷ்ய படை குண்டு வைத்துத் தகர்த்ததாக உக்ரைனிய இராணுவத்தின் தெற்கு கட்டளையகம் தெரிவித்துள்ளது.

அணையை சுற்றி வெடிப்புகள் இடம்பெறுவது மற்றும் அதன் வழி நீர் பாய்ந்து செல்வதை காட்டும் உறுதி செய்யப்படாத வீடியோக்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன. 30 மீற்றர் உயரம் மற்றும் 3.2 கி.மீ நீளம் கொண்ட இந்த அணை டினிப்ரோ நதியில் 1956 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இங்கிருந்து 2014 ஆம் ஆண்டு ரஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்த கிரிமியா பிராந்தியம் மற்றும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் சபோரிசியா அணு உலைக்கு நீர் விநியோகிக்கப்படுகிறது.

"நீரின் வேகம் மற்றும் அளவு அதன் அழிவின் அளவை காண்பிப்பதோடு நீரில் மூழ்கக் கூடிய பகுதிகளை காட்டுவதாகவும் உள்ளது" என்று உக்ரைன் இராணுவம் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

மறுபுறம் ஷெல் குண்டு தாக்குதலின்போதே இந்த அணை சேதமடைந்ததாக ரஷ்ய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இது பயங்கரவாதச் செயல் என்று ரஷ்ய கட்டுப்பாட்டு நகர மேயர் நவொக் கஹவ்கா குற்றம்சாட்டினார். உக்ரைனிய தாக்குதல்களுக்கு ரஷ்யா பயங்கரவாதம் என்றே கூறி வருகிறது.

அணையை சுற்றியுள்ளவர்களை வெளியேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட அந்தப் பிராந்தியத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஐந்து மணி நேரத்தில் நீர் மட்டம் ஆபத்தான நிலையை எட்டும் என்று நேற்று (06) எச்சரிக்கப்பட்டிருந்தது.

## ஆயுததாரிகளால் 30 பேர் கொலை



வடக்கு நைஜீரியாவில் ஆறு கிராமங்கள் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனங்களுக்கு இடையிலான வன்முறைகள் அதிகரித்திருக்கும் நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. புதிதாக பதவி ஏற்றிருக்கும் நைஜீரிய ஜனாதிபதி இந்த வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார். எனினும் கொள்ளைக்காரர்களுக்கு பாதுகாப்புப் பணத்தை செலுத்த தவறியதற்கு பழிதீர்க்கவே தாக்குதல் நடத்தப்பட்டதாக இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதியில் கால்நடை மேய்ப்பாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 7ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.